டால்ஸ்டாய் கடிதங்கள்

மு. இராசமாணிக்கம், எம். ஏ., எம். லிட்.

தொல்காப்பியர் நூலகம்
202, ஜானிஜான் தெரு,
சென்னை-14.

முதற் பதிப்பு — 1961.

வெளியீடு—2
விலை ரூ. 1—50

அச்சிட்டோர்:
முத்தையா அச்சகம்,
202, ஜானி ஜான் தெரு,
சென்னை—14

முன்னுரை

ரஷ்ய நாடு உலகுக்கு அளித்த மேதைகளில் டால்ஸ்டாய் குறிப்பிடத் தக்க சிறப்புடையவர். அவருடைய போக்கும் எண்ணங்களும் நம் இலக்கிய பாரம்பரியத்திற்கும் நம் நாட்டின் சிந்தனை வளர்ச்சிக்கும் ஏற்ற முறையில் உருவாகி வளர்ந்துள்ளன.

இந்நூலில் வரும் கடிதங்களைப் படிக்கும் போது உயர்ந்த அறிஞர் ஒருவரின் உள்ளமும் ஒரு சாதாரண மனிதனின் உள்ளம் போலத்தான் அலைமோதுகிறது என்பதைப் பார்க்கிறோம்.

இந்நூலாசிரியர் திரு. மு. இராசமாணிக்கம் இக் கடிதங்களை எளிய தமிழில் இனிது விளங்குமாறு மொழி பெயர்த்துக் கொடுத்திருப்பதுடன் டால்ஸ்டாயைப் பற்றிய குணசித்திரம் ஒன்றையும் வரைந்துதவியுள்ளார் இவர் அண்ணாமலைப் பல்கலைக்கழகத்தில் மெய்ப்பொருளியல் (Philosophy) துறையில் அரசியலார் உதவி பெற்று ஆராய்ச்சியாளராகப் பணியாற்றி வருகிறார்.

அவருக்கு எங்கள் நன்றி.

தொல்காப்பியர் நூலகத்தார்.

இந்நூலாசிரியரின் அடுத்த நூல்

அடிமனத்தை ஆராய்ந்த அறிஞர்

இந்நூல் சிக்மன் பிராய்டு – Sigmund Freud — அவர்களின் வாழ்க்கையையும் கொள்கையையும் விளக்கி விமரிசனம் செய்கிறது.

டால்ஸ்டாய் எப்படிப்பட்டவர்?

லியோ டால்ஸ்டாய் உலகப் புகழ்பெற்ற இலக்கியமேதை. அவர் பத்தொன்பதாம் நூற்ருண்டின் இலக்கியச் செல்வம். உலகத்தின் கவனத்தைக் கவர்ந்த ரஷ்ய நாட்டுப் பேஞ வீரர்கள் பலர். அவர்களில் முக்கியமானவர்கள் கார்க்கியும், டால்ஸ்டாயுமாவர். இருவரும் ஒரே காலத்தில் வாழ்ந்திருக்கின்றனர். ரஷ்யா நாடு முன்னேற வேண்டுமென்ற பொதுக் கொள்கையில் இருவரும் ஒன்றுபட்டவர்கள். இருவரும் மார்க்ஸியத் தத்துவத்தை ஏற்றுப் பணிபுரிந்தவர்கள்தான். ஆனல் மாறுபட்ட கொள்கையினர். கார்க்கிக்குக் கடவுள் நம்பிக்கை கிடையாது. டால்ஸ்டாய்க்குக் கடவுள் நம்பிக்கையுண்டு. ஆனல் மக்களிடம் மண்டிக்கிடந்த ஆபாசக்கடவுள் கோட்பாடுகளே அடியோடு வெறுத்தார்.

நடைமுறை வாழ்க்கையில் நகர்ந்து செல்கின்ற அன்ருட நிகழ்ச்சிகளே முறையாக அடுக்கி அழியாத இலக்கியமாக உருவாக்குவதில் டால்ஸ்டாய்க்கு ஈடு டால்ஸ்டாய்தான். சாதாரண உறுப்பினர்களேக்கொண்டே உள்ளத்தை உருக்கும் உயர்ந்த இலக்கியத்தை உருவாக்கியவர் டால்ஸ்டாய். ஏழைப்பாட்டாளி மக்களுடைய வாழ்க்கை முறைகளேச் சித்தரித்தால் தங்கள் கற்பனைக்குக் களங்கம் ஏற்பட்டு இலக்கியத்தின் தரமே

குறைந்துவிடும் என்று கருதிப் பாட்டாளிகளைப் புறக்கணித்து, பணக்காரர்களையும், படித்தவர்களையும், கல்லூரி மாணவர்களை யும், மாணவிகளையும் தேடிச்சென்று, ஆபாசமான காதல் விளை யாட்டுக்களைச் சித்தரித்துக் காட்டுவதுதான் சிறந்த இலக்கியம் என்று நினைக்கின்ற இலக்கிய கருத்தாக்களைப் போலன்றி, நாடோடிகள் முதல் நாகரிகமிக்கவர் வரை எல்லா வகையின ரையும் எல்லாத் தரத்தினரையும் அவருடைய இலக்கியத்தில் உருவாக்கிக் காட்டினர். ஆங்கில நாடகக் கவிஞன் ஷேக்ஸ் பியர் தொட்ட உறுப்பினர்கள் எல்லாம் உயிர்க்களை பெற்று விளங்கினர்கள். அதுபோல, டால்ஸ்டாயின் கண்களில் பட்டவர் களெல்லாம், அவரது கதைகளில், வாசகர்களின் உள்ளத்தில் நீங்கா இடம் பெறும் வலிமை பெற்று விளங்கினர். பல தடவை நினைத்துப் பார்த்து இன்புறத்தக்க எழில் நயம் எந்த இடத்திலும் காணப்படும்.

டால்ஸ்டாய் சிறந்த சிறுகதையாசிரியர், நாவலாசிரியர், நாடகாசிரியர், சிறந்த தத்துவஞானி. பெரிய பெரிய தத்து வங்களை யெல்லாம் எளிய முறையில் சிறுகதைகளில் தெளி வாக்குவதில் டால்ஸ்டாய் இணையற்றவர். இதை அவரது ஒவ்வொரு எழுத்தோவியத்திலும் காணலாம்.

டால்ஸ்டாய் ரஷ்ய ராணுவத்தில் உயர்ந்த உத்தியோகம் வகித்து வந்தார். அதைவிட்டு வெளியேறி இலக்கியப்பணியில் ஈடுபட்டுக்கொண்டே ஐரோப்பிய நாடுகளில் சுற்றுப்பிரயாணம் செய்து அனுபவ அறிவு நிறையப்பெற்றார்.

இங்கு தொடருகின்ற காதற்கடிதங்கள், டால்ஸ்டாய் தன் காதலி வலீரியா வலாடி மிரோவ்னு என்ற கன்னி ஒருத்திக்கு 1856லும் 1857லும் எழுதியவைகளாகும். கிரிமியாவிலிருந்து திரும்பியபோது வழியில் வலீரியாவைச் சந்தித்தார். இருவரும் காதல் கொண்டனர். அவள் டால்ஸ்டாயின் அண்டைவீட்டுக் காரிதான். அவளையே திருமணம் செய்து கொள்வதாகவும் நிச்சயம் செய்யப்பட்டது. இவை கற்பனைக் கடிதங்களல்ல.

டால்ஸ்டாய், தன் காதலிக்கு உண்மையாகவே எழுதிய கடிதங்களாகும்.

இரண்டாம் அலெக்சாண்டருக்கு நடைபெற்ற முடிசூட்டு விழாவைக் காண வலீரியா மாஸ்கோவுக்குச் செல்கின்ருள். அங்கு மார்டையர் என்ற இசைக்கலைஞன் ஒருவன்மீது அவள் காதல் கொண்டு விட்டதாக அறிந்து உள்ளமுடைந்து போய் தாபத்துடனும், நையாண்டியுடனும் அவளுக்குக் கடிதங்கள் பல தீட்டுகிருர். அவர்கள் எழுதிக்கொண்ட காதல் கடிதங்கள் நம்நாட்டு இளம் காதலர்கள் எழுதிக்கொள்கின்ற கடிதங்களைப் போன்றதல்ல. அவைகள் சிறந்த தத்துவங்களாகவும், அறிவுரைகளாகவும் விளங்குகின்றன. சில இடங்களில் டால்ஸ்டாய் எழுதுகின்ற முறையைப் பார்த்தால் வலீரியா அவருக்குக் 'காதல் துரோகம்' செய்துவிட்டாள் என்று தோன்றுகிறது. உள்ளபடியே திருமணம் நிச்சயமெல்லாம் செய்திருந்தும் கடைசியில், வலீரியா அவரை ஏமாற்றியே விடுகின்ருள் டால்ஸ்டாய் வேருெரு பெண்ணைத் திருமணம் செய்துகொள்கின்ருர்.

ஒவ்வொருவரும் ஒவ்வொரு நாளும் தவருமல் உழைக்க வேண்டுமென்ற கொள்கையுடையவர். இதையேதான் தன் காதலிக்கு எழுதிய கடிதங்களிலும் வலியுறுத்திக் கூறுகின்ருர். உண்மையையும், நேர்மையையும் உயிரைவிட மேன்மையாகக் கருதுகின்ருர்.

மெல்லிய உதடுகளையும் அழகிய கைகளையும் முத்தமிடுவதிலும் இணைவிழைச்சிலும் இன்பம் உண்டு என்பதில் டால்ஸ்டாய் நம்பிக்கையற்றவர். உள்ளத்தில் உணருகின்ற உணர்வு ஒன்றே சிறந்த இன்பம். தன்னை உள்ளன்போடு காதலிக்கின்ற ஒருத்தியைப் பார்ப்பதிலும், அவளோடு பேசுவதிலுந்தான் சிறந்த இன்பமிருக்கிறது என்று அவர் கூறுகிருர்.

ஒரு பெண் அழகி என்று பலர் கூறினலும் சரி, பலர் அவளைப் பார்ப்பதின் மூலம் அவள் அப்படிப் புரிந்துகொண்டா

லும் சரி, உடனே அவளுக்குத் தான் அழகி என்கிற செருக்கு ஏறிவிடுகின்றது. பிறகு யாரையும் உள்ளன்போடு காதலிக்காது உதாசீனம் செய்து, தன் வாழ்க்கையின் இன்பத்தையே கெடுத்துக்கொள்கின்ருள். செல்வம், சிறப்பு, படாடோபம், பலர் பெருமையாகத் தன்னைப் பற்றிப் பேசுவது ஆகியவைகளில் பெண்களுக்கு அதிக மோகம். இதற்காகத் தன்னைக் காதலிக்கின்ற காதலனைச் சித்திரவதை செய்து கொலை செய்யவும் அவர்கள் தயங்குவது கிடையாது. உண்மையாகக் காதலிக்கின்ற ஒருவனின் உள்ளத்தையும், அதன் ஆற்றலையும், அவர்கள் அறிய விரும்புவதே இல்லை. அழகும், செல்வமும் பெற்றுள்ள பெண்கள் பலரைக் காதலிக்கவும் தயங்குவதில்லை. அவர்களுடைய செய்கைகளுக்குக் கல்வியையும் ஒரு கருவியாகப் பயன்படுத்திக் கொள்கின்ருர்கள் என்று டால்ஸ்டாய் கூறுகிருர். அவருடைய கூற்று எவ்வளவு தூரம் வாழ்க்கையில் உண்மை என்று ஒவ்வொருவரும் அனுபவ வாயிலாக அறியலாம்.

டால்ஸ்டாய் ஒரு விசித்திர மனிதர். வாழ்க்கை வரலாறுகளெல்லாம் பெரும்பாலும் ஒருவருடைய நற்செயல்களைப் பற்றியும் புகழைப் பற்றியுமே இருக்கக் காண்கிருேம். வரலாறு எழுதும் ஆசிரியர்களும் ஒருவடைய நற்பண்புகளை மட்டுமே எழுதி வருகின்றனர். இதை டால்ஸ்டாயும் அறிவார்.எனவே தன் வாழ்க்கை வரலாற்றை எழுதிய பர்யூகாவிடம் டால்ஸ்டாய் எச்சரித்திருந்தார். டால்ஸ்டாய் தன்னுடைய குறிப்பேட்டில் எதையும் விட்டுவிடவில்லை. அவருடைய வாழ்க்கையில் நடைபெற்ற எல்லா நிகழ்ச்சிகளையும், தன் எண்ணங்களையும் எழுதி வைத்தார். தன்னுடைய குறிப்பேட்டில் உண்மைகளை யெல்லாம் எழுதிவைத்ததன் காரணமாகத் தன் மனைவியிடம் பல ஆண்டுகளாகச் சண்டை போட்டுக்கொண்டிருக்க வேண்டியதாயிற்று. குறிப்பேட்டை மனைவிக்குக் காட்டியதால் இருவரிடையேயும் உண்டான சந்தேகத்துக்கு அளவேயில்லை.

திருமணத்திற்கு முன்பு டால்ஸ்டாய் மிகக்கேவலமான

வாழ்க்கை நடத்தி வந்தார். அதை நினைக்க அவருக்கே மிக அருவருப்பாக இருந்தது. 'வாழ்க்கையைப் பற்றிப் பெருங் கனவு கொண்டிருக்கின்ற நானு இத்தகைய வாழ்க்கை நடத்தினேன்? இதைப் பார்க்கின்றபோது நான் வருந்திப்பெற்ற புகழுக்குமல்லவா இழுக்கு ஏற்படப்போகின்றது? கற்பனை உலகத்தில் வாழ்ந்து கொண்டிருக்கும் நான் எதையோ எழுத வேண்டியதற்கு எதையோ மறந்து எழுதிவிட்டேனு? எப்படியிருந்தாலும் நான் என் குறிப்பேட்டில் எழுதியது உண்மையாகத்தானிருக்க வேண்டும்! நன்மைகளைப் பற்றிப் பெருமைப் படுகின்ற நான் தீமைகளைப் பற்றி மட்டும் வருந்துவானேன். தாங்கள் செய்த நன்மைகளை வெளிப்படுத்திப் புகழ் சம்பாதிக்கின்ற மக்கள் தாங்கள் செய்த தீமைகளை வெளிப்படுத்தி இகழ் தேடிக்கொள்ள விரும்புவதில்லை!இந்த விஷயத்தில் நான் ஒரு தனிப்பட்ட மனிதனுகவே இருக்க விரும்புகின்றேன். என் வரலாற்றைப் படிக்கின்றவர்கள் என்னைப் புகழ்ந்தாலும் சரி! இகழ்ந்தாலும் சரி! நான் என் கொள்கையைவிட்டுக் கொடுக்கப்போவதில்லை!' என்று கருதினுர். அதையே பர்யூகாவிடம் கூறினுர். "அருமை பர்யூகா! நீங்கள் என் வாழ்க்கை வரலாற்றில் நன்மைகளைப் பற்றி மட்டும் எழுதிவிட்டுத் தீமைகளை விட்டுவிடாதீர்கள்; இரண்டையும் நான் சமமாக விரும்புகிறேன். நான் செய்த தீமைகள், ஒழுக்கக்கேடுகள், விபச்சாரம் ஆகிய அனைத்தையும் எழுதுங்கள். நான் பெற்ற புகழ்களில் எதையேனும் மறந்துவிட்டாலும் நான் தவறி நடந்தவைகளில் எதையும் விட்டுவிடாதீர்கள். உங்களிடம் நான் கேட்டுக் கொள்வதெல்லாம் இதுதான்!"என்று பர்யூகாவை வற்புறுத்தி எழுதச் சொன்னுர். இவையெல்லாம் டால்ஸ்டாயின் மேன்மைகளையே காட்டுகின்றன.

சோவியத் ரஷ்யாவின் மக்கள் புரட்சி எழுத்தாளன் மாக்சிம் கார்க்கி பிறந்த ஊருக்குப் பயணம் போகின்ருர்கள். கார்க்கியைக் கடவுளுக்கு நிகராக வைத்து வணங்குகிருர்கள். அப்படிப் புகழ்பெற்ற கார்க்கி டால்ஸ்டாயைப் பற்றிக் கூறும்போது, "அவருடைய எழுத்தின் முன் நான் ஒரு குழந்தை போன்ற

வன்!'' என்கிருர். இப்படிப்பட்ட மேதையின் வாழ்க்கைக் குறிப்புகளும், நிகழ்ச்சிகளும் எவ்வளவு சுவை நிறைந்திருக்கின்றன என்று பாருங்கள்.

பத்தொன்பதாம் நூற்ருண்டில் ஐரோப்பிய இலக்கியத்தில் குறிப்பிடத்தக்க மாறுதல் என்னவெனில், ரஷ்யா எழுத்தாளர்களின் சக்தியும் முக்கியத்துவமும் தோன்றியமைதான் என்று சந்தேகமில்லாமல் கூறலாம். மேற்கு ஐரோப்பாவில் ரஷ்ய இலக்கியத்தைப் பற்றி ஒன்றுமே தெரியாத காலம் ஒன்றிருந்தது. பெரிய பெரிய இலக்கிய மேதைகளெல்லாம்கூட அதைப்பற்றி அசட்டையாக இருந்துவிட்டனர். மிகப்பிந்திய காலத்திற்குச் செல்ல வேண்டியதில்லை. சுமார் எண்பது ஆண்டுகளுக்கு முன்புதான் இந்நிலை இருந்து வந்தது. படித்தவர்கள்கூட அனுபவ வாயிலாக ஒன்றுமே தெரியாதிருந்தனர். பெரும்பாலான மக்களுக்கு அதனுடைய வாழ்க்கையைப் பற்றிச் சந்தேகமாகவே இருந்தது.

கார்லைல் போன்ற மிகப்பெரிய இலக்கிய மேதைகள் இலக்கிய சாதனைகளில் நாட்டு மக்களின் கவனத்தை வேறு வழிகளில் திருப்பிவிட்டனர்.

முப்பது ஆண்டுகள் ஆவதற்குள் ஐரோப்பாவில் ரஷ்ய இலக்கியம் அறிமுகம் செய்யப்பட்டு மிக வலிமை பெற்றுவிட்டது. அதனுடைய முக்கியத்துவம் நாளுக்குநாள் வளர்ந்து வருகின்றது என்று கார்லைல் எடுத்துக்காட்டினுர்.

பிரான்ஸ், ஜெர்மனி, ஸ்கேன்டினேவியா, இங்கிலாந்து போன்ற நாடுகளில் ரஷ்ய இலக்கியத்தின் செல்வாக்கு மிக வளரத்தொடங்கிற்று. மேற்கு ஐரோப்பாவில் மறுமலர்ச்சி தோன்றிய காலத்தில் இலக்கிய வளர்ச்சி எவ்வளவு வேகமாக முன்னேறிற்ருே அதுபோல் ரஷ்யாவிலும் இலக்கியம் மிக வேகமாக வளரத்தொடங்கிய உண்மையை ஐரோப்பிய இலக்கிய வரலாற்றில் நாம் காணுமலிருக்க முடியாது.

கி. பி. பதினைந்து, பதினாறும் நூற்றாண்டுகளில் ஐரோப்பிய இலக்கியம் முழுவதுமே கிரேக்க, ரோம இலக்கியங்களால் உயிர்ப்பிக்கப்பட்டன. ஆனால் அதேசமயத்தில் உயிர்ப்பிக்கப் பட்ட இலக்கியங்களின் நோக்கம், கொள்கை, கூறும்முறை முதலியவைகளெல்லாம் உயிர்ப்பித்த இலக்கிய உலகத்தி லிருந்து முற்றிலும் மாறுபட்டிருக்கக் காண்கிறோம்.

பத்தொன்பதாம் நூற்றாண்டின் பிற்பகுதியில் ஐரோப்பிய இலக்கியத்தில் தலையாய அமைப்பு முறை என்னவென்றால் மனோதத்துவத்தை அடிப்படையாய்க்கொண்டு எழுந்த நாவல் கள்தான். வாழ்க்கை வரலாற்றை மட்டும் நேரடியாகக் கூறிச் சென்ற முறையில் ஒழுக்கத்தை வலியுறுத்திக் கூறமுடியாமை யைக் கண்ட இலக்கியமேதைகள் அதன் அடிப்படை முறையில் ஒரு சிறந்த மாற்றம் செய்தனர். தவிர, பத்தொன்பதாம் நூற் றாண்டின் பிற்பகுதியில் ஐரோப்பிய இலக்கியத்தில் புகழ்பெற்ற வர்களில் பலர் தத்துவஞானிகளாகவும் சிறந்த சிந்தனையாளர் களாகவுமிருந்தனர். எனவே அவர்கள் எழுதிய நாவல்கள் பெரும்பாலும் மனோதத்துவ நாவல்களாக அமைந்தன. ரஷ்ய எழுத்தாளர்களும் இம்முறையைப் பின்பற்றி எழுதத்தொடங்கி மிகக்குறைந்த காலத்துக்குள் இலக்கியத்தின் போக்கை முற்றி லும் மாற்றிக்காட்டி, அதிலும் வெற்றி பெற்றனர். தத்துவ அடிப்படையில் வெவ்வேறு நோக்கம்கொண்ட நாவல்களை உற்பத்தி செய்தனர்.

ரஷ்ய எழுத்தாளர்களை நாம் ஐரோப்பாவில் மற்ற எந் நாட்டினரோடும் ஒப்பிட்டுப் பார்க்க முடியாது. அவர்கள் மிகவும் வெள்ளையுள்ளம் கொண்டவர்கள். அவர்கள் தங்கள் நாட்டினரோடு பழகினாலும் சரி, வேற்று நாட்டினரோடு பழகி னாலும் சரி ஒரேவிதமான தூய்மை யுள்ளம் கொண்டே பழகு கின்றனர். அவர்கள், என்ன உண்மையோ, அதைத்தான் பேசுகிறார்கள். குழந்தையுள்ளம் கொண்டவர்கள். நேர்மை யான இந்தப் பண்புகளை எல்லா ரஷ்ய எழுத்தாளர்களிடமும் காணலாம். டால்ஸ்டாய், டோஸ்டோவிஸ்கி போன்றவர்கள்

எதையும் மறைத்தவர்களல்லர் தங்கள் சொந்த அறிவால் உணர்ந்ததையும் அறிந்ததையும் அப்படியே எழுதினர்கள்.

உண்மையான பெரிய இலக்கியத்துக்கு இந்த ஆழ்ந்த உண்மைகளெல்லாம் மிகவும் முக்கியம் என்று நாமும் உணருகின்றோம். ஆனல் எவ்வழியிலேனும் சிறிதுகூட அனுஷ்டானத்தில் காட்டியதில்லை. ரஷ்ய எழுத்தாளர்களைப் பெரிதும் ஊக்குவித்த மற்ருெரு பெரிய பண்பு என்னவென்ருல் இணையில்லாது அவர்களுக்கு அருளப்பட்டிருந்த கருணையுள்ளந்தான்.

இலத்தீன் இலக்கியத்தையும் கிரேக்க இலக்கியத்தையும் ஒப்பிட்டுப்பார்க்கும்போது அன்பு, ஆழம் இரண்டிலும் இலத்தீன் இலக்கியம் குறைபாடுள்ளதாகவே காணப்படுகின்றது. ஆனல் ரோமேனியர் இந்த வழியில் துன்புற்றதில்லை. அவர்கள் மனித ஆத்மாவின் இரகசியங்களைக் குறைவாகவே அறிந்திருந்தார்கள்.

ஹோமருடைய இலக்கியங்களை நன்கு படித்து, டால்ஸ்டாய் அதையே பின்பற்றினர் என்று டால்ஸ்டாயின் 'போரும் அமைதியும்' என்ற நூலைப் படித்தவர்கள் கூறுகின்ருர்கள். பல்வேறுபட்ட மாறுபாடுகள் இருப்பதோடு குறிப்பிடத்தக்க ஒற்றுமைகள் கடினமாகவே காணப்படுகின்றன. அதனல் டால்ஸ்டாய் முழுக்க முழுக்க ஹோமரையே பின்பற்றினர் என்று கூறுவதற்கில்லை. ரஷ்ய மக்களின் உள்ளத்தைப் பிரதிபலிக்கும் 'போரும் அமைதியும்' ஹோமரைப் பின்பற்றியது என்று கூறமுடியாது. ஆனல் அமைப்பு முறை மட்டும் ஹோமரைப் பின்பற்றியதாக இருக்கலாம்.

ரஷ்ய இலக்கியம் ரஷ்ய மக்களுக்குச் செய்த தொண்டு மிகப்பெரியது. வேறு எந்த நாட்டு இலக்கியமும் செய்யமுடியாத மாபெரும் செயலைச் செய்த பெருமை ரஷ்ய இலக்கியத்தையே சாரும். பிரான்ஸ் நாட்டில் வால்டேரும், ரூஸோவும் செய்த இலக்கியப் புரட்சி முழுப்பலனையும் அடைந்தது ரஷ்ய

நாட்டில்தான். இருபதாம் நூற்றாண்டின் முதற்பகுதியில் ரஷ்ய நாட்டில் தொடங்கிய மாபெரும் புரட்சி கொடுங்கோன்மையை ஒழித்துப் பொதுவுடமை ஆட்சியை நிலைநாட்டிய பிறகே பத்தொன்பதாம் நூற்றாண்டின் இறுதியிலும், இருபதாம் நூற்றாண்டின் தொடக்கத்திலும் ரஷ்ய நாட்டில் எழுந்த இலக்கியத்தின் வலிமையை மேற்கு ஐரோப்பிய நாட்டினர் நன்கு உணர முடிந்தது. ரஷ்யாவில் எழுந்த புரட்சியைக் கண்டு மேற்கு ஐரோப்பாவின் முடியரசுகளெல்லாம் கலக்கம் கொள்ளும் நிலையை ஏற்படுத்திய பெருமை ரஷ்ய இலக்கியத்தையே சாரும். பதினைந்து பதினாறும் நூற்றாண்டுகளில் ஐரோப்பாவில் புகைந்துகொண்டிருந்த மதப்புரட்சிக்கு ரஷ்யாவில் நல்லதொரு முடிவு செய்யப்பட்டது.

ரஷ்யாவில் புரட்சிக்கு முன்பே ஏற்பட்ட நிலச்சீர்திருத்தத்தில் டால்ஸ்டாய்க்கு மிகப்பெரிய பங்குண்டு. டால்ஸ்டாயை யாருடைய இடத்திலும் வைத்து மதிப்பிடுதல் முடியாது. ஷேக்ஸ்பியர்போல் டால்ஸ்டாய் ரஷ்ய இலக்கியத்தின் சிகரத்தில் நிற்கின்றார்.

டால்ஸ்டாயின் சந்ததியரான முதலாம் கவுண்ட் பீட்டர் டால்ஸ்டாய் புகழ்பெற்ற பீட்டரின் மகனாக அலெக்சிஸின் கொலையில் சம்பந்தப்பட்டிருந்தான். அவன் இரகசிய இலாகாவின் தலைவனாக இருந்து முதலாம் காதரையினின் நன்மதிப்பைப் பெற்றிருந்தான். கொலை செய்யப்பட்ட அலெக்சிஸின் மகனான இரண்டாம் பீட்டர் பட்டத்துக்கு வந்தவுடன் கவுண்ட் டால்ஸ்டாய் அரசாங்கத்தில் தன்னுடைய உயர்ந்த பதவியை இழக்க வேண்டியதாயிற்று. தவிர, வயதாகிவிட்டதால் வெண் கடலிலுள்ள சொலோவெட்ஸ்கிக்குச் சென்று அங்கே இறந்துவிட்டார். டால்ஸ்டாயின் குடும்பம் கொஞ்ச காலத்துக்குப் பட்டத்தை இழக்க நேரிட்டது. ஆனால் பெரிய பீட்டரின் மகள் எலிஸபெத் பட்டத்துக்கு வந்ததும் டால்ஸ்டாயின் குடும்பத்துக்குப் பழைய கௌரவம் திருப்பிக்கொடுக்கப்பட்டது.

1813-14-ஆம் ஆண்டுகளில் நடைபெற்ற பெரும் போரில் டால்ஸ்டாயின் தந்தை நிக்கோலஸ் பெரிதும் ஈடுபட்டிருந்தார். அதுசமயம் அவர் பிரெஞ்சுக்காரர்களால் சிறை பிடிக்கப் பட்டார். பிறகு நேச ராணுவத்தினர் பாரிஸ் நகரில் நுழைந்ததும் 1815-ல் விடுதலை செய்யப்பட்டார். டால்ஸ்டாய் தன்னுடைய 'போரும் அமைதியும்' என்ற நாவலில் தன்னுடைய இந்த உறவினர்களையும், குடும்ப நிகழ்ச்சிகளையும் தெளிவாகக் குறிப்பிட்டுள்ளார்.

தான் எழுதிய சில நாவல்களில் தன்னுடைய சந்ததியார்களின் பெயர்களையே பயன்படுத்திச் சிறிதும் பெரிதுமாக சில மாற்றம் செய்து அவர்களுடைய உண்மை வாழ்க்கைகளையே சித்தரித்துக் காட்டினுர்.

இவர் காக்கேசியாவுக்குச் சென்று சில காலம் வாழ்ந்தார். தான் காக்கேசியாவில் வாழ்ந்த வாழ்க்கையின் உண்மைகள் முழுவதையும் காசாக்ஸ், ஆக்ரமிப்பாளர்கள் என்ற இரு நாவல்களில் தெளிவுபடுத்தியுள்ளார். இவர்களுடைய வாழ்க்கையோடு தன்னுடைய வாழ்க்கையையும் தொடர்புபடுத்திக் காதல் வீரம் ஆகியவைகளைச் சுவைபடத் தீட்டியுள்ளார்.

நாவல் என்பது மனிதர்கள் உண்பது, உடுப்பது, உறங்குவதுபோன்ற வெறும் வாழ்க்கை நிகழ்ச்சிகளை மட்டும் எழுதிக் கொண்டு போவதன்று. உணர்ச்சி, துடிப்பு, எண்ணம், இலட்சியம்,கொள்கை, செயல் முதலியவைகளைச்சுவைகுன்ருது பலருக்கும் புரியும்படியாக அமைத்துக் காட்டுவதுதான் நாவல் என்று டால்ஸ்டாய் கருதுகின்ருர். தன்னுடைய இக்கருத்தை எல்லா நாவல்களிலும் டால்ஸ்டாய் பிரதிபலித்துக் காட்டி வெற்றி கண்டுள்ளார். அவருடைய நாவல்களின் வெற்றிக்கு அவருடைய தத்துவப்புலமைபெரிதும் துணைபுரிந்திருக்கின்றது.

நிகாலஸ் இலிச் என்ற கோமகனுக்கும் மேரி என்ற சீமாட்டிக்கும் 1828-ஆம் ஆண்டு ஆகஸ்டு மாதம் 28-ந்தேதி ரஷ்யாவில் கீவ் செல்லும் பாதையில் உள்ள டுலாவுக்கருகில் பிறந்த

வர்தான் டால்ஸ்டாய். டால்ஸ்டாயின் குடும்பம் ரஷ்யாவி லுள்ள பிரபுக்கள் சமூகத்தில் முக்கிய அங்கம் பெற்றது. டால்ஸ்டாயின் தந்தை நிகாலஸ் இலிச் அழகுநிறைந்த இளைஞ ஞக விளங்கிய காலத்தில் அவருக்கு மனைவியாகப்போகும் இளவரசி மேரி கன்னிப்பெண்ணுக இருந்தாள். தவிர, அரசி யின் அந்தஸ்துக்கேற்ற அழகு அவளிடமில்லை. யாருமே அவளை மணக்க வரமாட்டார்கள் என்று மாஸ்கோ வட்டாரத் தில் ஒரு வதந்தி உலவி வந்தது. நிகாலஸ் இலிச்சின் செவிக் கும் இச்செய்தி எட்டியது. 'இவ்வளவு ஆணழகனுகவுள்ள நான் – அழகற்ற குருபியான மேரி இளவரசியாக இருந்தா லும் மணக்கவா போகிறேன்? ரஷ்ய நாட்டிலேயே சிறந்த அழகுத் தேவதையே வந்து என் காலை முத்தமிட வேண்டும்! என்று இலிச் இளவரசி மேரியை நிராகரித்து விட்டார்.

இலிச்சின் தந்தை தன் வீட்டில் எர்கால்ஸ்கி என்ற ஒரு அனுதைப் பெண்ணை வளர்த்து வந்தார். அவள் பருவத்துடிப் பிலே பார்த்தெடுத்த அழகியாக விளங்கினுள். தன் வீட்டி லேயே வளர்ந்துவந்த இந்த அழகியை இலிச் பார்க்காமல் இருந்திருப்பாரா?

பருவப்பெண்களின் பார்வையில் விழுந்துவந்த இலிச்சின் கண்ணேட்டம் அழகி எர்கால்ஸ்கியின் மீது விழுந்தது. காரண மில்லாமலே சிறுசிறு உத்தரவுகள் அன்பின் பெருக்கால் இலிச் கால்ஸ்கிக்குப் போட்டான். அவள் அவைகளைத் தட்டாமல் செய்து வந்தாள். அவளுக்கும் இலிச் என்ன சொன்னுலும் இனிக்கச் செய்தது. நாளுக்குநாள் அவர்களிருவரிடையே நடைபெற்று வந்த உரையாடல் வளரத்தொடங்கியது. அழகு நிறைந்த ஒரு வாலிபனும் ஒரு அழகியும் தனித்து உட்கார்ந்து நீண்ட நேரம் உரையாடினுல் அது என்னவாக இருக்க முடியும்? அரசியல் விவகாரமா பேசிக்கொண்டிருப்பார்கள்? அல் லது சிறந்த சிற்றுண்டியைப்பற்றி உரையாடுவார்களா? காதலைத்தவிர வேறு என்ன இருக்கிறது? காதல் காரணமாக

சுற்றி வளைத்து எல்லாவற்றையும் பேசினாலும் பேசத்தான் செய்வார்கள்.

அழகுநிறைந்த கோமகன் இலிச்சுக்கும் புனையா ஓவியமாக விளங்கிய அனுதை கால்ஸ்சிக்கும் ஏற்பட்ட காதல் திருமணத்தில் முடியவில்லை. பாவம்! கால்ஸ்கி ஏமாற்றமடையவே நேர்ந்தது. டால்ஸ்டாயின் குடும்பம் செல்வமின்றி வருந்துவதையும், இளவரசி மேரியை மணப்பதன் மூலம் இலிச் செல்வம் பெற வழியுண்டு என்பதையும் அறிந்த கால்ஸ்கி தானுகவே முன்வந்து மேரியை மணந்துகொள்ளும்படி இலிச்சைக் கட்டாயப்படுத்தினாள். அதன்படியே இலிச்சுக்கும் மேரிக்கும் திருமணம் நடைபெற்றது. அதன் காரணமாக யாஸ்னுய போல்யானு டால்ஸ்டாயின் குடும்பத்துக்கு உரிமையாயிற்று. கால்ஸ்கியின காதல் தியாகத்தால் டால்ஸ்டாயின் குடும்ப வரலாற்றில் ஒரு புதிய அத்தியாயம் தொடங்கியது. மூன்று புதல்வர்களையும் ஒரு பெண்ணையும் பெற்றுக்கொடுத்து விட்டு மேரி காலமானுள்.

அன்னையை இழந்த டால்ஸ்டாய் கொஞ்ச நாட்களுக்குள்ளேயே தந்தையையும் இழக்க நேரிட்டது. வாணிப நிமித்தம் ரூலாவுக்குச் சென்ற அவரது தந்தை நிகாலஸ் இலிச் திரும்பி வரவேயில்லை. அளவுக்கு மிஞ்சி சாராயம் குடித்ததால் இறந்து போனுர் என்று பேசிக்கொள்ளப்பட்டது. பிறகு அவரைப் பற்றி எந்தவிதமான தகவலும் சரியாகக் கிடைக்கவில்லை.

மேரி இறந்துபோனதும் இலிச் தன் முதல் காதலியான எர்கால்ஸ்கியை மறுமணம் செய்துகொண்டார். எனவே டால்ஸ்டாய் சிற்றன்னையின் பராமரிப்பிலிருந்து வந்தார். பிறகு அவருடைய அத்தை முழுப்பொறுப்பையும் ஏற்றுக் கொண்டு வளர்த்து வந்தாள்.

மெட்ரிகுலேஷன் படிப்பை ஒருவாறு முடித்துக்கொண்டு கல்லூரியில் கால் வைத்தார் டால்ஸ்டாய். கல்லூரிப் படிப்பு அவருக்குக் கசக்கவே செய்தது. பிரபுக்கள் வம்சத்தைச் சார்ந்

தவரானதால் பிரபுக்கள் அமருவதற்கென்று கல்லூரியில் போடப்பட்டுள்ள தனி இடத்தில் அமருவார்.

மிகுந்த அழகனுகப்பலர் மெச்சும் விதமாக விளங்கவேண்டு மென்பது அவர் அவா. அதற்காக அதிக நேரம் செலவு செய்து அழகுபடுத்திக்கொள்வார்.

சட்டக்கல்லூரியில் பயிலுங்காலத்தில் சட்டதிட்டங்களை மீறியே நடந்துவந்தார். சட்டக்கல்லூரியில் நுழையும்போது சாராயப்புட்டிகளுடன் நுழைவார். குடித்துவிட்டு ஆசிரியர் களைக் கேலி செய்வது அவருக்குப் பொழுதுபோக்கு நிகழ்ச்சி யாக இருந்துவந்தது. பரீட்சைக்குச் சில நாட்களுக்கு முன்பு தான் படிக்கத்தொடங்குவார்.சட்டக்கல்லூரியில் முதல்ஆண்டுப் படிப்பை இரவுபகலாக உருப்போட்டுப் படித்துத் தேர்வில் சிறப் பாக வெற்றி பெற்ருர். இத்துடன் கல்லூரிப் படிப்புக்கு முழுக் குப்போட்டுவிட்டார்.

கல்லூரியைவிட்டு நின்றதும் ஏராளமான புத்தங்களைப் படித்தார். வால்டேரும், ரூஸோவும் அவருக்கு மிகவும் பிடித்த மானவர்கள். ரூஸோவின் புத்தகங்களைப் பல தடவை படித்து மகிழ்வார். சார்லஸ் டிக்கன்ஸின் எழுத்தோவியம் என்ருல் விரும்பிப் படிப்பார். கிருஸ்துவ சமயத்தில் நடைபெற்றுவந்த ஊழல்களைக்கண்டு மனம் வெறுத்துத் தான் அணிந்திருந்த சிலுவையைக்கூடக் கழற்றி எறிந்துவிட்டார்.

தனது பதினுருவது வயதிலேயே எழுதத்தொடங்கினுர். ஒவ்வொரு பொருளைப்பற்றியும் ஆராய்ச்சி செய்வதில் மிகுந்த ஆவல் கொண்டார். தத்துவ நூல்கள் அவருக்கு மிகவும் பிடித்தமானவை.

அவருடைய சகோதரர்கள் தக்க பருவம் எய்தியதும் பாகப் பிரிவினை நடைபெற்றது. எனவே டால்ஸ்டாய் ஊருக்குத் திரும்பி வந்தார். யாஸ்னுயாபோல்யானு டால்ஸ்டாய்க்குக் கிடைத்தது. தான் இனிமேல் எப்படிப்பட்ட வாழ்க்கை நடத்த

வேண்டுமென்பது பற்றி ஒரு முடிவுக்கு வந்து, அதற்கான வழிமுறைகளை வகுத்துக்கொண்டார். தன் ஜமீனிலுள்ள குடியானவர்களின் மீது மிகுந்த அன்பும், இரக்கமும் கொண்டார். அவர்களுக்காக உடல் கஷ்டங்களைப் பாராது உழைத்தார். போதிய வசதிகள் செய்து கொடுத்து அவர்களைத் தொழில் ஊக்கம் கொள்ளச்செய்தார். குடியானர்கள் குற்றம் செய்து விட்டால் அவர்களைச் சவுக்கால் அடிப்பது அப்போதிருந்த பழக்கமாக இருந்துவந்தது. அந்தப் பழக்கத்தை முதன்முதலில் தன் ஜமீனில் நிறுத்தினர்.

குடியானவர்கள் கல்வியறிவற்றவர்களாக இருப்பதைக்காண மன வருந்தினர். எனவே அவர்கள் கல்வி பயிலும் பொருட்டுப் பள்ளிக்கூடங்களை அமைத்தார். இது குடியானவர்களுக்குக் கொஞ்சம்கூடப் பிடிக்கவில்லை. இவருடைய சீர்திருத்தங்களை அறிவற்ற அவர்கள் வெறுத்து வந்தார்கள். டால்ஸ்டாய் ஒரு பைத்தியக்காரன் என்றும் தூற்றி வந்தனர். இதன் காரணமாகவே ஒரு சமயம் அவர்களோடு கோபித்துக் கொண்டு மாஸ்கோவுக்குப் போய்விட்டார்.

எந்தவிதத்திலும் தான் பிறரைவிட மேலானவனுக விளங்க வேண்டுமென்பது டால்ஸ்டாயின் ஆசை. சரியான உடல் கட்டும் அழகும் உள்ள ஆண்மகனுக விளங்கவேண்டும் என்பதற்காக ஓயாது உடற்பயிற்சி செய்துவந்தார். தலைகீழாக மணிக்கணக்கில் நிற்பார். மற்றவர்களைவிடச் செல்வத்தில்தான் சிறந்து விளங்க வேண்டும்; யாரும் பெறமுடியாத அளவு புகழ் பெற்று வாழவேண்டும் என்பது அவருடைய ஓயாத சிந்தனை.

தன் ஜமீனைவிட்டு வெளியில் கிளம்பும் காலங்களில் பிரபுக்கள் நடத்துகின்ற வாழ்க்கை முறைகளினின்றும் தன்னை அவரால் விடுவித்துக்கொள்ள முடியவில்லை. மாஸ்கோவிலும், பீட்டர்ஸ்பர்க்கிலும் அவர் நடத்திய ஆடம்பர வாழ்க்கை மிக்க செலவுடையதாக இருந்தது. கேளிக்கை, நடனம், வேடிக்கை ஆகியவைகளில் அதிகமாக ஈடுபட்டார். உயர்ந்த சாராயப்

புட்டிகள், அழகிய மங்கைகள் இவைகளுக்காகச் செலவிட்ட பணம் கணக்கில்லை. மங்கையின் அதரத்துக்கும், மதுக்கிண்ணத்தின் வடிம்பிற்கும் மாறுபாடு அறியாது மயங்கிக்கிடந்தார். ரோஜா நிறக்கன்னங்களும், நீலநிறக்கண்களும் உள்ள இளம் பெண்களுக்கு மாஸ்கோ வட்டாரத்தில் மிகுந்த கிராக்கி ஏற்பட்டிருந்தது. எவ்வளவு கிராக்கி ஏற்பட்டிருந்தாலும் டால்ஸ்டாய்க்கு அவர்கள் மிக எளிதாகவே கிடைத்து வந்தார்கள்.

சூதாட்டம் அவரது பணப்பையைக் காலி செய்து வந்தது. பணம் குறைந்தவுடன்தான் அவருக்கு மது, மங்கை இவைகளின் மயக்கம் தெளிவடையும். உடனே தன் தவற்றை உணருவார். அதற்காக வருந்துவார்; ஜமீனுக்குத் திரும்புவார். எளிய வாழ்க்கையை மேற்கொள்ளுவார்.

ஆனால் இது பல நாட்களுக்கு நீடிப்பதில்லை. மாஸ்கோவுக்குச் செல்லும் காலம் வந்ததும் பழைய ஆடம்பர வாழ்க்கை நினைவுக்கு வந்துவிடும். மாஸ்கோவில் ஆடம்பர வாழ்க்கை என்ருல், மது, மங்கை, சூதாட்டம் இவைகள்தாம். இவைகளில்லாமல் அக்கால ரஷ்யாவில் யாரும் பிரபுவாக இருக்க முடியாது. இந்தவிதமான ஆடம்பர வாழ்க்கையை வைத்துத்தான் பிரபுக்களின் மதிப்பு கணிக்கப்பட்டு வந்தது. மிகுந்த எண்ணிக்கையுள்ள அழகிய இளம்பெண்களுக்கு யார் தலைவராக விளங்குகிருரோ, அதிக எண்ணிக்கையுள்ள சாராயப் புட்டிகளை யார் காலி செய்கிருரோ அதிகப் பணத்தை யார் சூதாட்டத்தில் செலவு செய்கிருரோ அவர்தான் மேன்மையான சங்கத்தைச் சார்ந்தவர் என்பது அக்கால மாஸ்கோவில் நிலவி வந்த கொள்கையாகும். டால்ஸ்டாய் முற்றிலும் இதற்கு விதிவிலக்கானவர் என்று எப்படிச் சொல்ல முடியும்? ஒரே ஆட்டத்தில் ஆயிரத்துக்கு மேற்பட்ட ரூபிளை இழந்திருக்கிருர். 1848-ஆம் ஆண்டில் அளவுக்கு மீறிக் கேளிக்கையில் ஈடுபட்டுக் கடன்தொல்லையில் மாட்டிக்கொண்டார். அதிலிருந்து விடுபடப் படாதபாடுபட்டார். பிறகு அவருடைய சகோதரர் கடனைக்கட்டி அவரை மீட்டார்

வாழ்க்கையானது எண்ணத்தில் ஒன்றும் செயலில் ஒன்று மாக இருப்பது குறித்துத் தன் மீது மிகவும் கோபப்பட்டுக் கொண்டார்.

ஏதோ ஒரு பெரிய சக்தி தன்னிடம் மறைந்து கிடப்பதாக அடிக்கடி உணருவார். தன் கற்பனைகளை யெல்லாம் வெளியில் சொல்வதிலும் தயங்குவதில்லை. ஒருதடவை தன் சிற்றன்னை யிடம் அதைப்பற்றிக் கூறினார். மெய்காப்பாளனாக மட்டுமே இருக்க யோக்கிதை பெற்றவன் என்று டால்ஸ்டாயைப்பற்றி அவள் கூறி வந்தாள். அன்றிலிருந்து இலக்கியமேதையாக வும் டால்ஸ்டாய் விளங்குவான் என்று அறிந்தாள். அது முதல் எழுத்துத்துறையில் ஆர்வம் காட்டினார்.

1852-ல் டால்ஸ்டாயின் முதல் எழுத்தோவியம், ''குழந் தைப் பருவம்'. வெளிவந்தது. ரஷ்யாவின் வாசகர்கள் இமை கொட்டாது கவனித்து வந்தனர். முதல் நூல் மிக்க புகழை வாரிக்கொண்டு வந்து குவித்தது. யார் இந்தப் புதுமை எழுத் தாளன் எல். என். என்று ரஷ்ய நாடே கேட்கத் தொடங்கி விட்டது.

ரஷ்யாவின் புகழ்பெற்ற எழுத்தாளர் டர்ஜனீவ் குழந்தைப் பருவத்துக்குச் சிறந்ததோர் விமர்சனம் எழுதி ''காண்டம்பரரி'' ஆசிரியருக்கு அனுப்பியிருந்தார். 'அந்த ''எல். என்.'' இடம் கூறுங்கள்; ஏராளமாக எழுதிக்குவிக்கும்படி - ஊக்குவியுங்கள் எனது மரியாதையை அவருக்குத் தெரிவியுங்கள்' என்று டர்ஜனீவ் எழுதியிருந்தார்.

இவ்வளவு புகழைத் தேடித்தந்த குழந்தைப்பருவம் எந்த விதமான வருமானத்தையும் தேடிக்கொடுக்கவில்லை. எவ்வளவு கிடைத்தாலும் பெற்றுக்கொள்வதாக நினைத்துக்கொண்டிருந் தார். ஆனால் முதல் நூல் ஆசிரியரை வாசகர்களுக்கு அறி முகம் செய்து வைப்பதால் முதல் நூலுக்கு எந்தவிதமான பொருட் பரிசும் கொடுப்பது கிடையாது என்று காண்டம்பரரி ஆசிரியர் தெரிவித்திருந்தார். அடுத்து வெளியிடப்படும் நூல்

களுக்கு அச்சிடப்பட்ட பக்கம் ஒன்றுக்கு ஐம்பது ரூபிள் வழங்கப்படும் என்று அவருக்கு அறிவிக்கப்பட்டது. பிறகு "இளமைப் பருவம்" வெளிவந்தது. அது வெளிவந்த சமயத்தில் ரஷ்யாவின் கவனம் வேறு திசையில் சென்றுகொண்டிருந்தது. கிரிமியாவில் போர் நடந்துகொண்டிருந்தது; அனைவரும் இராணுவ சேவையில் ஈடுபட்டுருந்தனர். எனவே இளமைப் பருவம் ரஷ்யாவின் வாசகர்களை அவ்வளவாகக் கவரவில்லை. வாசகர்கள் போரில் ஈடுபட்டிருக்கும்போது ஆசிரியர் மட்டும் எழுதிக்கொண்டிருப்பாரா? அவரும் தன் கடமையைச் செய்ய வேண்டி இராணுவ சேவையில் ஈடுபட்டார்.

சிலர் தங்களிடமுள்ள குறைபாடுகளை அறிவதேயில்லை. அறிந்தாலும்கூட நான் மாத்திரந்தான் குறைபாடு உடையவன் என்று கருதித் தங்கள் குறைபாடுகளை ஒப்புக்கொள்வதில்லை. குறைபாடுதான் என்று அறிந்த காலத்திலும் அதற்காக வருந்துவதோ, இனி அப்படிப்பட்ட செயல்களைச் செய்யக்கூடாது என்று எண்ணுவதோ கிடையாது. அவர் தம் குறைபாடுகளை அறிந்து வருந்தாத நாளே இல்லை. அதற்குத் தண்டனையாக ஒரு தடவை, தன் தலையைச் சுவரில் முட்டிக் கொண்டார்.

ஊர் சுற்றித் திரிவதில் அவருக்கு மிக விருப்பம். படை அணிவகுப்பில் நிற்பார். அடுத்தகணமே மற்றோர் இடத்தில் அழகாக உடையணிந்து கொண்டு வலம் வருவார். இராணுவத் தளபதிக்கு இவையெல்லாம் சிறிதும் பிடிக்கவில்லை. இராணுவத்தின் விதிமுறைகளைப் பின்பற்றுவது கிடையாது என்று அவர் மீது புகார்கள் கிளம்பின. ஒவ்வொரு நாளும் செய்ய வேண்டிய பெரேடு (Parade)களைக்கூடச் செய்வது கிடையாது. இதற்காக ஒரு தடவை அவர் இராணுவச்சிறையில் அடைக்கப்பட்டார். ஆனால் அவர் அழகாக உடையணிந்து கொண்டு, இராணுவத்தில் ஒரு மன்மதனாக விளங்குவதை அனைவரும் வரவேற்றனர். அவரோடு வேலை செய்தவர்கள் அவரை 'உல்லாசக் கோமகன்' என்று புகழ்ந்தனர். அவர் பேச்சைக் கேட்கவும், அவரது விளை

யாட்டுகளைப் பார்க்கவும் அவர்கள் விரும்பினார்கள். அவரோடு பேசுவது மிகவும் பெருமை என்று நினைத்தனர். பலர் அவரது பேட்டிக்கும், அவருக்குத் தங்களின் வந்தனத்தைச் செலுத்தவும் காத்துக் கிடந்தனர். இது அவருடைய திறமையான இராணுவ சேவைக்கா? இல்லை, இல்லை. அவருடைய வலிமை மிக்க பேனாவுக்கு; வசீகரமிக்க எழுத்தோவியத்துக்கு. உயர்ந்த தத்துவங்களை யெல்லாம் எளிய முறையில் குழைத்துத் தீட்டும் இலக்கிய அறிவுக்கு. எனவே சென்ற விடமெல்லாம் புகழ் மாலைகள் குவிந்தன.

நமக்குத் தெரிந்த ஒருவர் சிறந்த எழுத்தாளராக இருக்கிறாரே! அவர் தனது எழுத்து மூலம் நமது உள்ளங்களை யெல்லாம் கொள்ளை கொள்கின்றாரே! என்று அக்காலத்து ரஷ்ய நாட்டு இளம் அழகிகள் மலர்ந்த முகத்துடன் வந்து உரையாடி அவரது அன்பைப் பெற்றுச் சென்றனர். பேரிளம் பெண்கள் கூடக் கவர்ச்சிகரமாக உடையணிந்து கொண்டு வந்து மகிழ்ச்சியாக உரையாடிவிட்டு, தங்கள் வயதைக் குறைத்துக் கூறிக் கொண்டும் சென்றிருக்கலாம். இப்படிப்பட்ட பெண்களைப் பார்த்து டால்ஸ்டாய் வியப்பும், இரக்கமும் கொண்டார். உலகியல் தவறாது சிறந்த இலக்கியத்தை உருவாக்குவதற்கு இதெல்லாம் உண்மையான குறிப்புகள் என்று கருதினார். பெண்களின் மனோதத்துவத்தை அறிவதற்கு நல்ல வாய்ப்புகள் இதன் மூலம் அவருக்குக் கிடைத்தன. உலகத்தில் எப்படிப்பட்ட குணமும், நடத்தையும், பண்பும், பக்குவமும் கொண்ட எந்தப் பெண்ணும் அவரது பேனா முனையினின்றும் தப்பிவிடவில்லை.

இராணுவ சேவையில் ஈடுபட்டிருந்த காலத்தில் உயர்தர அதிகாரிகள் கொண்டிருந்த பழக்கவழக்கங்களிலிருந்து இவரும் பிரிந்து வாழ முடியவில்லை. இராணுவ சேவையில் அப்படி இருந்தாக வேண்டியிருந்தது. சாராயமும், சல்லாபத்துக்கேற்ற மங்கையும், சூதாட்டமும் இல்லாத இராணுவ சேவை ஒரு சேவையா? இது மூன்றும் இல்லை என்றால் ஒருவன் கூடப் பட்டாளத்தில் பணிபுரிய முடியாதுபோலும்.

டால்ஸ்டாயும் மாஸ்கோவில் கற்ற பாடத்தை மறந்துவிட வில்லை. மதுவும், மங்கையும் விரும்பாதவனுக்கு மாஸ்கோவில் வேலையில்லை! அவைகளை அனுபவிக்கத் தெரிந்தவன் சொர்க்க லோகவாசி! மண் குடிசையில் வாழ்ந்த மங்கையானாலும் மாட மாளிகையில் உலவிய மங்கையானாலும் பிரபுக்களின் கரம்பட்டுக் கசங்கிப் போகாமல் பார்த்துக்கொள்வது அக்காலத்தில் ஓர் அரிய முயற்சியாகவே இருந்தது. அந்த வட்டாரத்தில் வளர்ந்த அவருக்கு இந்தப் பாடம் கற்றுத்தர வேண்டியதில்லை. எனவே மதுக்கோப்பை, கேளிக்கையரங்கு, சூதாட்டக்கூடம் இவைகள் இன்பத்தின் இருப்பிடங்களாக அவருக்குத் தோன்றின.

இராணுவ சேவையில் ஈடுபட்டிருந்த காலத்திலும் அவர் எழுதுவதை நிறுத்தவில்லை. இளமைப் பருவத்துக்குப்பின் எழுதிய செபஸ்டபோல் கதைகள் குன்றாத புகழை வாரி வீசின. ரஷ்ய ஜார் இரண்டாம் அலெக்சாண்டர் இவரது எழுத்தோவியங்களான குழந்தைப்பருவம், இளமைப்பருவம், செபஸ்டபோல் கதைகள் ஆகியவைகளைப் படித்துப்பார்த்துப்பிரமித்துப்போனார். 'இப்படிப்பட்ட எழுத்தாளர் பட்டாளத்தில் பணிபுரிகின்றாரா? அப்படியானால் அவரின் 'உயிரைப்பற்றி அதிகக் கவனம் செலுத்துங்கள்' என்று பிரதம தளபதிக்கு ஜார் செய்தி அனுப்பினார் ரஷ்யா நாட்டுப் புகழ்பெற்ற பேனா வீரரும், நாடகாசிரியருமான பிசம்ஸ்கி 'இனி எழுத்தாளர் உலகத்தில் எனக்கெல்லாம் வேலை யில்லை. பேனாவைத் தூக்கி எறிந்துவிட்டு வேறு வேலை பார்க்க வேண்டியதுதான். துப்பாக்கி தூக்கிச் சுட்டுப்பழகிய பட்டாளத்து அதிகாரிக்குப் பேனாவை எடுத்து இவ்வளவு அழகாக எழுதவும் தெரிகிறதே'' என்று டால்ஸ்டாயின் கதைகளைப் படித்துவிட்டுக் கூறினார்.

ரஷ்ய நாட்டுப் புதுமை எழுத்தாளன் என்ற முறையில் பெண்களின் தொடர்பு அதிகம் கிடைத்து வந்தது. 'நான் என் மனத்தைக் கட்டுப்படுத்தித்தானிருக்கிறேன்! இந்தக்குமரிகளின் கண்கள் வா! வா! வென்று அழைக்கின்றன! அவர்களின் இதழ்கள் என் வருகையை எதிர்நோக்கியிருக்கின்றன! நான் என்ன செய்வேன்?' என்று வருந்துவார். பருவக்குமரிகளின் பக்குவம்

நிறைந்த பார்வையும், கோல நடையும், கொடி இடையும் அவரைப் படாதபாடு படுத்தின.

அவர் உண்மைக்காகப் போராடுவதிலும், தான் செய்த தவற்றிற்காக மன்னிப்புக் கேட்பதிலும் தயங்குவதில்லை. தன்னுடைய குறைபாடுள்ள வாழ்க்கையை மறக்காமல் பிறரிடம் எடுத்து இயம்புவார். ஷேக்ஸ்பியர் ஒரு சாதாரண எழுத்தாளர் தான் என்பது அவருடைய கருத்து. ஆனால் பிறகு அவருடைய மேதைத்தனத்தை ஏற்றுக்கொண்டு தன் கருத்தை மாற்றிக் கொண்டார். புகழ்பெற்ற எழுத்தாளர் 'டர்ஜனீவ்' அவர்களோடு ஒரு சமயம் குஸ்தி போடுவதற்கே தொடங்கிவிட்டார். அதன் காரணமாக ஏறத்தாழப் பதினைந்தாண்டுகள் ஒருவரோடு ஒருவர் பேசிக்கொள்ளவில்லை. ஜார்ஜ் சென்டின் என்ற பிரபல எழுத்தாளரின் நாவலில் வருகின்ற பெண்ணைப்பற்றி காரசாரமாக கருத்தைத் தெரிவித்தார். அதன் காரணமாகப் பலரின் அருவருப்பைத் தேடிக்கொண்டார். குதிரை மீது ஏறிக்கொண்டு வேட்டைக்குப் போவது அவருக்கு மிகவும் விருப்பம் ஒரு நாளில் ஒரு நல்ல காரியமாவது செய்ய வேண்டுமென்பது அவர் முடிவு. அதற்குச் சமய சந்தர்ப்பமே கிடையாது. ஒரு நாள் வேட்டைக்குச் சென்றவர் தான் ஏறிச் சென்ற குதிரையை ஒருவருக்குப் பரிசளித்துவிட்டு நடந்து வீடு வந்து சேர்ந்தார். இது ஒருநாள் அவர் செய்த நற்காரியம்!

பிறகு பாரிசுக்குப் புறப்பட்டார். பாரிஸ் களியாட்ட இருளில் மூழ்கிக் கிடந்தது. அந்நகரம் பெரும்பகுதி விலைமாதர் இல்லங்கள் நிரம்பியதாக இருந்தது. அங்கு காமவெள்ளம் கரைபுரண்டு ஓடியது. அதுதான் கலையறிவு என்று கருதப்பட்டது. பட்டினி கிடந்து உயிர்விடும் பஞ்சையின் அந்தகாரக் குரல் வீதியில் எழுகின்ற நேரத்தில்தான் வான்முட்டும் மாளிகையிலே மஞேகரிகளின் ஆனந்தப் பள்ளு ஒலித்தது. ஏழைகளுக்குக் கொடுக்கப்பட்ட தண்டனையைக் கண்டு இறைவனே பயப்பட்டான்.

இந்தச் சமயத்தில்தான் டால்ஸ்டாய் பாரிஸ் நகரில் அடி எடுத்து வைத்தார். கேளிக்கைக் கண்களோடு சென்றவருக்கு ஏழை மக்களின் காட்சி கொஞ்ச நாட்களுக்குத் தென்படவே யில்லை. பாரிஸின் நாகரிகமும், வனப்பும் அவரை மிகக்கவர்ந்தன. பணத்தை வீசி எறிந்தால் கிடைக்கின்ற உபசரிப்பை வர்ணித்துக்கூறப் புலமை போதாது. ஆனால் அங்கு நடைபெற்று வந்த அக்கிரமங்களைப் பார்க்கப் பார்க்க அங்கு தங்கவே பிடிக்கவில்லை. எனவே ஸ்விட்சர்லாந்துக்குச் சென்றார். அங்கு சீமாட்டி அலெக்சாண்டிரினாவைச் சந்தித்தார். அவள் அவருக்கு உறவினள்.

அலெக்சாண்டிரினாவுக்கு மாஸ்கோவில் ஜாரின் அரண்மனையில் மதிப்பு வாய்ந்த உத்தியோகம். அவள் அழகான உடற்கட்டு உடையவளாக இருந்தாள். அதனால் ஆண்களின் உள்ளங்களை யெல்லாம் கவர்ந்திருப்பாள் என்பதில் சந்தேகமில்லை. ரஷ்ய சக்கரவர்த்திகளான நிகாலஸூம், இரண்டாம் அலெக்சாண்டரும் அவளிடம் உயிரையே வைத்திருந்தார்கள். அலெக்சாண்டிரினாவுக்கு அவர்களிடம் மிகுந்த செல்வாக்கு உண்டு. இவளுடைய உரையாடல் அவர்களுக்கு மிக்க சுவையாக இருந்தது. சுவிட்சர்லாந்தில் தங்கியிருந்த நாட்களில் அவளோடு காலங்கழிப்பதில் மிக மகிழ்ச்சியடைந்தார்.

'அலக்சாண்டிரினா! மாஸ்கோவில் உன்னை நான் பார்த்ததைவிட இப்பொழுது நீ மிகவும் அழகாக விளங்குகிறாய். உன் எழில் என்னை உன் கூடவே இருக்கச் செய்கிறது. நீ மட்டும் கொஞ்சம் இளையவளாக இருந்திருப்பின் உன்னை நான் உயிருக்கு உயிராகக் காதலித்து மணந்திருப்பேன். உன் அழகு உன்னுடைய உண்மையான வயதை மறைத்து உனக்குச் சிறப்புத் தேடித் தருகின்றது'' என்று அவளிடம் தன் உள்ளத்தையே திறந்து காட்டினார்.

அலெக்சாண்டிரினா அவரைவிடச் சிலவாண்டுகள் வயதில் மூத்தவள். அதனால் அவர் அவளை மணந்துகொள்ளும்படி கேட்கவும் பயப்பட்டார். தவிர, அரண்மனையில் உத்தியோகம்

பார்ப்பவளானமையின் அவளுடைய உத்தியோகத் தோரணை யும்,மிதமிஞ்சிய படாடோபமும் அவருக்குக் கொஞ்சம் பயத்தை விளைவித்தன. தன்னுடைய நிலைக்கு அவள் தனனைத் தாழ்த் திக்கொள்ளமாட்டாள் என்று நினைத்தார். ஆனாலும் அவள் காட்டிய அன்பும் மரியாதையும் அவருக்கு மனைவியாக இருக்க யோக்கிதையுடையவள் என்று காட்டின. அது அவருடைய உள்ளத்தைவிட்டு அகல வெகு நாட்கள் சென்றன. சூதாட்டம் அவரை விட்டபாடில்லை. ஹாலந்துக்குச் சென்று சில நாட்கள் தங்கியிருந்தார். சூதாட்டத்தில் ஏற்பட்ட தோல்வியால் மாஸ் கோவுக்கு வர வழிச்செலவுக்குக்கூடப் பணமில்லாது திண்டாடி னார். முடிவில் தன் கோட்டையும், கடிகாரத்தையும் விற்று, அப் பணத்தைக் கொண்டு ஊர் திரும்பி வந்தார். இத்துடன் அவர் பட்டாளத்தைவிட்டு வெளியேறினார். இந்தச் சமயத்தில் அவரது உள்ளம் தூய்மையாகவே இருந்தது. ரஷ்யாவில் நிலவிவந்த சூழ்நிலை அவருக்குச் சிறிதும் பிடிக்கவில்லை. ஏழைகளும், தொழிலாளர்களும் கொடுமையாக நடத்தப்பட்டனர். அதைக் கண்டு கண் கலங்கினார்.

பல்கலைக் கழகங்கள் மாணவர்களிடமிருந்து அதிகச் சம்ப ளங்களை வாங்கிக்கொண்டு எந்த வேலைக்கும் பயனற்றவர் களாக்கி வெளியில் அனுப்புகின்றன. சாதாரண குடிமகனுக்குத் தெரிந்த கருத்தையே மிகப்பெரிய தத்துவம் அதில் அடங்கிக் கிடபபதாகக் கருதிக்கொண்டு சில ஆசிரியர்கள் போலி வேஷம் போட்டுக்கொண்டு போதிக்கின்றனர். குறிப்பிட்ட ஒரு முறை யில் மாணவர்களைப் பல்கலைக்கழகங்கள் உற்பத்தி செய்கின்றன— அதாவது அளவாக அறுக்கப்பட்ட செங்கல் போன்றவர்கள்— பல்கலைக்கழகத்திலிருந்து வெளிவரும் மாணவர்கள். பல்கலைந் கழகங்களும், அரசாங்க அலுவலகங்களும் பகிரங்கமாக மக்களை ஏமாற்றிச் சுரண்டுகின்ற இயந்திரமே தவிர, வேறென்ன? இந்தப் பிற்போக்கான குருட்டு முறை மாறியாக வேண்டும் என்று டால்ஸ்டாய் கருதினார்.

1861-ம் ஆண்டில் ரஷ்யாவில் நிலமான்யத்திட்டம் அமுலுக்கு வந்தது. மிராசுதாரர்களிடமிருந்த அபரிமிதமான

நிலங்கள் எல்லாக் குடியானவர்களுக்கும் சமமாகப் பங்கிடப் பட்டன. இப்பணிக்கு டால்ஸ்டாய் மத்தியஸ்தராக நியமிக்கப் பட்டார். மிராசுதாரர்களின பகையை இதன்மூலம் அவர் ஈட்டிக் கொண்டார். அவருடைய உயிரையே போக்கிவிடுவதாக வந்த மிரட்டல் கடிதங்கள் பல. 'நீங்கள் என்ன சொல்லி மிரட்டினு லும் நான் குடியானவர்களின் பாதுகாவலனே தவிர, மிராசு தாரர்களின் கையாளல்ல' என்று உறுதியாகக் கூறிவிட்டார்.

அவர் இராணுவத்திலிருந்து திரும்பி வந்து தன் ஜமீனில் தங்கியிருந்த சமயத்தில்தான் அண்டை வீட்டுச் சீமாட்டியான வலிரியாவின் தொடர்பு கிடைத்தது. அவள் சுடாகோவ் ஜமீனைச் சார்ந்தவள். அவள் அப்பொழுதுதான் வெடித்த மொக்கு! பருவகாலப்பயிர்! துடிதுடிப்பும் இளமை எழிலும் ஒருங்கே அவளிடம் திகழ்ந்தன. அவளிடம் தொடர்பு கொண்ட நாளி லிருந்து அவர் வாழ்க்கையில் பெரிய மாற்றங்கள் ஏற்பட்டன. அவர் வாழ்க்கையில் எதிர்ப்பட்டவர்கள் பல மகளிருள்ளும் அவரால் மிகமேன்மையாகக் காதலிக்கப்பட்டவள் வலிரியாதான்! அவர் வலிரியாவிடம் கொண்ட காதல் விவகாரத்தில் பைத்தியக் காரனைப் போலாகிவிட்டார். மாஸ்கோவிலும், பாரிஸிலும், சுவிட் சர்லாந்திலும் தொடர்புகொண்ட சீமாட்டிகளைவிட இந்தச் சுடாகோவ் ஜமீன் சீமாட்டி வலிரியா எந்தவிதத்தில் மேன்மை யானவளாக இருந்தாளோ தெரியவில்லை! அவளுடைய தொடர்பை மிகமிக வருத்தத்துடன அவர் விடவேண்டிய தாயிற்று.

டால்ஸ்டாய் தன்க்குப் பிடித்தமான ஒரு பெண்ணை மனைவி யாகத் தேடிப்பிடிப்பதற்குள் படாதபாடுபட்டுவிட்டார். இவரால் காதலிக்கப்பட்ட பெண்கள் பலர். காதலித்த பல தடவைகளில் இவர் தோல்வியேதான் கண்டார். மாஸ்கோவில் வாழ்ந்த இளவரசிக்கு இவர் பிடிக்கவில்லை. டால்ஸ்டாய் மாஸ்கோவுக் குச் சென்றபோதெல்லாம் அரண்மனை வைத்தியரான டாக்டர் ஆண்ரூ பெக்சர்ஸ வீட்டுக்குச் செல்வார். அவர் ஒரு உறவினர். அவருக்கு மூன்று பெண்கள் இருந்தனர். மூவரும் வயதுவந்த

பேரழகிகள்! டால்ஸ்டாயின கண்ணேட்டம் அவர்களின் மீது விழுந்தது. மூத்தவள் பெயர் எலிஸபெத். அவர் தங்கள் வீட்டுக்கு வந்தபோது எலிஸபெத்துக்கு மிகவும் பிடித்தது. அவர் என்று வருவார், என்று வருவார் என்று எலிஸபெத் வழிமேல் விழிவைத்துக் காத்துக்கொண்டிருப்பாள். அவர் வந்தால் அவளுடைய மகிழ்ச்சிக்கு எல்லையில்லை. அவரும் அவள் மீது அன்பு கனிந்த பார்வையோடுதான் காணப்பட்டார்.

ஆண்ருவின் மூத்த மகள் எலிஸபெத்தை அவர் திருமணம் செய்து கொள்ளப்போகின்ருர் என்று செய்திகள் மாஸ்கோ வட்டாரத்தில் காட்டுத்தீ போன்று பரவி வந்தது. இச்செய்திகளைக் கேட்ட எலிஸபெத்துக்கு ஏற்பட்ட மகிழ்ச்சிக்கு அளவேயில்லை. எலிஸபெத்துக்கு ஏற்பட்ட மகிழ்ச்சி யெல்லாம், தான் ஒரு எழுத்தாளனுக்கு மனைவியாகப் போகின்றேமே! யாருக்கும் கிடைக்காத பேறு, என்பதுதான். அவளுடைய பெற்ருேர்களுக்கும் இது மிகவும் மகிழ்ச்சியாகவே இருந்தது.

அவரை மணந்துகொண்டு வாழப்போகின்ற வருங்கால வாழ்வைப்பற்றி எலிஸபெத் கனவுக்கோட்டைகள் பல கட்டினுள். ‘நான் எவ்வாறு இருக்கவேண்டுமென்று அவர் மனம் நினைக்கிறதோ? அறியேன்! ஆண்டவனே அதை என் கனவிலாவது வந்து கூறமாட்டாயா?’ எனறு வழிபாடு செய்வாள். சிறந்த சிங்காரத்தோடு அவர் முன் தோன்றுவாள். அவருடைய அன்பான ஒரு பார்வைக்காகக் கால் கடுக்கக் காத்து நிற்பாள். பாவம்! எலிஸபெத் கட்டிய இன்பக்கோட்டைகள் கனவிலேயே நின்றன. அவளுடைய ஆசை ஈடேறுவதாகத் தெரியவில்லை.

அவருடைய கண்ணேட்டம் எலிஸபெத்தின் இளைய சகோதரியான சோன்யா மீது விழுந்தது. ஆனல் சோன்யா அதுவரையில் அவர். தன் அக்காள் எலிஸபெத்தைத்தான் காதலிக்கிருர் என்று கருதிக்கொண்டிருந்தாள். சோன்யா ஏற்கனவே பாலினேவ் என்ற இளைஞன் மீது காதல் கொண்டிருந்தாள். இருவரும் திருமணம் செய்து கொள்வதாக உறுதி செய்து கொண்டிருந்தனர். ஆனல் பாலினேவ் பட்டாளத்தில் சேர்ந்

வன் அது நாள் வரையில் திரும்பி வரவில்லை. பட்டாளத்திலிருந்து திரும்பி வருகின்றவர்களை அடிக்கடி விசாரித்துக் கொண்டிருந்தாள் டால்ஸ்டாய்க்கு இது தெரியுமோ, தெரியாதோ. ஆனால் சோன்யாவையே அவர் விரும்பினர். சோன்யா தன் காதலன் மாலினேவின் ஞாபகமாக இருந்தாள். ஒருநாள் டால்ஸ்டாய் அவர்கள் வீட்டுக்கு வந்திருந்தார். சோன்யாவின் தங்கை டான்யா அவளிடம் வந்து டால்ஸ்டாய் வந்திருப்பதாகத் தெரிவித்தாள். சோன்யா மிகுந்த வருத்தத்துடன் கூறினள். "டான்யா! என்ன, நீ என்னைத் தெரிந்துகொள்ளாமல் பேசுகின்ருய்! பாலினேவிடம் நான் உறுதியளித்திருப்பது உனக்குத் தெரியாதா? அவர் எலிஸபெத்தை மணக்கப் போவதாக ஊரெல்லாம் பேச்சு! தவிர, அவருடைய சகோதரர்கள் என்ன நோய் பீடிக்கப்பட்டு இறந்தார்கள் என்பது நீ அறியாததா? இதென்ன விளையாட்டு விவகாரமா?" என்று கூறிக்கோபித்துக்கொண்டாள்.

பிறகு அவர் தம் வீட்டு விவகாரமாக ஜமீனுக்குப் போனர். கொஞ்ச நாட்களுக்குள்ளாகவே மாஸ்கோவுக்குத் திரும்பினர். திரும்பவும் சோன்யாவிடம் தன் காதல் நாடகத்தைத் தொடங்கினர். அவள் அவரது காதலுக்கு முதலில் இடம் கொடுக்கவில்லை. ஆனல் என்ன நடந்ததோ தெரியவில்லை. சிலநாளில் சோன்யா அவரது காதலை ஏற்றுக்கொண்டுவிட்டாள். வாய் திறந்து அவள் சொல்லவில்லை. அவளது கண்கள் பேசின பேச்சுத்தான்! அவர் அவளிடம் கொண்ட ஆசை கொஞ்சநஞ்சமல்ல. அவளைக் கண்டுவிட்டால் போதும், துடியாய்த்துடிப்பார். தனித்து உறவாட வரும்படி குறிப்புக்கள் காட்டுவார். அவளும் அதுவரையில் அவரை நெருங்கவே இடம் கொடுக்கவில்லை. தன அக்காள் எலிஸபெத் அவரது காதலை நாடி ஏங்கி வாடுகிருள்! அவளுக்குத் துரோகம் இழைப்பதா? எனவே அவரிடம் ஒருநாள் திறந்து கூறினள். "நீங்கள் என மீது கொண்டிருக்கும் காதலை நான் ஏற்றுக்கொண்டு விட்டதாக என் அக்காள் எலிஸபெத் அறிவாளானல், அவள் உயிரையே விட்டு விடுவாள்! நான் அவளுக்கு மன்னிக்க முடியாத துரோகமிழைத்தவளாகிறேன்!" என்று. "அருமை சோன்யா! நீ கூறுவது

சரி! ஆனல், நான் எலிஸபெத்தை காதலித்ததாகவும், அவளேயே மணக்கப போவதாகவும் யார் உனக்குச் சொன்னது? அவள் சிங்காரித்துக்கொண்டு என் முன்னே வந்து நிற்கிருள். ஆனல், நான் என்ன செய்வது?'' என்று அவர் பதிலளித்தார்.

எப்படியோ கிரம்லின் மாளிகையில் டால்ஸடாயும் சோன் யாவும் அடிக்கடி சந்தித்தனர். ஒரே வீட்டில் நடந்துவரும் இந்நிகழ்ச்சி எலிஸபெத்துக்கு எட்டாமல் போய்விடுமா? தான் ஒரு எழுத்தாளனுக்கு மனைவியாகப் போகின்றமை குறித்துப் பெருமையும் பூரிப்பும் கொண்டிருந்த அவள் இச்செய்தி கேட்டுக் கடலாகக் கண்ணீர் பெருக்கினள். தன் தங்கை டான்யாவிடம் வருத்தம் தாங்காமல் கூறினள். ''டான்யா! சோன்யா என்ன செய்தாள் பார்த்தாயா? அவரை என்னிடமிருந்து பிரித்துத் தன் காதலனுக்கிக் கொள்ளப் பார்க்கிருள்! அவள் நடந்துகொள் ளும் முறை முற்றிலும் மாறிவிட்டது பார்த்தாயா? இதற்கு நான் என் செய்வேன்?'' என்று சோகக் குரலில் கூறினள்.

டால்ஸ்டாய்க்கும் சோன்யாவுக்கும் உறுதி செய்யப்பட்டு விட்டது. அந்த நாள் என்று வரும் என்று காத்திருந்தார். ஒருநாள் கழிவது ஒரு யுகம் கழிவது போன்று அவருக்குத் தோன்றியது. சோன்யா உண்மையாகவே தன்னைக் காதலிக் கிருளா? என்ற எண்ணம் வேறு அவரது உள்ளத்தில் அரித்துக் கொண்டிருந்தது. பாலினேவின் எண்ணமாகவே இருந்த சோன்யாவுக்கு அவரது எழுத்தோவியங்கள் மனச்சாந்தி யளித்தன. அவர் எழுதிய குழந்தைப் பருவத்தையும், இளமைப் பருவத்தையும் படித்துவிட்டு சோன்யா பிரமித்துப்போனள். இவ்வளவு அழகாக எழுதுகின்ற எழுத்தாளனு தனக்குக் காதல னுக் கிடைத்தான் என்று அதிசயித்தாள்.

இந்தச்சமயத்தில் பாலினேவ் பட்டாளத்திலிருந்து திரும்பி வந்துவிட்டான். அவன் மாஸ்கோவில் தங்கியிருந்தான். இதைக் கேள்வியுற்ற டால்ஸ்டாய்க்குத் தூக்கிவாரிப் போட்டது. மறுபடி யும் பாலினேவ் எங்கு சோன்யாவின உள்ளத்தைக் கொள்ளை கொண்டு விடுவானே? என்று பயந்து மாஸ்கோவுக்கு ஓடி

வந்தார். திருமண நாள் வந்தது. மாஸ்கோவிலுள்ள மாதா கோவிலில் திருமணம் சிறப்பாக நடந்துகொண்டிருந்தது. சோன்யா, டால்ஸ்டாயை மணந்து கொள்வதாகக் கேள்விப் பட்ட பாலினேவ் திருமணம் நடக்குமிடத்துக்கே வந்துவிட்டான். மணமகனும் மணமகளும் ஜோடியாக இருக்கும்போது எதிரே நின்று இமை கொட்டாது பார்த்துக்கொண்டிருந்தான். மணமக்கள் இருவரும் பாலினேவின் முன் திருடர்களைப்போல் நின்றனர். திருமண மண்டபத்தில் இருவர் உள்ளத்திலும் மகிழ்ச்சி கொந்தளிக்கவில்லை. மனவேதனையும் பயமும் அவர்களைப் பிடுங்கித் தின்றன. சோன்யாவால் தலைதூக்கிப் பார்க்க முடியவில்லை. அவனோடு நடத்திய காதல் சந்திப்புகள் ஒன்றன்பின் ஒன்ருக அவளது மனத்திரையில் தோன்றிக் கொண்டே யிருந்தன.

“பாலினேவ் என்ன குற்றம் செய்தான்? கொஞ்ச நாள் நான் பொறுத்திருக்கக் கூடாதா? அவன் காட்டிய அன்புக்கு நான் செய்யும் கைமாறு இதுவா? அவன் என்னிடம் கொண்டுள்ள காதல் தூய்மையானது என்பதைக் காட்டுவதற்குத்தான் என் எதிரிலேயே நின்று கூருமல் கூறுகிருன்! அவன் நல்லவன்! வாழட்டும் நெடுநாள்! ஆனுல் நான் தான் துரோகி! நான் செய்த துரோகச் செயலை அவன் மன்னிக்கமாட்டான். ஆனுல் அவனுக்காக என் இதயத்தில் ஒதுக்கிவிட்ட இடம் என்றும் காலியாகத்தானிருக்கும்!’ என்று வருந்தினுள். அவளை யறியாமல் அவள் கண்களிலிருந்து வழிந்தோடுகின்ற நீரைத்தடுத்து நிறுத்த வலிமையற்றவளாக இருந்தாள். டால்ஸ்டாய் இதைக் கண்டு உள்ளம் குமுறினுர். சோன்யா ஒருமுறை பாலினேவை ஏறிட்டுப் பார்த்தாள். அவன் முகத்தில் உயிர்க்களையேயில்லை. திருமண மண்டபத்தில் பாலினேவுக்குக்காகச் சோன்யா வடித்த கண்ணீர் அவள் செய்த பாவத்தைக் கழுவும் புண்ணிய நீர் என்று அங்கிருந்த அத்தனை பேர்களில் ஒருவராவது நினைத்திருக்க மாட்டார்களா?

பாலினேவுக்காகச் சோன்யா வடித்த சோகக் கண்ணீரை நேராகப் பார்த்த டால்ஸ்டாய் அதை எந்த முறையில் எடுத்துக்

கொண்டார் என்பது அவரது குறிப்பேட்டிலோ, வாழ்க்கை வரலாற்றிலோ தெளிவாகக் காணப்பெறவில்லை. ஆனால் அவரும் சோன்யாவும் பிற்காலத்தில் ஒருவர் மீது ஒருவர் கொண்ட சந்தேகங்களுக்கும், மாறுபட்ட எண்ணங்களுக்கும் இந்நிகழ்ச்சிதான் அடிப்படை என்று சில விமர்சகர்கள் கூறுகின்றனர்.

திருமணம் முடிவுற்றதும் அவரும் அவளும் யாஸ்னயா போல்யானவுக்குத் திரும்பினர். தேன்மதி நாட்கள் அவர்களின் எண்ணத்துக்கு மேலாக இன்பமாகவே இருந்தன.

ஆனால் வாழ்க்கை எப்பொழுதுமே ரோஜாப் பூப்போன்று மெத்தென்றிருப்பதில்லை. சில சமயங்களில் அது முள்ளைவிடக் கூர்மையான ஆயுதமாக இருந்து கொடுமை செய்ய ஆரம்பித்துவிடுகின்றது. இதை முன் கூட்டியே ஆரூடம் கணித்து வழிமுறைகள் செய்துகொள்ளும் மனிதர்கள் உலகத்தில் யாரேனுமுண்டா? அவர்கள் இருவர் மட்டும் இதற்கு விதிவிலக்காக இருக்க முடியுமா? திருமணம் நடைபெற்று ஒரு திங்கள் தான் முடிவடைந்தது. பூசலும் புகைச்சலும் கிளம்பத்தொடங்கி விட்டன. வாழ்க்கையில் அமைதி குலைந்தது. தவறான எண்ணங்கள் அவர்களின் இல்லற வாழ்க்கையில் சதி புரிந்தன. ஒருவரையொருவர் புரிந்துகொள்ள முடியவில்லை. ஒருவரைப் பற்றி ஒருவர் ஆராய்ந்து உண்மைகளைத் துருவித்துருவித் தேடினர். சந்தேகங்கள் இரண்டு பக்கமும் கோரத்தாண்டவம் புரிந்தன. தனித்தனி அறையில் உட்கார்ந்து கண்ணீர் வடித்தனர். ஒருவருடைய போக்கு ஒருவருக்குப் பிடிக்கவில்லை.

தன வேலையின் நிமித்தம் செல்லும் டால்ஸ்டாய் இரவில் நேரங்களித்தே வீடு திரும்புவார். சில நாட்கள் மனைவி தூக்கத்தில் ஆழ்ந்த பின்பே வீட்டுக்கு வருவார். வீட்டைப்பற்றிக் கவலை கொள்ளாத இவருக்கு மனைவி ஒருத்தி எதற்கு? என்று நினைப்பாள். எதையும் மெல்லவும் முடியாது விழுங்கவும் முடியாது தவிப்பாள். தான் வாழ வேண்டுமெனறு நினைத்த பெரு வாழ்வு இதுதானா என்று தனக்குத்தானே கேட்டுக்கொள்வாள்.

அவருடைய வாழ்க்கை ரகசியத்தை ஆராய்ந்த அவளுக்கு மிக மிக வேதனையாகிவிட்டது. தன் கணவன் ஒரு எழுத்தாளர் என்று பெருமை கொண்டிருந்த அவள், அவருடைய ரகசியங்களை அறிந்தபோது, ரஷ்ய நாட்டில் எழுத்தாளனுடைய வாழ்க்கையே இப்படித்தானிருக்குமா? என்று எண்ணினாள். வனப்பு மிக்க தன் எழுத்தின் மூலம் தன் கணவர், ரஷ்ய நாட்டின் இளம் பெண்கள் உள்ளத்தை எல்லாம் கவர்ந்திருந்தார் என்பது சோன்யாவுக்கு இப்பொழுதுதான் தெரிய வந்தது. அவர் நடத்திய காமலீலைகளையும், ரஷ்ய நாட்டின் எழில்மிக்க சீமாட்டிகள் பலரின குறிப்புக்களையும் அவரது குறிப்பேட்டில் கண்ட அவள் உள்ளம் வேதனைத் தீயில் வெந்து கருகியது. அவர் வெளியில் சென்றபோதும், அவர் தங்கியிருக்கும் இடத்திலும் அலெக்சாண்டரா இருந்தாள் எனறு கேள்விப்பட்டால் போதும்! சோன்யாவுக்கு அரை உயிர் போய்விடும். அலெக்சாண்டராவுடன் அவர் கொண்டிருந்த காதல் தொடர்பை சோன்யா அறிந்திருந்தாள். "நவீனம் எழுதக் குறிப்புத்தேடப் போகிறேன் என்று என்னிடம் பொய் சொல்லிவிட்டுத் தன் பழைய காதலியான அலக்சாண்டராவைத் தேடிக்கொண்டு போகிறார். இன்னும் அந்த உண்மை எனக்குத் தெரியவில்லை என்று இவர் நினைக்கிறார்?" என்று வருந்தினாள். ஓல்கா என்ற பெண் அவருக்கு உறவினள். அவள் சில சமயங்களில் அவரோடு வந்து உரையாடித் தன் ஓய்வுநேரங்களைக் கழித்துவிட்டுச் செல்வாள். அவள் வீட்டுக்கு வந்துவிட்டால் போதும்! "அவர் என்ன, இன்னும் திருமணமாகாத பிரமச்சாரியா?" என்று முணுமுணுப்பாள் சோன்யா.

அவர் பிறரோடு சேர்ந்து உரையாடி, மகிழ்ச்சியாகக் காலம் கழிப்பதை சோன்யா வரவேற்றாள். ஆனால் தன் மீது கொண்டுள்ள சந்தேகத்தை இன்னும் போக்கிக்கொள்ளாமலிருக்கிறாரே என்றுதான் வருந்தினாள். தன் மனைவியின் சோன்யா மீது அவர் கொண்டிருந்த ஐயத்திற்கும் பொறுமைக்கும் அளவேயில்லை. பாலினேவ் என்ற சொல் அவர் காதில் விழுந்துவிட்டாலே போதும்!" அவன் என்ன மாஸ்கோவுக்கு வந்திருக்கிறானா?

என்று கேட்கத் தொடங்கிவிடுவார். பாவம்! பாலினேவ் வேறு வேலையினிமித்தம் மாஸ்கோ வந்திருந்தால்கூட அவர் சோன் யாவை ஒரு மாதிரியாகப் பார்க்கத் துவங்கிவிடுவார். குரோதம் அவரது உள்ளத்தில் கொழுந்துவிட்டு எரிந்துகொண்டிருந்தது. யாராவது ஒரு இளைஞனிடம் சோன்யா பேசவேண்டிய சந்தர்ப் பம் நேர்ந்துவிட்டாலே அவரைச் சந்தேகம் அணுவணுவாகப் பிய்த்துத் தின்னத் தொடங்கிவிடும். இதன் காரணமாகவே ஒரு சமயம் அவர் நோய்வாய்ப்பட்டார். இன்பம் என்பது அவரு டைய வாழ்க்கையிலிருந்து எட்டாத தூரத்திற்குச் சென்றுவிட் டது. வீட்டுக்கு வரும் நண்பர்கள் மீதெல்லாம் அவருடைய சந்தேகப் புத்தி தீவிரமாக வேலை செய்தது. நெருங்கிய சில நல்ல நண்பர்கள் வீட்டுக்கு வந்தால் கசப்பாக முகத்தை வைத் துக்கொண்டு இரண்டு நல்ல சொற்கள் கூடப் பேசமாட்டார்.

பிஸரோவ் என்ற இளைஞன் ஒரு சமயம் அவருடைய வீட்டுக்கு வந்திருந்தான். அவன், உறவினனும் நண்பனுமா வான். வீட்டுக்கு வந்த விருந்தினரை வரவேற்க வேண்டாமா? சாதாரண குடும்பங்களில்கூட ரஷ்ய நாட்டில் இந்த விருந் தோம்பல் கண்ணியமான முறையில் நடந்து வந்தது. இதைத் பிஸரோவுக்கு சோன்யா செய்தாள். ஆனால் பிஸரோவுக்குச் செய்த உபசாரத்தைக் கண்ட டால்ஸ்டாய் ஐயப் பேய்க்கு ஆளானர். அவன் மீது தன் மனைவி அளவுக்கு மீறி அன்பு காட்டுவதாகக் குற்றம் சாட்டினர். விருந்தினரை உபசரிப்பதுகூடத் தவரு? எனறு உள்ளம் குலைந்து போனள். பிஸரோவ் தன் வீட்டிலிருப்பதும், அவன் சோன்யாவோடு உரையாடுவதுங்கூட அவருக்குப் பிடிக்கவில்லை. தான் வீட்டி லில்லாத நேரத்தில் பிஸரோவ், சோன்யாவோடு என்ன செய்து கொண்டிருக்கிருனே என்று ஆராய்ந்தார். அவர் இது விஷ யத்தில் கொண்ட முடிவு மிகவும் விசித்திரமாக இருந்தது. அடுத்த நாள் காலையில் விடிந்ததும் விடியாததுமாய், தூங்கிக் கொண்டிருக்கும் பிஸரோவைத் தூக்கி வண்டியில் போட்டாவது அவனை ஊரில் கொண்டுபோய் விட்டு வரும்படி தன் வேலைக் காரனுக்கு உத்தரவு போட்டார்!

பழக்கமில்லாத வேலைகளை யெல்லாம்கூட சோன்யாவே செய்தாக வேண்டுமென்று கண்டிப்புச் செய்தார். ஒரு சமயம் மாட்டுத் தொழுவத்தில் சோன்யா மயக்கம் போட்டு விழுந்து விட்டாள். அப்பொழுது சோன்யா கர்ப்பிணியாக இருந்தாள். அதைக் கண்டும் டால்ஸ்டாயின் உள்ளம் சிறிதும் இரங்கவேயில்லை. பண்ணை விஷயத்தில் மிகவும் அதிகமான வேலைகளை அவளது பொறுப்பில் ஒப்படைத்துக் கவனித்து வரச் சொன்னார். சோன்யா மிகவும் சிரமப்பட்டாலும் அவைகளை யெல்லாம் செய்யத் தவறவில்லை. குடும்ப விவகாரங்களையும் பண்ணை வேலைகளையும் அவள் எவ்வளவு சிரமப்பட்டு கவனித்து வந்தாலும் தான்கொண்டுள்ள சந்தேகத்தை மட்டும் அவர் போக்கிக்கொள்ளவில்லை.

ஒரு சமயம் பண்ணைக்கு வந்த ஆசிரியர்களிடம் சோன்யா சிறிதுநேரம் உரையாடிக் கொண்டிருந்துவிட்டாள். உடனே டால்ஸ்டாய் கோபித்துக் கொண்டார். தன்னை அவள் அவமானப்படுத்திவிட்டதாகக் குற்றம் சாட்டினார். வேளாண்மையில் ஈடுபட்டிருந்த காலத்தில் டால்ஸ்டாய் உணவு நேரமானதும் வீட்டுக்கு வரமாட்டார். சோன்யாதான் மைல் கணக்காக நடந்து உணவு கொண்டு செல்ல வேண்டும். வருமானம் செலவைச் சரிக்கட்ட முடியவில்லை. வருமானத்தைப் பெருக்க வழி தேடினார். கலப்பை பிடிப்பதால் வரும் வருமானத்தை விடப் பேனா பிடிப்பதால் அதிக வருமானம் கிடைக்கலாம் என்று உணர்ந்தார். தன் மனைவியின் ஆலோசனையும் உதவியும் அவரது எழுத்துத் தொழிலுக்குப் பயன்படாமல் போகவில்லை. ஏழு ஆண்டுகள் இத்துறையில் முழு மூச்சாக ஈடுபட்டார். 'போரும் அமைதியும்' வெளி வந்தது. அது புகழையும் பொருளையும் வாரிக்கொண்டு வந்தது. இதற்காகச் சோன்யா பட்ட கஷ்டம் கொஞ்சநஞ்சமல்ல. இந்த ஏழாண்டு காலத்திலும் அவர் அவளுக்கு மிக அதிகமான வேலைகளைக் கொடுத்துவிட்டார். அவள் தூங்காது கண் விழித்த இரவுகள் கணக்கில. தூங்கின இரவுகள் மிகச்சில. அவள் உதவி இல்லை என்றால் 'போரும் அமைதியும்' வெளிவந்திருக்க முடியாது என்று

அவரே குறிப்பிடுகின்ருர். 'போரும் அமைதியும்' பற்றி வெளி வந்து குவிந்த இலக்கிய விமரிசனங்கள் எண்ணில. அவை களில் சில வசைமாரிகளும் கலந்து வந்தன. 'போரும் அமைதி யும்' என்ற நவீனம் வெளிவந்தவுடன குடும்பத்தில் ஏற்பட்ட போர் அமைதியடைந்தது.

டால்ஸ்டாய் சூதாட்டத்தில் பெற்ற தோல்வியின் காரண மாக ஏராளமாகக் கடன் பட்டிருந்தார். அந்தச் சுமை பெருகி வந்தது. தான் குடியிருந்த வீட்டையே விற்க வேண்டிய நிலே ஏற்பட்டுவிட்டது. நாற்பத்தைந்து அறைகள் கொண்ட அவரது மாளிகையின் பெரும் பகுதியை விற்றுவிட்டார். ஒரு சிறு பகுதி மட்டும் தான குடியிருக்க வைத்துக்கொண்டார். குடும்பத்தில் வறுமை பெருகிக்கொண்டே வந்தது. வீட்டு விவகாரங்களனைத் தையும் அவள் விருப்பத்துக்கே விட்டுவிட்டார். சோன்யா சிற்சில மாறுதல்கள் செய்தாள்.

யாஸ்னயாபோல்யானவில் குடியானர்களுக்கு என்றே ஒரு பல்கலைக்கழகத்தைத் தொடங்கும்படி அரசாங்கத்தைக் கேட் டார். ரஷ்யாவிலுள்ள பழைய கல்வி முறை கேடு பயப்பதாகும் எனவே அது மாறவேண்டுமென்று மறுபடியும் கிளர்ச்சி துவக் கினர். அதற்கேற்றபடி புதுமுறையில் பாடப்புத்தகங்களை எழுதினர். அவருடைய இந்த ஏற்பாட்டுக்குப் போதிய ஆதரவு கிடைக்கவில்லை. அவர் பாடப்புத்தகம் எழுதத் தொடங்கியதும் அதில் வருமானம் இல்லை என்று அறிந்து சோன்யாவே ஒத்து ழையாமைப் போராட்டம் நடத்தினள். இதையறிந்த ரஷ்ய நாட்டின் வெளியீட்டு நிலையங்கள் கடிதங்களின மேல் கடிதங் கள் அனுப்பின. அச்சடிக்கப்பட்ட பக்கம் ஒனறுக்கு ஐநூறு ரூபிள் வீதம் கொடுப்பதாக வாக்களித்தன. எனவே அவர் தம் போக்கை மாற்றிக்கொள்ள வேண்டியதாயிற்று. உடனே 'அன்ன கரீன' என்ற நவீனத்தை எழுதி முடித்தார். இந்த நவீனந்தான் ஐரோப்பிய இலக்கியத்தில் முதலிடத்தைப் பிடித் துக்கொண்டது. இது வெளி வந்ததும் ரஷ்ய மக்கள் கலை உலகில் செருக்கோடு தலைதூக்கி நடந்தனர். அவருக்கு இந்த

நவீனந்தான் இலட்சக்கணக்கான பொருளைத் தேடித்தந்தது. சமாரா வெளியில் ஏராளமான நிலங்களை விலைக்கு வாங்கினர். அங்கு அப்பொழுது பரவிவந்த பஞ்சத்தை விரட்டுவதற்குப் பண உதவி செய்யும்படி பொதுமக்களுக்கு அறிக்கைவிட்டார். விட்ட மாத்திரத்தில் பொதுமக்கள் இருபது இலட்சம் ரூபிளைக் குவித் தனர். இதைவிட வேறு என்ன வேண்டும்? ஆங்கில நாட்டி லேயே நவீனம் எழுதி அதிகமான செல்வத்தை ஈட்டிய சர் வால்டர் ஸ்காட், சார்லஸ் டிக்கன்ஸ் ஆகியவர்கள்கூட இவ் வளவு பொருளையும் புகழையும் சம்பாதிக்கவில்லை.

இதன் பிறகு அவர் வாழ்க்கையில் பெரிய மாறுதல்கள் ஏற் பட்டன. பாதிரிமார்கள் செய்துவந்த கயமைகளைக் கண்டித் தார். மதக்கோட்பாடுகளால் கடைப்பிடித்து வந்த விரதங்களை எல்லாம் வெறுத்தார். குடியானவர்களின் துயர் துடைக்கத் தன்னுலானதைச் செய்யப்போவதாக உறுதி செய்துகொண் டார். அதுவரை அணிந்து வந்த பட்டுப்பீதாம்பரங்களை ஒதுக்கி விட்டுக் குடியானவர்கள் அணிந்துகொள்ளும் உடைகளையே தானும் அணிந்தார். அவர்கள் மத்தியிலிருந்து தானும் வேலை செய்தார். தன் வீட்டுக்கு வேண்டிய பொருள்களைத் தானே செய்யத் தொடங்கினர்.

கிருஸ்து மதக்கோட்பாடுகள் பற்றித் தனக்கென ஒரு தனி யான கொள்கை வகுத்துக்கொண்டார். ஏசுநாதர் மூன்று நாட் களுக்குப்பின் உயிர் பெற்று எழுந்தார் என்பதை அவர் ஏற்றுக் கொள்ளவேயில்லை. அவர் ஒருசமயம் பீட்டர்ஸ்பர்க் போயிருந் தார். அங்கு தன் அன்பைப் பெற்ற சீமாட்டிகளில் ஒருத்தியான அலெக்சாண்டிரினவைச் சந்தித்தார். அவள் கிருஸ்து மதத் தில் தீவிரப் பற்றுக்கொண்டவள். அவரது மதக்கொள்கைகளைக் கண்டு அவள் திகைப்புக்கொண்டாள். அவள் நாள் கணக்கில் அவரோடு வாதத்தில் இறங்கிவிட்டாள். அவர்களுடைய வாதப் போர் மிகவும் பயங்கரமானதாகவே இருந்தது. அவள் தூங்கிக் கொண்டிருக்கும்போது ஒரு கடிதம் எழுதிப் படுக்கையில் வைத்துவிட்டு, அவளிடமிருந்து தப்பினல் போதும் என்று இர

வோடிரவாக ஓடிவந்து விட்டார். அலெக்சாண்டிரினு அதன் பின் தொடர்ந்து பல கடிதங்கள் எழுதினுள். அக்கடிதங்களில் தன் சாகசங்களே யெல்லாம் அள்ளி வீசி அவரைத் தன் கொள்கைக்கு இழுக்க முயற்சி செய்து வந்தாள். ஆனுல் அது முடியாமலே போய்விட்டது. தன் கொள்கையின் காரணமாகப் பலரின் அருவருப்புகளே அவர் தாங்கிக்கொள்ள வேண்டிய தாயிற்று. முன்பு ஒருசமயம் தான் சண்டை போட்டுக்கொண்ட எழுத்தாளர் டர்ஜனீவோடு உறவு கொண்டாடினுர். தன்னு டைய குற்றத்தை மன்னித்து விடும்படி அவருக்குக் கடிதம் எழுதினுர். டர்ஜனீவ் மரணப்படுக்கையில் கிடந்தார். அந்தச் சமயத்தில் டால்ஸ்டாய்க்கு அவர் எழுதிய கடிதத்தில், ரஷ்ய நாட்டு இலக்கியத்துறைக்குச் சாகும் நாள் வரையில் தொண்டு புரியவேண்டும் என்று வலியுறுத்திக் கேட்டுக்கொண்டிருந்தார்.

விவசாயத்தில் ஈடுபட்டுக் கொண்டும், பாட்டாளி மக்களுக் குப் பணிபுரிந்துகொண்டும் பல நவீனங்களேயும்,நாடகங்களேயும் எழுதினுர். அவைகளில் சிலவற்றிற்கு ஜார் அரசாங்கம் தடை யுத்தரவு போட்டது. ஆனுல் அவைகளின் மேன்மையைப் பாராட்டிய சக்கரவர்த்தி அவைகளின் மீதுள்ள தடைகளே நீக் கினுர். இதற்குள் அவருக்கும் அவர் மனேவிக்கும் இடையே ஒரு நூறு தடவைகள் பிணக்குகளும் பூசல்களும் தோன்றிவிட் டன. 'குருட்ஸர் ஸொனேடா' என்ற நவீனத்தில் டால்ஸ் டாய் தன் மனேவியின் பிடிவாதங்களேயும் கொடுமைகளேயுமே எழுதியுள்ளார் என்ற செய்தி வாசகர்கள் வட்டாரத்தில் மிகத் தீவிரமாகப் புகைந்துகொண்டிருந்தது. இதையறிந்த சோன்யா "தவறு யாருடையது?" என்ற பெயரில் 'குருட்ஸர் ஸொனேடா' என்ற நவீனத்துக்கு விமரிசன நவீனம் ஒன்று எழுதி வெளியிட்டாள். குடும்பத்தில் நிகழும் எல்லாவிதமான சண்டை சச்சரவுகளுக்கும், சந்தேகங்களுக்கும் கணவன்தான் காரணமே தவிர மனேவியல்ல என்பதை தர்க்கரீதியாக நிலேநாட்டியிருந் தாள் அந்த நாவலில்.

தான் எழுதும் நவீனங்கள் அனேத்தையும் பிரசுரிக்கும் உரிமையைத் தன் மனேவியிடம் ஒப்படைந்திருந்தார். அதற்காக

வருகின்ற வருமானம் முறையற்றது என்று கருதினர். தன் தொண்டர்களிடம் அந்த உரிமையைக் கொடுத்து யார்வேண்டு மானாலும் இலவசமாகப் பதிப்பித்துக் கொள்ளலாம் என்ற ஏற் பாட்டைச் செய்யவிருந்தார். ஏசுநாதரோ அவருடைய சிஷ்யர் களோ யாரிடமாவது பணம் வாங்கிக் கொண்டா தங்களுடைய கருத்துக்களை மக்களுக்குப் போதித்து வந்தனர் என்று நினைத் தார். அவருடைய இந்தக் கருத்தில் அவருடைய மனைவி சோன்யா முழு மூச்சாகக் குறுக்கிட்டுத்தடுத்தாள். மனைவியோடு எதிர்த்து நின்று போராட அவரால் முடியவில்லை. உலகத்தில் உள்ளவர்கள் எல்லாம் டால்ஸ்டாய் கோமகன் மிகுந்த செல்வத் தோடு மகிழ்ச்சியாகக் காலம் கழிக்கிறார் என்று நினைக்கிறார்கள். ஆனால் வீட்டில் நான் நடத்துகின்ற நரக வாழ்க்கையைப் பற்றி யாரிடமும் எதுவும் சொல்ல முடியாத ஊமையாக வாழ்ந்து வருகிறேன் என்பதை யார் அறியப் போகின்றனர்? வீட்டிலும் பண்ணையிலும் நடைபெறும் எந்த முக்கிய காரியமானாலும் என்னையறியாமலேயே நடைபெறுகின்றது. நான் பைத்தியக் காரன் என்று கருதப்படுகிறேனோ அல்லது இறந்து விட்டதா கவே கருதப்படுகிறேனோ என்பதும் எனக்குப் புரியவில்லை. என் வீட்டினரால் கொடுமையாக நான் நடத்தப்படுவதை விட வேறு யாராலும் அவ்வளவு கொடுமையாக நான் நடத்தப்படமாட் டேன் என்பது உறுதி. 'நீ மட்டும் எனக்குத் தந்தையாக இல் லாதிருந்தால் உன்னை என்றைக்கோ சுட்டுக்கொன்றிருப்பேன்' என்று ஒரு மகன் என் முன் நின்று கூறுகிறான். என் மனைவி என்னைப் பைத்தியக்கார விடுதியில் கொண்டுபோய் அடைப் பேன் என்கிறாள். என்மகள் யாரோ ஒருவனைத்திருமணம்செய்து கொள்ள வேண்டுமாம்! அதை நான் அங்கீகரிக்கவில்லை என்று கோபங் கொண்டு, அன்புள்ளமில்லாத பாவி என்றுதிட்டுகிறாள். மற்றொரு மகன் என்விருப்பத்துக்கு விரோதமாகப்பட்டாளத்தில் சேர்ந்து கொலைத் தொழிலை மேற்கொண்டுள்ளான். குடியான வர்களுக்கு நான் செய்த நன்மை அனைத்துக்கும் என் மனைவி ஊறு தேடிவிட்டாள். என் கண்ணெதிரிலேயே இதெல்லாம் நடக்கின்றன? வீட்டை விட்டு ஓடிவிட்டாலே தேவலை என்று தோன்றுகிறது. ஆனால் அந்த வலிமையை நான் இன்னு

பெறவில்லை. நண்பர் வீட்டுக்குச் சென்று நான்கு நாள் தங்கி விட்டு வரலாம் என்றாலும், என் மனைவியின் அனுமதிகிடைக்க வில்லை. அவள் என்னை வீட்டிலேயே வைத்து வதைக்கிறாள். என் சிஷ்யர்களைக் கண்டுவிட்டால் என் மனைவி பெண் புலி யைப்போல சீறி எழுகிறாள். அவர்களைக் கண்டபடி ஏசுகிறாள். இதுவா நான் நடத்துகின்ற உல்லாசப் பெருவாழ்வு?'' இப்படிப் பல பல டால்ஸ்டாயின் குறிப்பேட்டில் சிதறிக் கிடக்கின்றன.

ஐரோப்பியநாட்டு இலக்கிய வானிலே இணையற்ற சுடராக டால்ஸ்டாய் ஒளிவிட்ட காலம் அது. எந்தஇடத்திலும் இரண்டு பேர் நின்று பேசிக்கொண்டிருந்தால் அவர்களுடைய உரையாட லில் அவருடைய எழுத்தோவியம் பற்றிய விமரிசனம் காதில் விழாமல் போகாது. ஒரு சமயம் எஸன்கி ரயில்வே நிலையத்தில் நின்றுகொண்டு சுறுசுறுப்பாகத்திரியும் பிரயாணிகளின் மீது தன் நோக்கத்தைச் செலுத்திக் கொண்டிருந்தார். புகைவண்டி யில் உட்கார்ந்திருந்த ஓர் இளம் பெண், அவரை ஒரு கூலிக் காரன் என்று நினைத்துக் கொண்டு, ''ஓய் கிழவனாரே! ரயில் புறப்படவிருக்கிறது. நீர் ஓடிச் சென்று சிற்றுண்டி சாலையிலி ருக்கும் என் கணவரை சீக்கிரம் அழைத்து வாரும்! கூலி தரு கிறேன்!''என்று சொல்லி அவரிடம் தன் கணவனின் அடையா ளத்தையும் கூறினாள். அவர் உடனே ஓடிச் சென்று அவளு டைய கணவனைக் கைப்பிடியாகக் கொண்டு வந்து சேர்த்தார். அவள் கொடுத்த கூலி பத்து கோபெக்ஸையும் பெற்றுக்கொண் டார்.

ஆனால் தனக்கு ஏவல் புரிந்த கிழவனார், டால்ஸ்டாய் கோ மகன் என்று அறிந்தபோது அப்பெண் மிகுந்த வெட்கமும், திகி லும் கொண்டாள். தன் உள்ளத்தை அவரது காலடியில்வைத்து மன்னிப்பு வேண்டினாள். ''நீ என்ன சொன்னாலும் இந்தப் பத்துக்கோபெக்ஸைத் திருப்பித்தர முடியாது. நான் வேலை செய்துபெற்ற கூலி இது! நீ தந்திரமாக அதை என்னிடமி ருந்து தட்டிக் கொண்டு போகப் பார்க்கிறாய்! அது முடியாது!'' என்று நகைச் சுவையோடு சொன்னார். இப்படிச்சுவை நிறைந்த

பகுதிகள் டால்ஸ்டாயின் வாழ்க்கையில் கணக்கின்றி நிகழ்ந்திருக்கின்றன. அவைகளையெல்லாம் பொருக்கிக் கோப்பதென்ருல் ஒரு தனி நூலாகவே அமைந்துவிடும்.

மனத்துக்கு முரண்பாடான அவரது மனைவியின் செயல்கள் அவரை வீட்டை விட்டே வெளியேற்றிவிட்டன. 1910-ம் ஆண்டு அக்டோபர் மாதக் கடைசியில் அவர் யாருக்கும் தெரியாமல் நள்ளிரவில் வீட்டை விட்டு வெளியேறிவிட்டார். அவர் செல்லும்போது தன் மனைவிக்கு ஒரு கடிதம் எழுதி வைத்து விட்டுச் சென்ருர். கல் மனத்தையும் கரையச் செய்யும் தாபம் தொனிக்கும் அக்கடிதத்தைப் பார்த்துவிட்டுச் சோன்யா அலறித் துடித்தாள். அவள் இறந்தேபோயிருப்பாள். ஆனல் அவளுடைய பிள்ளைகள் மிக கவனமாகக் கவனித்து வந்தனர். நாற்பத்திரண்டு ஆண்டுகள் தன்னேடு இல்வாழ்க்கை நடத்தின சோன்யாவுக்கு வந்தனமும் நன்றியும் தெரிவித்து விட்டுத் தன் குற்றங்களை மன்னித்து விடும்படி அக்கடிதத்தில் கேட்டிருந்தார். பனிரண்டு நாட்களுக்குப் பின் அவர் வீடுதிரும்பினர்! ஆனல்... உயிர் மட்டும் அவரது உடலில் தங்கியிருக்கவில்லை. அவரது விருப்பப்படியே யாஸ்னயா போல்யானவில் எவ்வித மதச் சடங்குமின்றி எளிய முறையில் அவரது உடல் அடக்கம் செய்யப்பட்டது. அவரது மறைவுக்காகக் கண்ணீர் வடிக்காத ரஷ்ய நாட்டுக் குடிமக்களே இல்லை.

இவருடைய சிறு கதைகளிற் பல பைபிளில் காணப்படும் பொன் மொழிகளுக்கு விளக்கமாக அமைந்தன. ஒரு கோழி முட்டையின் காரணமாக இரு பெண்களிடையே எழுகின்ற சண்டை கடைசியில் எப்படிப் போய் முடிகின்றது என்பதை ஒரு சிறு கதையில் மிகச் சுவாரசியமாகச் சித்தரிக்கின்ருர். நாவல்களிலும் பைபிள் கருத்துகள் ஏராளமாகக் காணப்படுகின்றன.

அன்னகரீனு என்ற நாவலில் பல இடங்களில் பைபிள் கருத்துகள் வலியுறுத்தப்பட்டுள்ளதைக் காணலாம். அன்னகரீனு ஒரு பெண்ணின் உண்மையான வாழ்க்கையைத்தழுவியது என்று சில திறனய்வாளர்கள் கருதுகின்ருர்கள். காதலில்

தோல்வி கண்ட ஒரு பெண்ணின் உணர்ச்சிகளைச் சித்தரிக்க விரும்பிய டால்ஸ்டாய் அன்னகரீனவில் அந்த விருப்பத்தைப் பிரதிபலித்துக் காட்டினர். துன்பகரமான காதல் விவகாரத்தில் ஈடுபட்டுத் தற்கொலை செய்து கொள்ளத்துணிந்து புகை வண்டியின் முன் விழுந்து உயிரை மாய்த்துக்கொள்ளத் துடிக்கும் ஒரு பெண்ணின் சோக உணர்ச்சிகளை அவர் சித்தரிக்கின்றதைப் படிக்கும் எந்த வாசகரும் அவளுக்காக வருந்தி உருகாமலிருக்க முடியாது.

"பழி வாங்குவது என்னுடையது, அதை நான் திரும்பக் கொடுப்பேன்! (Vengeance is mine, I will repay) என்பது கர்த்தருடைய வாக்கு", இதை டால்ஸ்டாய் தன்னுடைய அன்னகரீன என்ற நாவலில் தெளிவாக எடுத்து விளக்கிக் காட்டுகின்ருர். மற்றவர்களுக்குத் தீர்ப்புக் கூற மனிதர்களுக்கு உரிமை கிடையாது. மனித இனத்தின் உறவுக்கு உதவ ஒரே ஒரு விதிதானிருக்கிறது-அது அருள் தான்!"

தன்னுடைய ஐம்பதாவது ஆண்டில் அவருக்கு மூளைக் கோளாறு ஏற்பட்டது. அச்சமயந்தான் அவருடைய, 'என்னுடைய உண்மைகள்' (My confessions)என்ற நூல் வெளியாயிற்று. இந்நூலில், அவர் தம்முடைய இளமைப் பருவத்தில் கண்டவைகளை வகுத்துக் காட்டுகின்ருர். 'தன்னுடைய இனத்தைச் சார்ந்தவர்கள் எவ்வாறு நடந்து கொள்ள வேண்டுமென்று உபதேசிக்கிருர்களோ அந்த மதச் சட்டங்களின்படி சிறிதுகூட இந்த உபதேசிகள் நடப்பதில்லை. ஆனல் அதற்கு முற்றும் மாருக நடக்கிருர்கள்!' என்று மனம் வருந்திக் கூறியிருக்கிருர். "மதப் பிரசாரம் செய்கின்றவர்கள் தங்களுடைய வாழ்க்கையிலேயே கண்ணுங்கருத்துமாக இருக்கிருர்களே தவிரப் பிறருடைய வாழ்க்கையைப் பற்றி நினைப்பதே இல்லை. ஆனல் பிறருடைய வாழ்க்கை தான் தங்களுடைய நம்பிக்கை என்று போலி வேசம் போடுகிருர்கள் என்று அந்நூலில் குறிப்பிட்டிருக்கிருர்.

"பழம்பித்தாகளான ஆன்மீகவாதிகளின் வெளிப்படையான தொழில் பெரும்பாலும் புத்திகூர்மை யில்லாதவர்களிடமும், கண்டிப்பான குணம் கொண்டவர்களிடமும் காணப்படுகிறது. அவர்கள் அது தங்களுக்கே உரியமுக்கியமானதாகக் கருதினர். புத்திசாலித்தனம், நேர்மை, கபடமின்மை, தூய்மையுள்ளம், ஒழுக்கமான நடத்தை ஆகிய இவைகளெல்லாம் கடவுள் நம்பிக்கையற்றவர்களிடந்தான் மிகுதியாக காணப்படுகின்றன."

என்று தன்னுடைய எண்ணத்தைத் துணிவாகக்கூறினர். ரஷ்ய நாட்டு எழுத்தாளர்கள், தாங்கள் கண்ட உண்மைகளை மறைக்காமல் கூறுகின்றவர்கள் என்று மேற்கு ஐரோப்பிய மக்கள் கருதியதற்கு டால்ஸ்டாய் போன்றவர்களின் இத்தகைய கூற்றுகளே சான்றுகளாக அமைகின்றன. தன் சொந்த வாழ்க்கையின் எல்லாப் பகுதிகளையும் மறைக்காமல் கூறிய அவர் உலகில் தான் கண்டு, கேட்ட உண்மைகளை மட்டும் மறைத்துக் கூற விரும்பவில்லை. தன்னுடைய நண்பர்களிடமே இவைகளைப்பற்றி விவாதித்துச் சண்டைபோட்டிருக்கிறார்.

'என்னுடைய உண்மைகள்' என்ற நூலில் டால்ஸ்டாய் தன்னுடைய சமயக் கருத்துக்கள் முழுவதையும் கூற முடியவில்லை. எனவே மதத்தைப் பற்றியே ஒரு தனி நூல் எழுதினர். 1884ஆம் ஆண்டில் அவருடைய 'என்னுடைய சமயம்' என்ற நூல் வெளி வந்தது. அதில் அவர், தன்னுடைய சமய நெறிகளைத் தெளிவுபடுத்தியுள்ளார்.

'நற்பண்புகளுள்ள உண்மையான வாழ்க்கைக்காக என்னுடைய இதயத்தின் ஆசைகளைக் கூறுவதற்கு நான் ஒவ்வொரு சமயமும் முயன்றேன். நிந்தனையையும்ஏளனச்சிரிப்பையுந்தான் நான் கண்டேன். ஆனல் என்னுடைய கீழ்த்தரமான உணர்ச்சிகளுக்கு நேரடியாக இடம் கொடுத்தேன், - நான் போற்றப்பட்டேன்; ஊக்குவிக்கப்பட்டேன்.'(Every time I tried to express the longings of my heart for a truly virtuous life, I met with contempt and decisive laughter, but directly I gave way to the lowest of my passions I was praised and encouraged)

என்று 'என்னுடைய சமயம்' என்ற நூலில் குறிப்பிடுகின்றார்.

தான் பெற்ற நேர்மையான அறிவுத்திறனைக் கொண்டு மாதாகோவிலின் சுற்றுச் சுவருக்குள் என்ன நடக்கிறது என்று தேடிப்பார்க்கத் தொடங்கினர். அங்கு மூடக்கொள்கைகளும், பழைய பழக்கவழக்கங்களுமே இடம் பெற்றிருந்தன. பகுத்தறிவுக்கும் உண்மை மனித வாழ்வுக்கும் நேர்மையான வாழ்வுக்கும் நேர்மையான வாழ்க்கை முறைக்கும் அங்கு சிறிது கூட இடமில்லை என்று கண்டார். சமயத்துறையில் அவர் கொண்ட கொள்கை முழுவதையும் வைதிக மதவாதிகள் பலமாக எதிர்த்தனர். இதனல் அவர், மதவாதிகளின் தொடர்பையும், மாதாகோவில்களின் தொடர்பையும் முற்றிலும் அறுத்துக் கொண்டு தன்னுடைய சொந்தக்கருத்து வளருவதற்கு இடம் கொடுத்தார். தன்னுடைய கருத்தைக் கூறுவதற்கு அவர் எப்பொழுதும் பின் வாங்கியதே கிடையாது.

பிறகு 1899 ஆம் ஆண்டில் டால்ஸ்டாயினுடைய கலை என்றல் என்ன? (What is art) என்ற நூல் வெளிவந்தது. கலையையும் அறிவியலையும் பற்றி மிக விளக்கமாகத் தன்னுடைய கருத்தை வெளிப்படுத்தினர். கலையையும் அறிவியலையும் பற்றி டால்ஸ்டாய் கொண்ட கருத்தைப் படித்த பலர் அதற்குமுக்கியத்துவம் கொடுத்து ஏற்றுக்கொள்ளவில்லை. ஆனலும் அவருடைய கருத்தைக் கண்டவர்கள் அவர் மீது கருணை காட்டத் தவறமாட்டார்கள். உலக இலக்கியத்தில் டால்ஸ்டாய்க்கு முக்கிய இடம் பெற்றுக் கொடுத்தவை - அவருடைய கருணையும், தன் உணர்வும் தோய்ந்த குணப்பண்புகள்தான் என்றல் அது மிகையாகாது.

—

டால்ஸ்டாயின் கடிதங்கள்

இந் நூலில் வெளியிடப்பட்டிருக்கும் கடிதங்கள் 1856-1857 ஆம் ஆண்டுகளில் லியே டால்ஸ் டாய் இருபத்தெட்டு ஆண்டு நிரம்பிய இளைஞனாக இருந்தபோது வலிரியா அர்சனேவ் என்ற இளம்பெண் ணுக்கு எழுதியவைகளாகும். கிரிமியாவிலிருந்து டால்ஸ்டாய் திரும்பியபோதே தன்னுடைய திருமணத் தைப் பற்றி நினைத்துக் கொண்டிருந்தார். வலிரியா அர்சனேவ், டால்ஸ்டாயின் அண்டை வீட்டு மிராசுதா ரரின் மகள். மாஸ்கோவிலிருந்து யாஸ்னயா போல்யானா என்ற தன்னுடைய ஜமீனுக்குத் திரும்பிச் செல்கின்ற வழியில் டால்ஸ்டாய் அவளைச் சந்தித்தார். சந்தித்த வுடன் இருவரும் காதல் கொண்டனர்.

வலிரியாவும் அவளுடைய இரு சகோதரிகள் ஓல்கா வும், ஸினியாவும் நாகரிகமிக்க தம் அத்தையின் வீட் டில் வசித்து வந்தனர். அவர்களுடன் வசித்துவந்த வெறொரு பெண் மேடம் வர்கானி என்ற பிரெஞ்சுக்காரி. 1856 ஆம் ஆண்டு ஆகஸ்டு 26ந் தேதி ரஷ்ய ஜார் மன்னனாகிய இரண்டாம் அலெக்சாண்டருக்கு நடை பெற்ற முடி சூட்டு விழாவில் கலந்து கொள்வதற்காக வலீரியா தன் குடும்பத்துடன், தனது சுடாகோவ்ஜமீனை விட்டு மாஸ்கோவுக்குச் சென்றாள். முடிசூட்டு விழாவின் போது தான் பெற்ற மகிழ்ச்சியையும் களிப்பையும் குறித்து டால்ஸ்டாயின் அத்தைக்கு நீண்ட கடிதம்ஒன்று

அவள் எழுதியிருந்தாள். டால்ஸ்டாய் அக்கடிதத்தைப் படித்துவிட்டுக் கீழே கண்டபடி அவளுக்கு உடனே ஒரு கடிதம் எழுதினர். முதல் தடவை அவள் தனக்கு ஒரு கடிதம் எழுதாமல் தன்னை ஏமாற்றிவிட்டதாக உணர்ந்தார். பிறகு அவளிடமிருந்து நம்பிக்கையான கடிதங்கள் சில கிடைக்கப் பெற்ருலும் அவர் அவளைத் திருத்த வேண்டுமென்ற நோக்கத்தோடு அறிவுரைகளாகவே தன் கடிதங்களை அமைத்தார். சில கடிதங்களில் நையாண்டிச் சுவையைக் கையாண்டு அவளுக்கு எரிச்சலையுண்டுபண்ணிஞர். அவள் டால்ஸ்டாய் மீது கோபம் கொண்டு கடிதம் எழுதாது மௌனமாக இருந்துவிட்ட காலத்திலும் கோபமாக வேனும் கடிதங்கள் எழுதியனுப்பும்படி அவளுக்கு எழுதினர்.

ஆகஸ்டு 23உ 1856.

சுடாகோரவ் பெண்மணி அவர்களே!

தங்கள் இனிய கடிதம் வந்து சேர்ந்தது. வலீரியா! நானே முன்வந்து உனக்குக் கடிதம் ஏன் எழுகின்றேன் என்பதன் காரணத்தை என் முதல் கடிதத்தில் விவரித்தபிறகு, உனக்கு இதை நான் எழுதுகிறேன். ஆனல் முன்பு எழுதின கடிதத்துக்கு முற்றும் மாறுபாடான மன நிலையில் இதனை எழுது கிறேன். அப்பொழுது, என் இதயத்திலிருந்து எழுந்து கொண்டிருந்த அன்பை எவ்வளவு கஷ்டப்பட்டுத் தடுக்க முடியுமோ அவ்வளவு கஷ்டப்பட்டுத் தடுக்க முயன்றேன். ஆனல் இப்பொழுது, நீ என் அத்தைக்கு எழுதின கடிதத்தைப் பார்த்த பிறகு, என் உள்ளத்தில் எழுகின்ற அமைதியான பூசலைத் தடுக்கவேண்டியிருக்கிறது. அமைதியான பூசல் மட்டுமல்ல. துக்கமும், ஏமாற்றமுங்கூட. இன்பங்களின் சிகரத்தில் எப்பொழுதுமே அந்த மெய்க்காப்பாளன் உன்னிடத்தில் இருக்கப்போகின்ருன? அப்படியானல் இது மிகவும் கொடுமையானது. இதை ஏன் நீ எழுதினய்? என்னை நீஅறிவாய்—இதைக் கண்டு நான் எவ்வளவு வெறுப்பு அடைவேன் என்றும்

உனக்குத் தெரியும். என்னுடைய அத்தைக்குத்தான் அதை நீ எழுதினயா? நான் நினைக்கிறேன், அது அயலான் ஒருவனுக்கு மறைமுகமாக அறிவிக்கும் மிக மோசமான வழிகளில் ஒன்ரு கும். அதுதான் என்னுடைய கருத்து என்று உனக்குச் சொல்ல விரும்புகிறேன். உன்னுடைய புகழ்ச்சிகளின் சிந்தனை யானது மௌனமாகச் சென்றிருந்தால் இந்தச் செயலில் உனக்கு நன்மை உண்டு. மக்கள் உன்னைப்பற்றி மிகவும் அதிகமாக நினைப்பார்கள். நீயே உன்னைப்பற்றிக் கூறுவதையும் மேன்மையாக நினைப்பார்கள். அடுத்தபடியாக, இரண்டாவது மனிதன் ஒருவன் இதைப்பற்றிச் சொன்னல், அப்பொழுது உன் கற்புக்குப் புதிய மதிப்பு ஏற்படுகிறது. இது கவிதையோ, தத்துவமோ அல்ல. சாதாரணமாக, தற்பெருமை பிடித்தவர் களின் முடிவு இதுதான்! பிரயாண உடைகளைவிடப் பத்துலட்ச மடங்கு மிகுதியான அளவு நவநாகரிக முறைகளில் நீ மோகம் கொண்டிருப்பாய் என்று நான் கூறினல் நீ மறுக்கமுடியாது என்று நினைக்கிறேன்.

மேன்மையான கூட்டத்தின் தொடர்பையே விரும்பிக் கொண்டிருக்க, மனிதன் அவநம்பிக்கைக்காரனல்லன். இன்னும் பயங்கரவாதியுமல்லன். மிகவும் மட்ட ரகமான மனிதர்களை வேறெந்தச் சூழலையும்விட மேன்மை வாய்ந்த குழுக்களில் தான் அதிகமாகச் சந்திக்க முடியும். அது உனக்கு மதிப்பில்லை. நடைமுறையில் பின்பற்றுகின்ற உயர்ந்த பண்பாட்டையும் அழகிய முக அமைப்பையும் உடைய உயர்ந்த கூட்டத்தை நீயோ சார்ந்தவளன்று. ஆகையால் உனது உறவினர்களுக்கு மகிழ்ச்சியுமிருக்காது – மதிப்பும் இருக்காது. மெய்க்காப்பாளர் கள் மட்டும் நாற்பது பேர்கள் இருப்பதாக எல்லோரும் சொன்னர்கள் என்று நம்புகிறேன். நான் நினைத்துப்பார்த்த வரையில் அவர்களில் இரண்டுபேர் மட்டும் அயோக்கியர் களாகவோ, முட்டாள்களாகவோ இருக்கமுடியாது. ஆகையால் இதில் கொஞ்சம் மகிழ்ச்சியடையக் காரணமிருக்கிறது. அணி வகுப்பில் உன்னுடைய நவநாகரிக ஆடை கசங்கியது பற்றி நான் எவ்வளவு மகிழ்ச்சியடைகிறேன்! அதிலிருந்து உன்னை

வெளியேற்றிய பெருமகன் எவ்வளவு பெரிய முட்டாள் தெரியுமா? நான் அவனுடைய இடத்தில் இருந்திருந்தால் நானும் கூட்டத்தில் சேர்ந்துகொண்டு உன்னுடைய நவ நாகரிக ஆடையின் மீது மோதி அடையாளம் ஏதாவது செய்திருப்பேன். உறுதியாக நீ ஆபத்தான நிலையிலிருந்திருக்கமுடியாது. ஆகையினால்தான் நான் இதைச் சொல்கிறேன். 'பிக்விக்' என்பவன் ஒரு அணி வகுப்பின் நடுவில் சிக்கி, நசுங்கிக் கிட்டத்தட்ட செத்தேபோனான். அவனுடைய கதையை நீ படித்ததில்லை. ஆனால் ஒரு பெண், முடிசூட்டு விழாவில் – இசை கற்றுக்கொள்ளவந்தவள், அணிவகுப்பில் ஒன்று மறியாத பெரு மகிழ்ச்சியில் நசுங்கிச் சாவதென்பது – என்னுடைய வாழ்நாளிலேயே கேட்டறியாத செய்தியாகும். ஆகையால் இது நடந்திருக்கமுடியாது. ஆச்சரியமான பருவநிலை ஊரில் நிலவுகிறது. இன்று காலை ஆறு மணியிலிருந்து மாலை எட்டு மணி வரையிலும் வேட்டையாடுவதற்கு வெளியில் சென்று வந்தேன். மிக உயர்ந்தவராக நீ கருதும் அந்தச் சேம்பர்லேன் பிரபுவும், சிறந்த ஆடைகளுக்கிடையே ஜ்வலிக்கும் எந்த அழகியும் அடையமுடியாத இன்பத்தை நான் அனுபவித்தேன். ஆகையினால் உன்னை நேரிலேயே பார்த்து என் ஆத்திரத்தைப் போக்கிக்கொள்ள மாஸ்கோவுக்கு வர விருப்பமுள்ளவனாக இருந்தாலும், வரமுடியவில்லை. எல்லா இன்பங்களும் உனது விருப்பம்போல் கிடைப்பதாக என இறைவனை வேண்டுகிறேன். கசப்பான முடிவுகளோடும், மகிழ்ச்சியிழந்த மன நிலையுடனும் இருக்கும் உனது தாழ்மையான அன்பன்,

கவுண்ட். லியோ டால்ஸ்டாய்.

மிகவும் பொருள் பொதிந்துள்ள இனிமையான............ அந்தத் தொடரைச் சேர்க்க மறந்துவிட்டேன்; மன்னிக்கவும்.

இல்லை, விளையாட்டு ஒருபுறமிருக்கட்டும், இப்படி எழுதியதற்கு என்னை மன்னித்து விடுவாயானால் நீ மிகவும் நல்லவள்தான். மேடம் வர்கானி! அன்பு கூர்ந்து என் சார்பில் வலீரியாவோடு நீ வாதாடு!

டால்ஸ்டாயின் இந்தக் கடிதத்துக்கு வலீரியா மறுமொழி எழுதவேயில்லே. அதற்கு மன்னிப்புக் கேட்டுக்கொண்ட பிறகே அவளிடமிருந்து மறுமொழி பெறுவதில் அவர் வெற்றி பெற முடிந்தது. முடிசூட்டு விழா முடிவடைந்ததும் அவள் தன் குடும்பத்துடன் சுடாகோவோவுக்குத் திரும்பி வந்து சேர்ந்தாள். அதன் பிறகு டாஸ்ஸ்டாய் எந்நேரமும் ஏதோ ஒரு காரணத்தைச் சொல்லிக்கொண்டு அவள் வீட்டிலேயே காணப்பட்டார். ஆனுல் அவர்கள் ஒருவருக்கொருவர் தங்களுடைய காதலே மறைவான பரிசோதனைக்கு விட்டுப் பார்க்கவேண்டுமென்று முடிவு செய்தார்கள். அதனுல் இரண்டு மாதங்களுக்குப் பீட்டர்ஸ்பர்க்குக்குச் சென்றுவிட்டார். அவர் செல்கின்ற வழியில் மாஸ்கோவிலிருந்து கீழ்க்கண்ட கடிதம் எழுதினுர்.

கடிதம் 2

1856–நவம்பர் இரண்டாம் நாள்,
மாஸ்கோ.

நேற்றிரவு இங்கு வந்து சேர்ந்தேன். இன்று காலேயில் எழுந்தவுடன் உன்னேப்பற்றித்தான் நினைத்தேன். அது குறித்து நான் மிகவும் மகிழ்ச்சியடைகின்றேன். அதனுல்தான் எழுதுவதற்கும் உட்கார்ந்தேன் – கொடுத்த வாக்கை நிறைவேற்ற வேண்டுமென்பதற்காகவன்று. ஆசை கொண்டேன், உனக்கு எழுதவேண்டுமென்ற உணர்ச்சியால் இழுக்கப்பட்டேன். பயணம் முழுவதும் உன் அன்பிற்குரிய அந்தச் சிறுபுத்திக்காரன் முற்றிலும் முறை தவறிப்போய் அருத்தமில்லாது ஏதோ பேசினுன். அவன் பேச்சு விளேயாட்டாகக் காணப்பட்டாலும் உண்மைக்கு முரணுக அவன் போட்ட திட்டங்கள் அவனிடத்தில் எனக்கே பயம் ஏற்படும்படி செய்துவிட்டன. அதன் முடிவு, அவன் சுடாகோவோவுக்குத் திரும்பிப் போகவேண்டுமென்ருன். அவனுடைய முழு முட்டாள் தனத்தையும் கூறவேண்டுமானுல் உன்னிடமிருந்து அவனேப் பிரிக்க முடியாது. நான் அவனேடு மகிழ்ச்சியாகச் சென்று கொண்டிருந்தபோது அவனுடைய உரையாடலேக் கேட்டேன். பிறகு,

அவனது பேச்சில் சிறிதுகூட என்னால் கவனம் செலுத்தமுடிய வில்லை. ஆனால், அவன் உண்மையைக் கூறத் தொடங்கிய போது அவனுடைய நண்பன் – அந்த நல்ல மனிதன் – நீ காதலிக்காத அந்த மனிதனும் உண்மையறியத்தொடங்கி ஆயுதம் கொண்டு அவனைத் தாக்கிவிட்டான். எதிர்காலத்தைப் பற்றி நினைப்பதும் ஒருவனைத் தூண்டி விடுவதும், ஒருவனுடைய மகிழ்ச்சியில் ஒரு நிமிஷ நேரத்தைக் குறைப்பதும் முட்டாள் தனம் என்று அந்தச் சிறுபுத்திக்காரன் சொன்னான். ''அவளோடு இருக்கும் போது களிப்பாக இருக்கிறாய்! அவளைப்பார், கவனித்துப்பேசு! பின், ஏன் அந்த மகிழ்ச்சியை நீயே அடைய வில்லை? ஒருவேளை, உன்முன் ஒரு மணி நேரந்தான், ஒரே ஒரு நாள்தான்! தொடர்ந்து நீ காதலிக்கமுடியாது-ஒரு வேளை, நீ தான் அப்படிச் செய்தாயோ? முடிவாக, நீயே உன்னைத் தாராள மாக விட்டுக் கொடுத்தால்தான் சக்தி வாய்ந்த காதலை நீ உணரமுடியும்.அப்படிப்பட்ட தன்மையும்அறிவுமுள்ள உணர்ச்சி யோடு, ஒதுக்கிவைக்கப்பட்டுள்ள அவளுடைய துய காதலுக்குப் பதிலளிக்க உனக்கு மதிப்புக் குறைவாகத் தோன்றவில்லையா?'' என்று அந்தச் சிறுபுத்திகாரன் கேட்டான். அந்தச் சிறுபுத்திக் காரன் இப்படியெல்லாம் சொன்னான். ஆனால், அந்த நல்ல மனிதன் முதலில் கொஞ்சம் குழப்பமடைந்தாலும், பிறகு கீழ்க்கண்டவாறு பதிலளித்தான்: ''முதலாவதாக, அவளோடு நான் இன்பமாக இருந்தேன் என்று சொன்னது பொய்யாகும். ஆனால் அது இன்பமன்று. இன்னும் அது ஒரு மகிழ்ச்சியுமன்று. அது மார்டையர் மன்னிக்கக்கூடியதுதான்! ஆனால், என்னை யன்று. அப்பொழுது அவளோடு இருப்பதே எனக்குத் துன்ப மாக இருந்தது. அதற்கு முக்கிய காரணமென்னவென்றால் என்னுடையஇன்பம் என்று எதை நீஅழைத்தாயோ அதைநான் இழக்கவில்லை. அவளை நான் பார்க்கமுடியாத சமயத்திலும் அவளோடுஇன்பமாக நான் இருக்கிறேன். என்னுடைய குளிர்ந்த உணர்ச்சி என்று நீ சொன்னாயே-அது, நான் அதைத்தடுத்து நிறுத்தினாலும் உன்னுடைய சொந்த இன்பத்திற்காக உனக்காக அவனைக் காதலிக்கிறாய்! ஆனால், நான் அவளுடைய சொந்த இன்பத்துக்காக.அவளுக்காகஅவளைக்காதலிக்கிறேன்.'' அவர்கள்

எப்படிவிவாதித்தார்கள் என்பது இதுதான். அந்த நல்ல மனிதன்கூறியது ஆயிர மடங்குக்கு மேல் சரி. வலீரியா, அவனைக் கொஞ்சம் காதல் உள்ளத்தோடு நோக்கு! உன்னுடைய உணர்ச்சிக்கும் அந்தச் சிறுபுத்திக்காரனுடைய உணர்ச்சிக்கும் நான் தலை வணங்கினேனாயின், அதிலிருந்து வரக்கூடிய இன்பமெல்லாம் ஒரு மாததத்துக்குள் முடிந்து போகும் கல்லறை இன்பமாகத்தானிருக்கும் என்பது எனக்கு நன்றாகத் தெரியும். இது விஷயத்தில், நானே அதிருப்தியடைந்தேன் என்பதையும், கெட்டவனாக மாறிக்கொண்டு வந்தேன் என்பதையும் நான் உணர்ந்தேன். உன்னிடத்தில் நான் முட்டாள் தனமான இரக்கத்தோடுதான் பேச முடிந்தது. அதற்காக இப்பொழுது நான் வெட்கமடைகிறேன். இன்ப நேரத்துக்கும் இதற்கும் காலமுண்டு! போய்விடவேண்டுமென்பதற்காக கடவுள் எனக்கு இந்த எண்ணத்தைக் கொடுத்து உதவி செய்தார். அதற்காக அவனுக்கு நான் நன்றி செலுத்துகிறேன். ஏனென்றால் நானே அதைச் செய்திருக்க முடியாது. நமது பரஸ்பர இன்பத்துக்கு அவன் வழிகாட்டினான்என்று நம்புகிறேன். அந்தச் சிறு புத்திக்காரன் செய்கை. உணர்ந்துபார்த்தும், சிந்தித்துப் பார்த்தும் மன்னிக்கக் கூடியதாக இருக்கிறது. ஆனால் எனக்கு அது கேவலமாகவும் பாவமாகவுமிருக்கிறது. உன்னுடையஅழகை ஏற்கனவே நான் காதலிக்கிறேன். ஆனால் இப்பொழுதுதான் உன்னிடமுள்ள ஆதியும் அந்தமுமில்லாததும், முற்றிலும் புதுமையானதுமானதொன்றைக் காதலிக்கத் தொடங்கி யிருக்கிறேன் - அது உன்னுடைய இதயம்-உன்னுடைய ஆத்மா. வெறும்உடல் அழகை ஒருவன்மிகஎளிதில்அறிய முடியும். அறிந்த ஒருமணி நேரத்தில் காதலிக்கவும், அதைவிடக் குறைவான நேரத்தில் மிக வேகமாகவிட்டொழிக்கவும் முடியும். ஆனால் ஆத்மாவை அறிவதற்குத்தான் கற்றுக்கொள்ள வேண்டும். என்னை நம்பு, உலகத்தில் ஒன்றுமே உழைப்பின்றிக் கிடைக்காது. இயற்கையின் எழில் நிலவுகின்ற உணர்ச்சியாகிய காதலும் அப்படி வருவதுதான். இந்த அருத்தமற்ற உவமையை மன்னிக்க வேண்டுகிறேன். அந்தச் சிறுபுத்திக்காரன்செய்வது போல் காதல் செய்வது, காலநேரமின்றியும் இனிமையின்றி

யும் இசை பயில்வது போன்றதாகும். உணர்ச்சியோடு அவ்வளவு நேரமும் காலால் கஷ்டப்பட்டு மிதித்தும் ஒருவருக்கோ மற்றவருக்கோ உண்மை மகிழ்ச்சியைஉண்டாக்கமுடிவதில்லை. ஆனால் ஒருவன் தன்னுடைய இசை உணர்ச்சியைவிட்டு விடுவதற்காகத் தன் உழைப்பையும், உத்தியோகத்தையும் முதலில் நிறுத்தவேண்டும். நான் சொல்வதை நம்பு, வேலையில்லாமல் வாழ்க்கையில் மகிழ்ச்சியே இருக்காது. உழைப்பின்மூலமும் துன்பத்தின் மூலமுந்தான் ஒவ்வொன்றும் கிடைக்கிறது. ஆனால் உழைப்பும் கஷ்டமும் எவ்வளவு அதிகமாக இருக்கின்றனவோ அவ்வளவுக்கு ஊதியம் உயர்ந்ததாக இருக்கின்றது. நமக்கு முன்னால் பெரிய வேலையொன்று இருக்கிறது- ஒருவரையொருவர் புரிந்து கொண்டு ஒவ்வொருவருடைய காதலையும் மதிப்பையும் பாதுகாப்பதுதான். அந்தச் சிறு மதியாளன் உணர்ச்சிக்கு, நாம் இப்பொழுது இடம்கொடுத்தால் நம்மை நாம் ஒருவருக்கொருவர் புரிந்துகொள்ளமுடியும் என்று உண்மையில் நீ நம்புகின்ருயா? அப்படியும் நாம் செய்தோம் என்பதை நினைத்துப் பார்க்க வேண்டும். அதன் பிறகு ஏற்பட்ட பெரிய கால்வாயையும் நாம் காணவேண்டும். அறியாமையில் காதல் செய்வதற்கு நமது உணர்ச்சிகளையெல்லாம் வீணாக்கி விட்டு, ஏற்படுகின்ற கால்வாயின் மீது எதைக் கொண்டும் பாலம் கட்டமுடியாது. நான் எனதுஉணர்ச்சியைச் செல்வம் போன்று காப்பாற்றுகிறேன். ஏனென்ருல் அது ஒன்றுதான் வாழ்க்கையின் நமது எல்லாநோக்கங்களையும்பாலமாகச் சேர்க்கும் ஆற்றலுடையதாக இருக்கிறது. இதுஇல்லை என்ருல் காதலே கிடையாது. இதை நோக்கி, நமதுகடிதப் போக்குவரத்து சிறந்த செயலாற்றும் என்று நான் எதிர்ப்பார்க்கின்றேன். அமைதியாக நாம் இதுபற்றி விவாதிப்போம். உன்னுடைய ஒவ்வொரு சொல்லையும் அளக்க முயல்கிறேன். நீயும் அதையே செய். ஒருவரையொருவர் நாம் புரிந்துக்கொள்ள முயல்வோம்; அது முடியும் என்பதில்எனக்குச் சிறிதும் ஐயமில்லை. எல்லா நிலைகளும் நமக்குச் சாதகமாகத் தானிருக்கின்றன. இரண்டு பக்கங்களிலும் உணர்ச்சியும் உண்மையுமிருக்கின்றன. என்னேடுஉரையாடு; விரித்துக் கூறு; தெரியாததை

எனக்குச் சொல்லிக் கொடு; என்னிடமிருந்து விவரங்களேக் கண்டு பிடி. இப்பொழுது ஒருவரையொருவர் நாம் புரிந்து கொண்டுதானே இருக்கிரும் என்று நீ கேட்கலாம். இல்லே, ஒருவர் மீது ஒருவர் நம்பிக்கைத்தான் கொண்டுள்ளோம். உன்னேப் பார்த்துக் கொண்டிருக்கின்ற சமயங்களில்நீ சொல் வதையெல்லாம் நான் ஏற்றுக் கொள்ளத்தயாராக இருக்கின் றேன். என் பயணத்தின் போது ஓராயிரம் பொருள்களேப் பற்றி நான் நினைத்துக் கொண்டிருந்தேன் -கடிதங்கள் அல் லது உரையாடல்கள் - கராபோவிட்ஸ்கியின் வாழ்க்கைவழிகளே எனது அடுத்த கடிதத்தில் உனக்கு எழுகிறேன். மார்டையர் கூட நீ தொடர்பு கொண்டிருந்ததை விட அதிகமானவேதனே கொள்ளும்படி செய்த உன்னுடைய உறவினர் கிரிவ்ஸ்கிஸ் என்ற உனனுடைய அத்தையின் குமாரர் வாழ்க்கையைப் போன்றது அது. வர்கானியைப் பற்றியும் உனக்கு எழுதுகி றேன். அவர்களேப்பற்றி நாம் விவரித்துக்கொண்டிருந்த பொழுது, அவர்களேப் பற்றி நம்முடைய ஒப்பந்தத்தைப்போல், நம்முடைய வழிகளில் அவர்களுக்கு அவ்வளவு முக்கியமில் லாத பத்து லட்சம் கேள்விகளேயும் எழுதுகின்றேன்.

'செர்ஜ்' உன்னுடைய முகத்தை வெளிக்காட்டமுடியா மல். செய்துவிட்டதாக நேற்றிரவு நான் கனவு கண்டேன். அதனுல் உன்னுடைய முகத்தில் புள்ளிகள்ஏற்பட்டதாகவும். உன்னுடைய மூக்கு அடிப்பட்டுத் திரும்பியதாகவும் கண்டேன். நான் மிகவும் பயந்துபோய்த் தூக்கத்திலிருந்து எழுந்தேன் இப்போதுஅந்தச் சிறு மதியாளனே நான் தடுக்காமல் விடு கின்றேன், நம்முடைய முடிவடையாத பல உரையாடல்களேப் பற்றி எனக்கு நினேவு வருகின்றது. (1) உன்னுடைய தனி ஆராதனே என்ன? (2) இரவில் எழுந்திருந்து கடந்தவை களேப் பற்றி நினேவுபடுத்திக் கொள்கின்ருயா என்று என்னே ஏன் கேட்டாய்? உனக்கு ஏதாவது சொல்ல வேண்டும்போல் தோன்றுகிறது. ஆனுல் முடியவில்லே. குறிப்பிடத்தக்க இன்பத் துடன் உன்னே நான் ஞாபகப்படுத்திக் கொள்ள மூன்று கார ணங்களிருக்கின்றன. (1) கேளிக்கை அரங்கில் நீ மேலும்

கீழும் குதித்தபொழுது அசையாமல் அதே இடத்தில் உன்னையே நீ பிடித்துக் கொண்டிருந்தது (2) சிறிது சங்கோசப் பட்டுக் கொண்டு தாழ்ந்த மெல்லிய குரலில் நீ பேசினது. (3) ஆண்டைஸில் பின்னப்பட்ட பூட்ஸ் கொண்டு உன்னை நன்கு அலங்கரித்துக்கொண்டு குருமாண்ட் ஏரிக்கரையில் வெறுப்புடன் அந்த லினன் நூலை எறிந்தது. இந்த மூன்று பொழுதுகளிலும் குறிப்பிடத்தக்க தாபத்தோடு அந்தச் சிறு புத்திக்காரன், எப்பொழுதும் உன்னை மனக் கண் பார்வைக்குக் கொண்டு வருகிறான். உனது அன்புக்குப் பாத்திரமான மற்றொருத்தி மேடம் வர்கானியோ அல்லது ஆண்டையோ அவளிடமிருந்து பிரிக்கப் படவில்லையா? நான் அதை மிகவும் விரும்புகிறேன். நான் இன்னும் வேறுயாரையும் பார்க்கவில்லையாதலால் என்னைப் பற்றி நான் ஒன்றும்எழுதுவதற்கில்லை. உனக்கு உடம்பு சரியில்லாதிருந்தால் தயவு செய்து அதைப் பற்றி எனக்கு முழுவதும் எழுது. கடந்த இரண்டு நாட்களாக உனக்கு உடம்பு சரியில்லை.செனி செக்கா, தன்னுடைய வழக்கமான உண்மையுடன் இதைப்பற்றிச் சில வரிகளும் கூடுமானவரையில் உன்னுடைய போக்குகளைப் பற்றியும் எழுதுவாளாயின் அவள் எனக்குப் பெரிய உதவியைச் செய்தவளாவாள். பருவ நிலை எப்படியிருந்தாலும் ஒவ்வொரு நாளும் உலவுவதற்குப் போ. இது உனக்கு மிகவும் நல்லது. உள் மார்பு உடைகளையும் முழுக்கால் உரைகளையும் நீயே அணிந்துகொள். பொதுவாக இப்படிப் பல்வேறுபட்ட முறைகளையெல்லாம் நீயே செய்து கொள்ளவேண்டும். கண்ணியமான முறைக்குத் திரும்புவது பற்றிக் கவலைப்படாதே. ஆனல் இவையெல்லாம் சாதாரணமானவை. முக்கியமானது - வாழ்க்கை. ஆகையினுல் படுக்கைக்குப் போகின்றபோது உனக்குள்ளே சொல்லிக்கொள். இன்றைக்கு (1) ஒருவனுக்கு நன்மை செய்தேன். (2) நல்ல வாழ்க்கை நடத்த நானே தொடங்கினேன். ஒரு நாளின் சிறந்த வேலைகளை முதலில் வரையறுக்க முயற்சி செய். மாலையில் அவைகளைக் கணித்துப் பார். ஒவ்வொரு நாளும் ஒருவருக்கு அதைக் கூறுவதில் என்ன அமைதியும் பெரிய இன்பமும் இருக்கின்றன என்பதை நீ பார்ப்பாய். 'இன்றைக்கு நேற்றைவிட நல்ல

முறையிலிருக்கிறேன். இன்று என்னுடைய வேலைகளை நல்ல முறையில் செய்து வெற்றி கண்டேன். கவலையையும் கவிதை யின் சிறந்த வேலைப்பாட்டையும் உணரவோ புரிந்துக் கொள் ளவோ முடிந்தது. எல்லாவற்றிற்கும் மேலாக அப்படியும் இப்ப டியுமாக நல்லனவற்றைத் தவிர வேறொன்றும் செய்யவில்லை. கடவுள் என்னிடத்தில் அன்பு காட்டுமாறும், நன்றி செலுத்து மாறும் நடந்து கொண்டேன். ஒருவன் தனக்குத்தானே அடையக் கூடிய மகிழ்ச்சி இது. ஆனால், உணர்ச்சியின்மையா லும், உன்னை வெற்றி கொள்கின்ற சோம்பேறித்தனத்தாலும் எளிதாக உனக்குக் கிடைக்கின்ற எல்லாவித நன்மைகளுக்காக வும் மேலும் மேலும் வரையறையின்றி உன்னை எப்பொழு தும் காதலிக்கின்ற மனிதன் ஒருவன் இருக்கிறான் என்பதை யும் நீ அறிவாய். வந்தனம், அழகு நிறைந்த அணங்கே, உன்னை, அந்தச் சிறு மதியாளன் காதலிக்கிறான் - அது அறி யாமைதானே? அந்த நல்ல மனிதன் தென் திசையின் ஆதி யும் அந்தமுமில்லாத மிகுந்த பொறுமை உணர்ச்சியோடு உன்னைக் காதலிக்கிறான். உன்னால் எவ்வளவு பச்சையாகவும், கோபமாகவும் எழுத முடியுமோ அவ்வளவு பச்சையாகவும் கோப மாகவும் நீண்ட கடிதங்கள் எனக்கு நீ எழுதவேண்டும். உன் னோடிருப்போர்களுக்கு என்னை ஞாபகப்படுத்து. கடவுள் உன் னிடமிருப்பார்! நாம் இருவரும் ஒருவரையொருவர் சிறந்த முறை யில், புரிந்து கொண்டு ஒருவரையொருவர் உயர்ந்த முறையில் காதலிக்க அவன் உதவி புரியட்டும். ஆனால், எப்படியும் இதெல்லாம் முடிவடையும். உன்னிடம் நான் பெற்ற உண்மை இன்பம் இருக்கிறதே அதற்காக கடவுளுக்கு எப்பொழுதும் நன்றியுள்ளவனாக இருப்பேன். மிகவும் மேன்மையானதும், சிறந்ததும், உண்மையானதும், நானே உணர்ந்ததும் உன் னிடமிருந்து பெற்றதுமான அந்த உண்மை இன்பம் இருக் கிறதே - அதற்கு வழி காட்டிய கடவுளுக்கு என்றும் நன்றி செலுத்துபவனாக இருப்பேன். நீ விரும்பியதையே கடவுள் அருளினார்.

உன்னுடைய
கவுண்ட். லியோ டால்ஸ்டாய்.

இக்கடிதத்தில் டால்ஸ்டாய் தன்னையே இரண்டு மனிதனாகப் பிரித்துக்கொண்டு, அவ்விருவரையும் மூன்றாவது மனிதனிடத்தில் வைத்து எழுதுகின்றார்.

டால்ஸ்டாய் பீட்டர்ஸ் பர்க்கிலிருந்தார். அந்த சமயத்தில் டால்ஸ்டாயின் காதலி வலீரியா, முடி சூட்டு விழாவின்போது மார்டையர் என்ற இசை ஆசிரியன் ஒருவன் தன்மீது கவனம் செலுத்த அனுமதித்ததாகவும், அதனால் அவளே அவனிடத்தில் காதல் கொண்டு விட்டதாகவும் மாஸ்கோ சென்று வந்த நம்பிக்கையுள்ள ஒருவனால் டால்ஸ்டாய்க்குச் செய்தி கிடைத்தது. இந்த விஷயத்தைப்பற்றி உண்மையில் அவள் எழுதவேயில்லை. ஆனால் அதைப்பற்றி அவர் வலீரியாவுக்குக் கீழ்க் கண்டவாறு எழுதினார்.

கடிதம் 3

நவம்பர் 8உ 1856, பிட்டர்ஸ் பர்க்.

அருமை வலீரியா

"எது இருந்ததோ அது மறுபடியும் இராது" என்று புஸ்கின் கூறினான். என்னை நம்பு, எதுவும் மறக்கப்படவில்லை, எதுவும் கடந்து விடவில்லை. எதுவும் தப்பிவிடவில்லை. முடி சூட்டு விழாவுக்கு நீ புறப்படுவதற்கு முன்பு நான் கண்ட உண்மை, மரியாதை, உன்னிடம் கொண்ட அமைதியான தொடர்பு ஆகியவைகளை மறுபடியும் நான் உணரமுடியாது. அப்பொழுது நான் என் உணர்ச்சியின் இன்பங்களுக்கு என்னையே அர்ப்பணித்தேன். ஆனால் இப்பொழுது அதைப்பற்றிப் பயப்படுகின்றேன். உனக்கு நீண்டகடிதம் ஒன்று எழுதினேன். அதை அனுப்ப எனக்குத் துணிவு பிறக்கவில்லை. ஆனால் அதனைக் கொஞ்ச நாட்களுக்குப்பின் உனக்குக் காட்டுகின்றேன். அது உன்னிடம் எனக்கு ஏற்பட்ட வெறுப்பினால் வேர்விட்டதாகும். இசை ஆசிரியன் மார்டையர்மீது நீ காதல் கொண்டு

விட்டாய் என்று மாஸ்கோவில், உன்னைப்பற்றிச் சரியாக அறியாத மனிதன் ஒருவன் வந்து சொன்னான். நீ அவனை நாள் தோறும் தேடிச்சென்று அவனோடுதொடர்பு ஏற்படுத்திக்கொண்டிருக்கிறாயாம்! இதைக் கேட்க நான் மிகவும் மகிழ்ச்சியடைந்தேன். பலபல பொருள்களைப்பற்றி இரங்கிச் சிந்தனைசெய்து ஒருகடிதத்தில் கொட்டி எழுதினேன். அதை நான் அனுப்பவில்லை. அந்த மார்டையரின் சங்கதி என் உள்ளத்தை அலைமோதச் செய்துவிட்டது. இனிமேலும், காதலிக்க இயலாது, ஆகையினால் இதுகூட அப்படித்தானிருக்கிறது. காலமாறுதலினால் ஏற்படுகின்றசெல்வாக்கின் அடியில் ஏற்கனவே ஒருவன் கடந்து போய் விட்டான்! மற்றொருவனைப் பொருத்தவரையில் பாதிக்கப்பட்டவனாக இருக்கிறான்---அது இன்னும் கடந்து போய்விட வில்லை. ஆனால், நீ இன்னும் காதலுக்கு ஏற்றவளாகவே இல்லை. உண்மையில், எது பலம்வாய்ந்ததென்றும் உண்மையானதென்றும் முற்றிலும் சிந்தித்துப் பார்ப்பாயானால் நீயே ஏற்றுக்கொள்வாய். நீ உண்மையாக இருக்க விரும்பினால் அந்த முதல் விஷயமானது மிகவும் சக்தி வாய்ந்தது. முதலில் ஒரு பெரிய அளவு தியாகம் செய்தாய். மற்றும், உன்னுடைய மனத்துக்கும் மற்ற மனிதர்களுக்கும் உன்னுடைய காதலைப் பற்றிய கருத்தை ஏற்றுக்கொள்ள அனுமதித்தாய். அடுத்து, அதற்கு முற்றும் மாறாகத் தியாகமே செய்யவில்லை. தப்பித்துக் கொள்ள ஒரே ஒரு வழிதான் இருக்கின்றது. காலம்! மறுபடியும் காலந்தான்! மாஸ்கோவில் நீ இன்னும் கொஞ்சகாலத்திற்குத் தங்கியிருந்திருப்பாயானால் எவ்வளவு நன்றாக இருந்திருக்கும்............?

உன் கடிதத்தை மிகவும் ஆவலாக வரவேற்கிறேன்.

நான் வருந்துகிறேன், தொல்லைப்படுகிறேன்; துன்புறுகிறேன். ஒவ்வொன்றிலும் தோல்வியே காண்கின்றேன். எதைக்கண்டாலும் வெறுப்பாக இருக்கிறது. ஆனால் அந்தச் சிறு மதியாளனின் உணர்ச்சிகள் முற்றும் கடந்துபோய் விட்டதாக நான் உணருகிற வரையிலும் எந்தக்காரணத்தை முன்

னிட்டும் உன்னை ஏறிட்டும் பார்க்கமாட்டேன். நான் நினைத்ததைப்போல் அதை உன்னிடத்தில் முற்றும் நம்புகின்றேன்.

மன்னிக்க வேண்டும். பொருத்த மற்ற என்னுடைய எல்லாப் பண்புகளையும் சாதாரணமாகவே மன்னித்துவிடு· அதற்கு நான் ஒருவன்மட்டும் பொறுப்பாளியல்லன். உன்னிடமிருந்து இரண்டு பொருள்களைத் தாழ்மையுடன்கேட்கிறேன். உழைப்பு ---உழைப்பு! மிகவும் ஆழ்ந்து சிந்தனை செய்து பார். உன் உணர்ச்சிகளை உண்மையாக அளவிட்டு நீயே செய். உனக்கு மிகவும் பாதகமாக இருக்கின்ற அந்த வழியில் என்னோடு உண்மையாக நின்று பார். உன்னிடத்தில் முதலில் இருந்ததும் இப்பொழுது இருக்கின்றதுமான கெட்ட பண்பு ஒவ்வொன்றையும் கூறு. உன்னிடமிருக்கின்ற நல்லவற்றை மிகமிகப் பெருமிதமான விரிந்த உள்ளத்துடன் ஏற்றுக்கொள்கிறேன். உதாரணமாக, (அப்படிப்பட்ட உணர்ச்சிக்காக வருந்தியாவது) மார்டையரிடத்தில் நீகொண்ட காதலின் வரலாறு முழுவதனையும் எனக்குக் கூறுவாயானால் உண்மையில் அது மிகவும் நல்ல எண்ணமாகும். அதனை நான் வரவேற்பேன். நீ இன்னும் அவனைக் காதலிப்பதாகக் கூறினால்கூட, அதையும் நான்சிறந்த முறையில் வரவேற்பேன். நீ அவனைப் பற்றிப் பேசுவாயானால் நான் கண்டிக்கப்பட்டவனாவேன். நீ அவனை அமைதியாகப் பார்க்கவில்லை என்று அது காட்டுகிறது. ஆனால் அது ஒரு புது முட்டாள்தனமான செல்வாக்கின் அடிப்படையாகும். நான் மாறுபட்டிருக்கிறேன் என்று நீ நினைக்கிறாய், பேசுகிறாய். ஆமாம், ஆனால், நான் சென்றவழியில் நீ செல்லாதிருக்கவும், கடந்த ஐந்து மாத காலமாக நான் அடைந்த அத்தகைய துன்பத்தை நீ அடையாதிருக்கவும் கடவுள் அருள்புரியட்டும். நல்லது வந்தனம். கடவுள் உன்னோடு இருப்பார். இந்தக் கடிதத்துக்காக என்மீது கோபமடையாமலிருக்க முயலவேண்டும். பலவிதமான வெறுப்புகளோடும், சந்தேகங்களோடும், கெட்டவனாக நான் கருதப்பட்டாலும், நான் இருக்கும் விதத்தை வெளியில் காட்டப் பயப்படவில்லை. நீயும் அவ்வாறேசெய். நிச்சயமாக, முக்கியமான கேள்வி என்னவென்றால் நாம் நண்பர்

களாக இருந்து ஒருவரை யொருவர் காதலிக்கிருேமா என்பது தான் இந்த நோக்கத்துக்காகக் கெட்டவற்றையெல்லாம் வெளியில் காட்டியாக வேண்டியிருக்கிறது. அதன் மூலம் நாமே அதற்குப்பரிகாரம் காணமுடியும் என்று அறியலாம். ஆனுல் நாம் அதை மறைக்கவே கூடாது. அதனுல், பிறகு எதிர்பாராத விதத்தில் நாம் ஏமாற்றமடையநேரிடும். நீ என்னிடம்கொண்டுள்ள துரோகச்செயலின் உணர்ச்சி இருக்கிறதே அதை இப்பொழுது இழப்பது பயங்கரத் துன்பந்தான். ஆனுல், தவருகப் புரிந்துகொண்டு, தவருகச் சென்று என்னேயே நான் திட்டிக்கொண்டிருப்பதைவிட இப்பொழுதே அதை விட்டுவிடுவது மிகவும் நல்லது. அது உனக்குத் துன்பத்தைத் தருவதாக இருக்கலாம். பீட்டர்ஸ் பர்க்கிலும், மாஸ்கோவிலுமுள்ள இளம் அழகிகளும் வயது முதிர்ந்த அழகிகளும் உன்னிடத்தில் அன்புடையவர்களாக இருப்பார்களாளுல், இதுவரையில் அவர்களோடு எனக்கு எந்தவிதத் தொடர்புமில்லே என்று முடிவாகக் கூறுகிறேன்.

உனக்குச்சொந்தமான,
கவுண்ட். லியோ டால்ஸ்டாய்.

கடிதம் 4

நவம்பர் 9உ 1856./ பீட்டர்ஸ்பர்க்.

நேற்று உனக்கு நான் எழுதிய கடிதத்தைப் பற்றிநினேக்க நினேக்க மிகவும் வருந்துகிறேன், எனது அருமை வலீரியா. அதனுல், இப்பொழுது உட்கார்ந்து எப்படி எழுதுவதென்றே எனக்குத் தெரியவில்லே. ஆனுல் உன்னேப் பற்றி நான் நினேத்தேஆகவேண்டியிருக்கிறது-அந்த நினேப்புத்தான் உனக்கு எழுதச் சொல்லி என்னேத் தூண்டுகிறது. உனக்கு நல்ல புத்தகங்கள் அனுப்பிவைக்கிறேன். அவைகளே நீ படிக்க முயலவேண்டும். சிறு கதைகளே முதலில் படிக்கத் தொடங்கிப் பிறகு நீண்ட கதைகளேப் படி.அவை மிகவும் அழகானவை. படித்த பிறகு அதைப்பற்றி உனது உண்மைக் கருத்தைஎனக்கு எழுது. நிகோலென்காவுக்குப் போய் நான் இன்னும் அதைச்

செய்யவில்லை. அடுத்த தபாலில் அவனுக்குப் புத்தகம் அனுப்பிவைக்கிறேன். 'பி' யும் முற்றிலும் அதே நிலையில் தான் விடப்பட்டிருக்கிருன். அவன் வருணிக்கப்பட முடியாத அயோக்கியன். அழகிய நல்ல பெண்ணொருத்தி அவனைக் கல்யாணம் செய்து கொள்ளப் போகிருள். ஐயோ பாவம்! அந்தக் கல்யாணம் உறுதியாக இருக்குமானல் எனக்கு எழுது. பிறகு நான் 'கே-வி'க்கு எழுதுகிறேன். இதுகாலம் வரையிலும் நான், எனக்குப் பிடித்த இலக்கிய நண்பர்களைத்தான் பார்த்திருக்கிறேன். ஆனல் மிகவும் கொஞ்சம். என்னுடைய சங்கத்தின் நண்பர்களை நான் வெறுப்பதுண்டு. இன்று இது வரையிலும் வேறு யாரையும் பார்க்கவில்லை. மாலை நேர முழுவதும் 'ஐ' யோடு வேலை செய்தேன். 'ஐ' முதல் தடவையாக எழுதுகிருன். அது பற்றி நான் மிகவும் மகிழ்ச்சியடைகிறேன். ஆமாம், என்னைப்பற்றி நானே ஏன் எழுதுகிறேன் என்பதன் காரணம், ஒருவேளை, என் கடிதங்களால் என் மீது மிகவும் வெறுப்புக் கொள்வது மட்டுமின்றி ஒன்றுமே உணராமலும் போகலாம். துர்கானிவ் கதைகள் கூட உனக்குஅனுப்புகிறேன். அவைகளைப் படி. அது உனக்குச் சுவையாகஇருந்தால்-மறுபடியும்படி. என்னைக் கேட்டால் கிட்டத்தட்ட துர்கானிவின் எல்லாக் கதைகளும் அழகானவை. ஆனல் அது எப்படி இருந்தாலும் நீ என்ன நினைக்கின்ருயோ அதை நேரடியாகச் சொல்லிவிடு. ஒருவன் தைரியமாகவும், தீர்மானமாகவும் உறுதியோடும் தவறுசெய்ய வேண்டுமென்பதுதான் உண்மை. அப்பொழுதுதான் ஒருவன் உண்மையின் அருகில் வாழ்கிருன். இது இன்னும் உனக்குப் புரிந்துகொள்ள முடியாததாகவும் உரிய காலத்துக்கு முன்பே நடந்துவிட்டதாகவும் தோன்றுகிறது. அப்படிப்பட்ட துன்பம் தரத்தக்க கடிதங்கள் இருந்தால் அவைகளைப்போல அதாவது, நான் எழுதுவதைப் போல் எனக்கு நீ ஏன் எழுதக்கூடாது?—நீஅப்படி ஏதாவது எழுது.

'என். என்' உன்னைக் காதலிக்கவில்லை. இது உண்மை. அதாவது, அவன் உன்னை முற்றும் காதலிக்கவில்லை என்ப

தன்று இதன் பொருள். ஆனால், நான் எதிர்ப்பார்த்ததைவிட கோஸ்டென்கா அழகாக இருந்தாலும் உன்னைக் குறைவாகவே அவன் மதிக்கிறான். அவனிடத்தில் ஒரு பெரிய மாறுதல் ஏற்பட்டிருக்கிறது. 'ரிட்'டின் புனித ஏட்டில் கூறிய பகுதிகள் சிரிப்பதற்காகவல்ல. நன்மைதான் இன்பம் என்ற பெரிய உண்மையை அவன் கடைசியாக உணர்ந்தான். நான்அடிக்கடி என்ன கேட்டேன் என்பது உனக்கு ஞாபகமிருக்கும். நீயும் அதைப்புரிந்து கொண்டிருக்கிறாய். ஆனால் அந்தந்த சமயத்தில்தான்! பேறின்மை காரணமாக இந்தப் பெரிய உண்மையைத் துன்பங்களின் வழியாகத்தான் புரிந்துகொள்ள முடியும். அவனும் துன்பத்தின் மூலமாகத்தான் கண்டு பிடித்தான். ஆனால் இன்னும் நீ வாழவில்லை-வாழ்க்கையை அனுபவிக்கவில்லை. துன்பப்படவில்லை. ஆனால் மகிழ்ச்சியும் வருத்தமும் அடைந்தாய். சில மனிதர்கள் தங்கள் வாழ்க்கையின் மூலம் மகிழ்ச்சியை அறியாதவர்களாக இருக்கிறார்கள், வேறு சிலர் துன்பத்தை அறியாதவர்களாக இருக்கிறார்கள்-நீதி செல்லுகின்ற திசையையே சிலர் பார்ப்பதில்லை-அறியாதிருக்கிறார்கள். நீ அப்படிப்பட்டதன்மையுடையவளாக இருக்கின்றாய் என்று எனக்கு அடிக்கடிதோன்றுகிறது. அதனால் பயங்கரத்துன்பமடைந்துள்ளேன். நீஅந்தக்கேள்வியைத் தெளிவாகப் புரிந்து கொண்டிருந்தால் எனக்குக் கூறு. நீ அதை விரும்புகின்றாயா, இல்லையா? ஆனால் எந்த முறைப்படியும் நீ காதலிக்கப்படுகிறவள், முற்றிலும் காதலிக்கப்படுகிறவள், வழக்கத்துக்கு மாறாகவே காதலிக்கப்படுகின்ற தன்மையுடையவள்.ஏன் எனக்கு நீ எழுதக்கூடாது? கராபோவிட்ஸ்கியின் வாழ்க்கை வழிகளைப் பற்றி நான் சொல்ல வேண்டியவற்றையெல்லாம், உன்னிடமிருந்து ஏதாவது பதில் கிடைத்தால் ஒழிய எழுதுவதற்கு நான் துணிவு கொள்ளமாட்டேன்-குறிப்பாக எனது இரண்டாவது கடிதத்துக்குப் பதில்............? இன்னும், என்னுடைய இதயத்தின் மீது கை வைத்து உண்மையைச் சொல்லவேண்டுமானால்-முதல் நாட்களிலிருந்ததைவிட, உன்னைப் பற்றி, மிகவும் குறைவாகவும்,மிகவும் மிகுதியான அமைதியோடும் இப்பொழுது நினைக்கிறேன். ஆனால், வேறெந்தப்பெண்ணைப்பற்றியும் எப்பொழுதும் நினைத்

தைதவிட அதிமாகவே இன்னும் உன்னை நினைக்கிறேன். ஒவ்வொரு கடிதத்திலும் உன்னால் முடிந்த அளவு உண்மையுடன் இக்கேள்விகளுக்கு அன்பு கூர்ந்து எனக்குப் பதிலளிக்க வேண்டும். எந்த அளவுக்கு எப்படி நீ என்னைப்பற்றி நினைக்கின்ருய்? எதைப்பற்றியும் உணராத என்னுடைய தனி உணர்ச்சி இதுவாகும். துன்பம் சிறியதோ பெரியதோ எனக்கு ஏற்பட்டவுடனே-அது ஒரு தோல்வியாகவும், சுயமரியாதைக்குப் பங்கமாகவும் தோன்றும்-இப்படிப்பட்டவை,-அடுத்த நிமிஷமே உன்னை ஞாபகப்படுத்திக் கொள்ளுவேன். இவையெல்லாம் பொடி விஷயங்கள் - "ஓர் அழகிய பெண்ணிருக்கிருள், எதைப்பற்றியும் நான் கவலைப்படமாட்டேன்" என்று துணிச்சலான நம்பிக்கை வந்துவிடும்-இது ஓர் இன்ப உணர்ச்சியாக இருக்கிறது. நீ எப்படியிருக்கிருய்? வேலை செய்கின்ருயா? கடவுளுடைய அன்புக்காக எனக்குக் கடிதம் எழுது. வேலை என்ற சொல்லைக் கண்டு சிரிக்காதே. நன்மைசெய்கின்ருேம் என்ற குறிக்கோளோடும், அறிவோடும், பயனேடும் வேலை செய்வது எல்லாவற்றிலும் சிறந்ததாக இருக்கின்றது. ஆனல், ஏதாவது ஒரு பொருளினிடத்தில் வேலை செய்வதும், ஏதாவது ஒரு சிறு வேலையைச் செய்யத் திட்டம் போடுவதுந்தான் நல்ல வாழ்க்கையின் முதல் நிலையாகும். ஆகையினுல் தான் அங்கு இன்பம் பொங்குகிறது. உதாரணமாக, இன்று நான் வேலை செய்தேன். என் மனச்சாட்சியின் திருப்தியையும் அமைதியையும் உணருகிறேன்.இதனுல் நான் நன்ருக இருப்பதாக அறிகிறேன். எந்தக் காரணத்தை முன்னிட்டும் நேற்று எழுதியதைப்போல் அப்படி வெறுப்புத் தோய்ந்த கடிதத்தை இன்று என்னுல் எழுதமுடியவில்லை. இன்று உலகத்தினிடத்தும் உன்னிடத்தும் நல்லெண்ணத்தையே நான்உணருகின்றேன். அதே உணர்ச்சியை எப்பொழுதும் நான் பெறவேண்டுமென்று விரும்புகிறேன். ஹா.........! துன்பத்தின் மூலமும் தண்டனையின் மூலமும் நான் செய்த பாவங்களை அறிந்து அனுபவித்து உணர்ந்தால்தான் உண்மை, சகிப்பு, முடிவில்லாத இன்பம் ஆகிய மூன்றையும் அடையமுடியும். சுயவிடுதலைக்கும், அன்புக்கும் வேலை செய். அதற்காக வாழ். இந்தக்குற

றத்தைப் பற்றிய பேச்சு என்னுடைய ஆத்மாவினிடத்திருந்து கேட்கிறேன். இது எனக்குத் தெரிகிறது. ஆனல்......ஆனல் ஓர் ஆண்டு காலத்தில் இரண்டு மணி நேரந்தான் இதன்படி நான் வாழ்கின்றேன். எப்படியும் நீ, உன்னுடைய மேன்மை மிக்க தன்மையோடு, மேடம் வர்கானிக்கும் மற்றவர்களுக்கும் உன்னல் எப்படிஒதுங்கியிருக்க முடிகிறதோ அதுபோல, இந்தக் குற்றத்திலிருந்தும் நீ விடுபட்டு ஒதுங்கியிருக்க முடியும். இந்தக் குற்றத்தால் இரண்டு மனிதர்கள் பிணைக்கப்பட்டிருக்கிருர்கள்-அதுவே இன்பத்தின் எல்லே! வந்தனம். சொற்கள் இதை உறுதியாக்க முடியாது. சமயம் வரும்போது கடவுள் இதை உணருவார். எனது அன்பே! உண்மை அன்பு வலீரியா! இது வரையிலும் எனக்கு நீ என்ன கொடுத்தாய் என்பது தெரிய வில்லே—துன்பத்தின் நீதியா? அல்லது இன்பமா? ஆனல், இந்த இரண்டுக்கும் நான் நன்றியுள்ளவனுக இருக்கிறேன்.

ஒவ்வொரு நாளும் நீ வழிபடுகிற கடவுளிடம் நீ காட்டும் அன்பை முன்னிட்டாவது எனக்குக் கடிதம் எழுது. கடிதம் எழுதாவிட்டாலும், எழுத வேண்டிய அவசியமில்லே என நீ உணர்ந்தாலும், அல்லது, இல்லே.........எழுத வேண்டுமென்ற எண்ணம் உனக்கில்லாதபோதும் இந்தத் தொடரையாவது எழுதி எனக்கனுப்பு. "இன்று......இந்த......இந்தத் தேதிக ளில் நான் எழுத விரும்பவில்லே." அப்பொழுது நான் மிகவும் மகிழ்ச்சியடைவேன். கடவுளின் அன்புக்காக உனது கடிதங் களேச் சரிக்கட்டாதே—அவைகளே அதிகமாகப் படிக்காதே—கவனி! உன் முன் அவைகளே நான் காட்ட முடியும்—உன்னி டம் அவைகளே நான் வைக்கமாட்டேன் என்றே உண்மையாக நீ நினைக்கின்ருயா? என்னுடைய நேர்மையும், உண்மையை யும் உன்னிடம் நான் காட்டுவேன். எல்லாவற்றிற்கும் மேலாக இதை நீ செய்யவேண்டும். உன்னைவிடப் புத்திசாலி யான பெண்கள் எத்துணையோபேரை நான் அறிவேன். ஆனல் நேர்மை மிகுந்த பெண்ணெருத்தியை நான் சந்திக்கவேஇல்லே. மேலும், ஆடவர்கள் பெண்களிடத்தில் உள்ள நுண்ணறி வையே காதலிக்கிருர்கள் என்று சொல்ல முடியாது—பெண்

வருக்கத்தாலும் அது ஏற்றுக் கொள்ளப்படுவதில்லை. ஆனால் அங்கு நேர்மை இருக்கிறது. அது பூரணமானது. அதிகமாக ஒருவன் அதைக் காதலிக்கிறான். நீ கவனி, அப்படிப்பட்ட எண்ணத்தோடு உன்னை நான் காதலிக்கின்றேன். நீ என்னை எப்படிக் காதலிக்கவேண்டுமென்பதை உனக்குக் கற்றுத் தருகிறேன். உண்மையாகச் சொல்கின்றேன், உன்பால் எனக்கு ஏற்பட்டுள்ள பேரன்பானது இன்னும் காதலாகப் பரிணமிக்கவில்லை. ஆனால் என்னுடைய எல்லாச் சக்திகளோடும் உன்னைக் காதலிக்க விரும்புகின்ற இளகிய ஓர் உணர்ச்சியாக இருக்கிறது. எவ்வளவு வேகமாகவும், எவ்வளவு அதிக நீளமாகவும் எவ்வளவு பைத்தியக்காரத்தனமாகவும், எவ்வளவு அருவருப்பாகவும் எழுத முடியுமோ அவ்வளவு எழுது. ஆனால் உண்மையான உள்ளத்திலிருந்து அவை வெளிவந்தால் நான் வரவேற்பேன்.

உழைக்கவும், காதலிக்கவும் முடிந்தால் தான் ஒருவன் உலகத்தில் நல்ல முறையில் வாழ்க்கை நடத்த முடியும். ஒருவன் காதலிப்பதற்காக உழைப்பு, ஒருவன் உழைப்பதற்காகக் காதல்! எதைப் பற்றியாவது எனக்கு எழுத வேண்டுமென்று உனக்கு ஏற்படுகின்றதா? ஆனால் அப்படிச் செய்ய உனக்கு அச்சம்! தயவு செய்து அதைப்பற்றிக் கொஞ்சம் குறிப்புக் கொடு. எல்லாக் கேள்விகளுமே துணிவோடு விளக்கப்படவேண்டும். நான், உனக்கு எத்தனையோ குறிப்புகள் பச்சை பச்சையாகவே எழுதியனுப்பினேன். ஆனால் நீ அப்படிச்செய்யவில்லையே.

உன்னுடைய,
கவுண்ட் லியோ டால்ஸ்டாய்.

கடிதம் 5

12-11-1856,
பீட்டர்ஸ்பர்க்.

நான் தான் அறிவில்லாதவன் என்று உணருகிறேன். ஆனாலும், நான், என்னுடைய காதல் கன்னியிடமிருந்து திரும்பியிருக்கவே முடியவில்லை. உன்னிடமிருந்து ஒரு கடிதம்

கூட நான் பெறவில்லை. நான் மறுபடியும் எழுதுகின்றேன். இப்பொழுது இரவு பன்னிரண்டு மணிக்கு மேலாகிறது. இந்த நேரம் எப்படி அமைதியாகவும் அறிவற்றதனமாகவும் பயன்படு கின்றது என்பதை நீயே அறிவாய். உலகத்தில் வாழ்வதற் கென்றே அவர்கள் அதை அமைத்திருப்பார்களானல் கராபோ விட்ஸ்கியின் வாழ்க்கை வழிகளைப் பற்றி உனக்கு எழுதுகிறேன். ஒரு மனிதனுடைய அல்லது ஒரு பெண்ணினுடைய வாழ்க்கை வழியானது அவர்களுடைய விருப்பத்தின் மீதும் வரை யறை மீதுந்தான் கட்டப்படுகிறது. ஒன்றையும் மற்ருென்றை யும் நாம் பரிசோதிப்போம். கராபோவிட்ஸ்கி, நீதியைப் பொறுத்தவரையில் அனுபவமுடையவன். அவன் தன்னுடைய இளமைப் பருவத்தில் எத்தனையோ குற்றங்களைச் செய்தான். அவன் தன்னுடைய வாழ்க்கையில் இன்பத்தை நிறைக்கவைத்த ஆண்டுகளுக்கு நன்றி செலுத்தினன். இப்பொழுது அவன் தன்னுடைய குறிக்கோளிலும் பேச்சிலும் இலக்கியத்தையே காணுகின்ருன். அவன், தன்னுடைய ஆத்மாவில் சமூகத்தைப் பார்த்தான், அமைதியை வழிபட்டான், குடும்பத்தைக் கண் டான், நீதி நிறைந்த வாழ்க்கையைக் கண்டான். கடன்காரர் களுக்கும், சமுதாய ஒப்பந்தக்காரர்களுக்கும் ஒருவனை அடிமை யாகச் செய்கின்ற நேர்மை, தூய்மையான எண்ணங்கள், உணர்ச்சிகள் ஆகியவைகளைத் தவருன வழியில் பயன்படுத்திக் கொள்ளும் சமுதாய வாழ்க்கையைக் கண்டு அவன் அஞ்சினன்.

இந்த ஏமாற்றங்களுக்கு ஏற்கனவே அவன் தன் வாழ்க்கை யின் இன்பம் நிறைந்த ஆண்டுகளோடு பதிலளித்திருக்கிருன். ஆகையால் இந்தக் குற்றம் அவனுக்கு ஒரு சொற்களின் கூட்ட மாக இல்லை, ஆனல் துன்பத்தின் மூலமாகச் சேர்ந்த ஒரு தண் டனை. அருமைத்திருமதி டெம்பிட்ஸ்கி! (தனது வருங்கால மனை வியான வலீரியாவை டால்ஸ்டாய் இவ்வாறு நையாண்டிசெய்து அழைக்கிருர்—மறைமுகமாக) இவ்விதமாக எதுவும் இன்னும் உணரவில்லை. கேளிக்கை மன்றத்தில் அவளுடைய இன்பமிக்க தோள்கள், கோச்சு வண்டி, வைரங்கள். அரசப் பிரதிநிதிக ளோடும், லெப்டினென்ட்-ஜெனரல்களோடும் கொண்டுள்ள

தொடர்பு.........! ஆனால் கரபோவிட்ஸ்கியும் டெம்பிட்ஸ்கியும் காதலிக்க நேர்ந்தது...! (ஒரு வேளை எனக்கே நான் பொய் சொல்லிக்கொள்வதாக இருக்கலாம், ஆனால் இந்தச் சமயத்தில் உன்னை நான் விரும்பிக் காதலிக்கிறேன்) ஆகையால் இப்படி மாறுபட்ட போக்குடைய இருவரும் காதல் கொள்வதாகத் தோன்றுகிறது. பிறகு அவர்கள் சேர்ந்து வாழ வேண்டுமாயின் நடந்து கொள்ள வேண்டியதெப்படி? முதலாவதாக அவர்கள் ஒருவருக்கொருவர் விட்டுக்கொடுக்க வேண்டும். இரண்டாவ தாக, யாருடைய விருப்பத்தில் மற்றவருக்கு விருப்பமில்லையோ அவருக்குக் கொஞ்சம் அதிகமாக விட்டுக் கொடுக்க வேண்டும். சிற்றூரில் என் வாழ்நாள் முழுவதையும் கழிக்க வேண்டும். மூன்று பொறுப்புகள் எனக்கு இருக்க வேண்டும்—'டி'யின் காதல் அவளுடைய இன்பத்துக்கான பொறுப்பு, இலக்கியம், எனக்குச் சரியென்று தோன்றுகிற வழியில் எனக்குத் தெரிந்த படி எனது ஜமீனை நிர்வகிப்பது—உதாரணமாக என்னிடத்தில் நம்பிக்கை கொண்ட மக்களுக்காக என்னுடைய கடமையைச் செய்வது. இந்த ஏற்பாட்டில் ஒரு குறைபாடு உண்டு! விருப்ப மில்லாமலேயே நான் காலத்தின் பின்னால் செல்ல வேண்டும். இது ஒரு பாவமாகும். பீட்டர்ஸ்பர்க்கில் வாசம், குளிர்காலத்தில் முப்பது கேளிக்கை ஆட்டங்களில் கலந்துகொள்வது, நண்பர் களைத் தன் வீட்டில் வரவேற்றல், அவர்களைத் தன்னுடைய சொந்தக் கோச்சு வண்டியில் ஏற்றிச் செல்லுதல், இவைகளைத் தான் திருமதி டெம்பிட்ஸ்கி கனவு காண்கிறாள். இரண்டு திட்டங் களுக்குமிடையிலுள்ள பீட்டர்ஸ்பர்கில் வாசம் செய்யும் ஐந்து மாத காலத்திலும் கேளிக்கைகளின்றியும், கோச்சு வண்டிகளின் றியும் வழக்கமில்லாத உயர்ந்த 'டாய்லெட் செட்' முறைகளும் அலன்கன் வைரங்கள் பதித்த ஆடைகளின்றியும் இருக்கவேண் டியிருக்கிறது! அது மட்டுமல்ல, ஏழு மாதங்கள் சிற்றூரில் சமூ கத் தொடர்பின்றி இருக்கவேண்டியுள்ளது. கராபோவுக்குத் தன் னுடைய ஜமீனில் இரண்டாயிரம் ரூபாய் வருமானமுண்டு. (உதாரணமாக, மற்றவர்களைப் போல் குடியானவர்களிடம் சென்று, ஒரு கடைசிக் காசு வரை கசக்கிப் பிழியாமல்) ஆண் டுக்கு ஆயிரம் ரூபாய் அவனுடைய இலக்கியப் பணி மூலம்

கிடைக்கிறது. (ஆனால், இது நிச்சயமில்லை. ஏனென்றால் அவன் சுவையின்றி யிருக்கலாம். அல்லது துன்பப்பட்டுக் கொண்டிருக்கலாம். அதனால் ஒன்றும் எழுத முடியாது.) திருமதி, டெம்பிட்ஸ்கிக்கு 20,000 ரூபிள் கிளர்ச்சி செய்து பெறுவதற்குச் சந்தர்ப்பமிருக்கிறது. அதிலிருந்து கிடைத்தாக வேண்டும். அவளுக்கு வட்டியே 800 ரூபிள் கிடைக்கும். மிகவும் சாதகமான ஒரு சந்தர்ப்பத்தின் மூலம் மொத்தத்தில் 3,800 ரூபிள்! பீட்டர்ஸ்பர்கில் 3,800 ரூபிள் என்றால் என்னவென்று உனக்குத் தெரியுமா? பீட்டர்ஸ்பர்கில் இந்தப் பணத்தைக் கொண்டு ஐந்து மாதத்திற்கு வாழவேண்டுமானால், ஒருத்தி, ஆருவது மாடியில் நான்கு அறைகளோடு, சமையல்காரியின்றி, கோச்சு வண்டியைப் பற்றியும் அலன்கன் வைரம் பதித்த ஆடைகளையும் பாப்லின் துணிகளைப் பற்றியும் நினைக்கக்கூடத் தைரியமில்லாமல், நீலவான நிறத் தொப்பியின்றி—அதை அணிந்து கொண்டு மற்றவரோடு உட்கார்ந்திருக்க மனமில்லாமல்!—இந்த வருமானத்தைக் கொண்டு ஒருத்தி டூலாவிலோ அல்லது மாஸ்கோவிலோ வசிக்க முடியும்—வேண்டிய சமயங்களில் லசர்விச்சிஸின் பார்வையிலும் தென்பட்டுக்கொண்டு, ஆனால் அதைப் பொறுத்தவரையில்—உனக்கு வந்தனமில்லை. பீட்டர்ஸ்பர்கிலும் ஒருத்தி வசிக்க முடியும்—மூன்ருது மாடியிலும், கோச்சு வண்டியோடும் வைரம் பதித்த ஆடைகளோடும் கடன்காரர்களுக்கும் தையற்காரர்களுக்கும் கடைக்காரர்களுக்கும் மறைந்துகொண்டும், கஷ்டம் நிறைந்த குடியானவர்களின் நிர்வாணத்திற்கு நான் சொல்லிய எல்லா விளக்கங்களையும் ஒதுக்கிவிட்டு, குடியானவர்களிடம் கடைசிக் காசு வரையில் கசக்கிப் பிழிந்து வாங்கச் சொல்லிக் குத்தகைக்காரர்களுக்கு எழுதிக்கொண்டும், அதன் பிறகு தானே சிற்றூருக்குச் சென்று ஒருவரோடு ஒருவர் கோபங்கொண்டும் வெட்கம் கொண்டும் முகத்தை வெளியில் காட்டாமல் பல ஆண்டுகள் மூலையில் உட்கார்ந்து கொண்டும் வாழ முடியும். மாடி வாழ்வு வேறு விதமானது. (ஏழ்மை ஆனால் நேர்மை) இங்கே ஒவ்வொன்றும் குடும்ப சம்பந்தமாகவே செலவழிக்கப்படுகிறது. ஆருவது மாடியிலுள்ள சிறு அறையை அலங்கரிப்பதற்கும், ஒரு சமையல்காரனுக்கும், சமையல் அறைக்கும்,

சாராயத்திற்கும் உள்ள செலவு—நண்பர்கள் ஆருவது மாடிக்கு இன்பமாக வருவதற்காக—புத்தகங்களிலும், இசையிலும் படங்களிலும், நடனத்திலும், வீட்டிலேயே இருக்கின்ற நான்கு இசைக் கலேஞர்களுக்கும் செலவிடப்படுவது எவ்வளவு? ஆனுல் இது, பார்த்துக்கொண்டிருக்கின்ற இசைக் கலேஞனுக்கும், லசரிவிச்சின் ஆச்சரியத்திற்கேற்ற படாடோபத்திலும், அடிமைகளுக்கும், கருப்புத் தலேவர்களுக்கும் செலவிடப்படவில்லே.

வந்தனம், நான் படுக்கைக்குப் போகிறேன். என் உள்ளத்திலேயே உன்னுடைய தளிர்க் கரத்தைத் தடவிப் பார்த்து இன்பம் காண்கிறேன். உன்னேப் பற்றி அதிகமாகச் சிந்தனே செய்கிறேன். கடிதத்தை நாளேக்குத் தொடருகிறேன். இப்பொழுது அழகிய மஞ்சள் நிறப் புத்தகத்தில் எழுதுகின்றேன். மறுபடியும் உன்னேப் பற்றியே எழுதுகிறேன். நான் ஓர் அறிவற்றவன். ...,........! ஆம். உன் விஷயத்தில் என் அறிவு வேலே செய்யவில்லே.

லியோ டால்ஸ்டாய் இக்கடிதத்தை முடிக்கவில்லே. தன்னுடைய ஆத்மாவையும் சிந்தனேயையும் அவ்வளவு தூரம் கொள்ளே கொண்ட அவள் நீண்ட மௌனத்திலிருப்பதைக் கண்டு டால்ஸ்டாய் வெளிப்படையாகவே பொறுமை யிழந்தார். அடுத்த நாள் கீழே தொடருகின்ற கடிதத்தை விரிவான குறிப்போடு முடித்தார்.

கடிதம் 6

நவம்பர் 13, 1856,
பீட்டர்ஸ்பர்க்.

உன்னிடமிருந்து ஒரு கடிதம் கிடைத்த சமயம் இந்தக் கடிதத்தைத் தொடருகிறேன். இப்பொழுது இது எனக்கு விருப்பத்தைக் கொடுக்கவில்லே. என்னுடைய மூளேயில் வேறு ஏதோ இருக்கின்றது. கடைசித் தடவையாக உனக்கு எழுதுகிறேன். நீ கொண்டுள்ள எண்ணந்தான் என்ன? உனக்கு உடம்பு சரியில்லேயா? அல்லது ஏதாவது காரணத்துக்காக என் மீது மறு

படியும் வெட்கப்படுகின்ருயா? அல்லது நம்மிருவரிடையே நிற்கின்ற உறவினர்களுக்காக வெட்கப்படுகின்ருயா? ஆனல்; என்ன காரணமாக இருந்தாலும் எனக்கு ஒரு வரியாவது எழுது. முதலில் உன் மீது இரக்க உணர்ச்சி கொண்டேன், பிறகு கோபம் கொண்டேன்; இப்போது மாறுபாடு உடையவளாக நீ மாறிவிட்டதாக நான் கருதுகிறேன். உனக்கும் எனக்கும் துன்பமேயன்றி வேருென்றும் இதிலிருந்து வராது என்று வெகு காலத்துக்கு முன்பே ஓர் உணர்ச்சி என்னிடம் கூறிற்று. தாமதமடைவதற்கு முன்பே இதை நாம் நிறுத்திக்கொள்வது மிகவும் நல்லது.

நான் உன்னைக் காதலித்தபோது அடிக்கடி வந்து, நான் உணருகின்ற ஒவ்வொன்றையும் உன்னிடம் சொல்ல விரும்பினேன். ஆனல் இப்படிப்பட்ட சமயங்களில் உன் மீது நான் கோபங் கொள்ளும்போதும் முற்றிலும் மாறுபாடான மனப்போக்குக் கொள்ளும்போதும் இன்னும் கொஞ்சம் அதிகமாக உன்னைப் பார்க்க விரும்பி, என்னுடைய எரிச்சலையெல்லாம் உன்னிடம் கூறி, நாம் ஒருவரை யொருவர் புரிந்துகொள்ளவே முடியாது என்று உன்னிடம் ஆதாரத்தோடு எடுத்துக் காட்டினேன். இதற்காக, நம்மையும், கடவுளையும் தவிர வேறு யாரையும் குற்றஞ் சாட்ட முடியாது. ஆகையினல் நாம் ஒருவரையொருவர் காதலிக்கவே முடியாது என்று கூற விரும்பினேன். ஆனல் உன் தந்தையின் நினைவாலும், உன்னுடைய நல்வினையாலும் உன்னை நான் உள்ளன்போடு காதலிக்கிறேன். என்னிடம் உண்மையாக நடந்துகொள். சந்தேகங்களுக்கு இடங் கொடுக்காதே. வந்தனம்.

உன்னுடைய,

கவுண்ட் லியோ டால்ஸ்டாய்.

●

இம் முறை டால்ஸ்டாய் ஏமாற்றமடையவில்லை. ஒரே சமயத்தில் எல்லாக் கடிதங்களுக்கும் சேர்த்து, வலீரியாவிடமிருந்து மறுமொழி கிடைத்தது. அதற்குப் பதிலாக டால்ஸ்டாய் கீழ்க்காணும் விசித்திர விளக்கங்களுள்ள கடிதத்தை எழுதினர்.

கடிதம் 7

17—11—1856,
பீட்டர்பஸ்ர்க்.

"நான் உன்னிடம் ஏதோ மாருன உணர்ச்சி கொண்டுள்ளேன்'', என்று சென்ற கடிதத்தில் நான் எழுதினதில் தவறில்லை. அதாவது, நான் உன்னிடமிருந்து முற்றிலும் மாறுபட்டிருக்கவில்லை, ஆனல் உன்னைப் பற்றி அடிக்கடி மிகத் தாழ்வாக நினைத்தேன். நான் நினைத்தபொழுது வெறுப்போடு நினைத்தேன். வெறுப்படைந்திருந்த நேரம்தான் இதற்கெல்லாம் காரணமாக இருக்க வேண்டும். இன்று உன்னுடைய இரண்டு கடிதங்களும் கிடைக்கப்பெற்றேன். அவை இரண்டும் அழகு நிறைந்தவை, நல்லவை, நேர்மையானவை. சில துன்பத்தைக் கொடுத்தன. ஆனல், அவைகள்என்ன என்பதை நான்சொல்ல மாட்டேன். சென்ற கடிதத்திலும் அதற்கு முந்தின கடிதத்திலும் நான் அவ்வாறு எழுதினமைக்கு என்னை மன்னித்துவிடு. அவை இரண்டும் சிறு பிள்ளைத்தனமான உணர்ச்சிகளோடு எழுதப்பட்டவை. அவைகளின் நினைவுதான். இப்பொழுது மீதி பழைய உணர்ச்சி யில்லை. அவைகள் கோபத்தோடு எழுதினவைகளாகும். ஆனல் அவைகளில் எழுதப்பட்ட பொருள்களும் என்னுடையதல்ல வென்று நான் மறுக்கவில்லை. இப்பொழுது, தெளிவாகவும், அமைதியாகவும் நிதானமான அறிவுடனும் உன்னைப் பார்க்கிறேன். (இதற்காக என் மீது கோபம் கொள்ளாதே) இன்னமும் உன்னை நான் இனிமை வழிந்தோடும் இளம் அழகியாகவே பார்க்கிறேன். நான் இருக்கும் விதத்திலிருந்து மாறுபட்டிருந்தாலும் அவளோடுதான் மகிழ்ச்சியாக இருக்க முடியும். சில சமயங்களில், இப்பொழுதுகூட எனது அருமைத் தோழி வலீரின்கா (செனி செக்கா உன்னுடைய கடிதத்தில் எழுதியது போல்) என்று உன்னை அழைக்க எனக்கு உரிமையுண்டு என்று தோன்றுகிறது. ஆனல், இது உண்மையன்று என்ருல், அப்பொழுது நிச்சயமாக இது பாவமும் அவநம்பிக்கையுமாகும். இசை நல்லதென்று நான் சொல்லிவிட்டு, அதன் பிறகு அதே இசை கெட்டதென்றும் சொன்னல் அது எந்த ஒரு

வருக்கும் தவறு செய்ததாக ஆகாது. ஆனல், நீ என் தோழி என்று உன்னிடம் கூறி அது மெய்யாக இருந்து, அதை நீயும் நம்பிவிட்டால் அப்பொழுது நான் செய்தது தவறுதான். நீயே புரிந்து கொள்ளாத, பொருளும் மதிப்பும் உள்ள உன்னுடைய சொற்களை நான் நம்பினல் நீ எனக்குத் தவறு செய்வதளாகிருய். ஆனல், இதுபோதும். உன்னுடைய கடிதங்களில், குறிப்பாக, எனக்கு எது மகிழ்ச்சியளித்தது என்று கூறுகின்றேன். உன்னுடைய கடிதங்கள் மிகமிக மகிழ்ச்சியளித்தன. திரும்பவும் நான் சொல்லுகிறேன், அவைகள் எப்படியிருக்க வேண்டுமென்று நான் எதிர்பார்த்தேனே அப்படியே பகிரங்கமாகவும், நேர்மையாகவும் இருந்தன. இதே முறையைத் தொடர்ந்து கையாண்டு வருக. ஆனல் சிறு பிள்ளைத்தனமாக உனக்குத் தோன்றுகின்ற எண்ணத்தையும், உண்மைக்கு மாறுபட்ட வழியாக இருந்தாலும் சரி,—தெளிவாக்குவதற்குத் தயங்காதே. நீ கூறுகின்ற எல்லாவற்றையும், கூருமல் விட்டுச்செல்கின்றவற்றையும் எல்லாப் பொருள்களையும்விடச் சிறந்த முறையிலே புரிந்து கொள்கிறேன். ஒவ்வொன்றையும் சந்தேகப்படுவது என்னுடைய பழக்கம் என்பதை நீ அறிவாய். அது என்னுடைய நடத்தையிலிருந்து வெளிக்கிளம்புவதன்று. அது மூளையின் ஒரு கோணத்திலிருந்து விரிவடைகின்றது. நீ நினைத்துக் கொண்டிருப்பதைப் போல், ஒன்றுமே கிடைக்காது, எதுவும் செய்யவில்லையானல், ஜிம்பட்டை விடஅதிகமாக நான் பொருள்களைப்புரிந்து கொண்டிருந்தாலும், அவன் கொண்டிருந்த உணர்ச்சியின் புதுமையைப்போல் நான் அதிக நாளைக்குப் பெறவில்லை. அதற்கு, என்னுடைய விருப்பமில்லாமலேயே ஒவ்வொன்றுக்கும் சாதகமாகவும், பாதகமாகவும் என்ன சொல்வதென்று பார்த்துக் கொண்டிருக்கிறேன். நான் எல்லா ஜீவராசிகளையும் சந்திக்கிறேன். நன்மை நல்லது. அதைக்காப்பாற்று இது ஒன்றுதான் என்னை வாழ்ந்து கொண்டிருக்கும்படி செய்கின்றது. ஏசுநாதர் என்னை நெருப்பில் போட்டுச் சுடுவதற்காக இருக்கின்ருரானல், ஒரு வேளை நான் ஆதாரமின்றிப் பேசுவேன். ஆனல் ஏசுநாதர் நல்லவரல்லர் என்று துணிந்து நான் கூறமாட்டேன். நல்ல நீதி, உதாரணமாக, மற்றவரிடத்

தில் அன்பு, கவிதை, அழகுஇவையெல்லாம் ஒரே பொருள்தான். இந்த ஒரு பொருளைத் தான் சந்தேகிக்காமலிருக்கிறேன். நான் அதில் குறைவாகப் பழக்கப்பட்டிருந்தாலும் அதிகமாக அதை வழிபடுகிறேன். உன்னிடமுள்ள கவர்ச்சியை நான் உணர முடிகிறது. ஏனென்றால் நான் அந்தச் சொல்லைப் புரிந்து கொண்டமாதிரியே நீ நல்லவளாக இருக்க முடியும் என்று எனக்குத் தோன்றுகிறது. ஆனால், இந்தத்தத்துவம் உனக்குத் தொந்தரவு கொடுக்கும். ஆண்டையோடு நீ கோபமாக இருப்பது தவறாகும். நீ இளமையாகவும் அனுபவமின்றியு மிருக்கின்றாய் என்பதை இதுவே உண்மையாக்குகிறது. ஓர வஞ்சனையில்லாமலிருக்க முடியாது. அவள் உன்னிடம் அன்பு காட்டினாள் என்று பல தடவைகள் நான் சொல்லியிருக்கிறேன். அவள் உன்னைத் தன் சகோதரியின் மகள் என்று அழைப்ப தாகக் கனவுதான் காண்கிறாள். ஆனால் நான் போவதற்கு முன்பே நம்மோடு சண்டையில்லாது நட்பாக இருந்த நம்மு டைய உறவினர்கள் எப்படி இருந்தார்கள் என்று அவளுக்குச் சொல்லியிருக்கிறேன். பரிசோதித்துப் பார்ப்பதற்கு நானே போய்க் கொண்டிருந்தேன். அவள் என் எதிர்ப்பட்டு, ‘நான் திருமணத்திற்குச் செல்லவில்லை; பீட்டர்ஸ்பர்க் போகிறேன்’ என்று சொன்னாள். ஆனால் அவள் நம் இருவரையும் விரும்புகி றாள். நான் உன்னிடம் நேர்மையற்று நடந்து கொண்டால் அவள் துன்பமடைவாள். உனக்குத் துன்பம் செய்தால் அவள் மனம் புண்படும். என்னுடைய உறுதியை அவள் நம்பாததற் குக் காரணம் அதுதான். அவள் அந்த நஷ்டத்தை உண்டாக்கப் பார்க்கிறாள். உன்னை ஒரு துன்பமாகக் கருதி அவள் அப்படி நினைக்கிறாள்—அவள் விரும்பத்தகுந்தவள்! சுய விடுதலையின் மீதும் காதலின் அடிப்படையின் மீதும் தானே எப்பொழுதும் பின்பற்றுகின்ற கவலையிழந்த நல்ல பேரத்தைப் பற்றிச்சிந்திப் பது தான் ஒருவருக்கு அவசியமாக இருக்கிறது. அவள் விரும் பத்தக்கவள்! நீ, உன் சிந்தனை முழுவதையும் நடாஷாவின் மீது செலுத்தியிருக்கிறாய், நடாஷா நல்லவள் நான். ஆனால் அவள் தலையில் மூளை இருக்கவேண்டிய இடம் காலியாக இருக்கிறது. அதோடு கொள்கை இல்லாது கேவலமான நடத்தையுள்ளவள்.

உன்னுடைய உணர்ச்சிகளைப் புகழ்ந்து பேசுகிறுள். ஆகையினுல்தான் அவளிடத்தில் நீ இன்பம் காண்கிருய். ஆனுல் அவளோடு நீ கொண்டுள்ள தொடர்பை நான் விரும்பவில்லை.

உன்னுடைய வேலைகள் எனக்கு மகிழ்ச்சியளிக்கின்றன. ஆனுல் உன்னுடைய உழைப்பு சிறியது. உள்ளபடியே உன்னுடைய உழைப்புக் குறைவுதான். மாலை நேரங்கள் வீணுக்கப்படுகின்றன! ஆற்றல் எல்லாம்... இந்தப் புள்ளிகளெல்லாம் பல்வேறுபட்ட உனக்கு விருப்பமான பெயர்களைக் குறிக்கின்றன. உழைக்கச் சொல்லி தாழ்மையாக வேண்டுகின்றேன். படிப்பதிலே இன்பம் காணுவதாக ஒரு இடத்தில் விரிவாகச் சொல்லியிருந்தாய். என்ன இன்பம் கண்டாய்? என்ன புரிந்துகொண்டாய்? அதை அறிய நான் மிகவும் விருப்பம் கொண்டுள்ளேன். நீ கேளிக்கை............... ஞேடு......இது இடைஞ்சலாக இருக்காது. உன்னையே பரிசோதனைக்கு விட்டுப்பார்க்க உனக்கு விருப்பம் தோன்றும். இதைச் செய்துபார். என்னைப் பரிசோதிக்க நான் முற்றும் தவறி விட்டேன். உதாரணமாக, நான் ஓர் அழகிய பெண்ணைப்பார்த்தேன் எங்கும் போகவில்லை. என்னுடைய மனச்சான்று அதிலேயே லயித்துக் கிடந்தது. இந்த மூன்று வார காலத்தில் ஒரு பெண் கூட என் கவனத்தைக் கவரவில்லை, என்று நான் கூறுவேன். அதற்கு மாருக உன்னுடைய விருப்பத்திற்கு இலக்கான இலக்கியங்களில் அதிக இன்பத்தோடு மூழ்கிக் கிடந்தேன். 'பைபிலோதெக்கா'வுக்கு ஒரு சிறு கதை எழுதியுள்ளேன். 'ஒட்டெக்செஸ்ட்வென்யா சப்பிஸ்கி'க்காக மற்ருென்று தயாரித்துக் கொண்டிருக்கிறேன். கராபோவிட்ஸ்கியின் வாழ்க்கை வழிகளை என் கடிதத்தில் நான் சொல்லலாமா வென்று பார்க்கிறேன். ஆனுல் அதை நீ தொடங்க வேண்டுமென்று என் மூளையில் உதித்தது. அவர்கள் என்ன செய்யவேண்டும். எப்படி, எங்கே? அதன் பிறகு எனது கருத்தை உனக்கு எழுதுகின்றேன். திருமதி. டெம்பிட்ஸ்கி! பயப்படாதே. உன்னுடைய கருத்தை எனக்கு எழுது. நீ தவறு செய்திருந்தால், விரும்புகின்ற இயல்பிலேயே நேர்மையான ஒருவன் செய்த தவறுபோல் அதனை

நல்லதாகக் கொள்வேன். அந்த ஓவியம் மாஸ்கோவிலிருந்து சீக்கிரம் வந்துவிடும் என்று நினைக்கிறேன். ஆனால் நான் கடமைப்பட்ட அந்த அழகிய இளம் கைகளை முத்தமிடுகிறேன். என்னுடைய போட்டோ ஒன்று பிடித்து, நாளை உனக்கு அனுப்பிவைக்கிறேன். வந்தனம்.

உன்னுடைய,

கவுண்ட். லியோ டால்ஸ்டாய்.

கடிதம் 8

23—11—1856, பீட்ஸ்பர்க்.

உன்னுடைய நவம்பர் 15ந்தேதிய சிறப்பு மிக்க, வியப்பிற்குரிய, இணையற்ற கடிதம் கிடைக்கப் பெற்றேன். உன்னை என் கடிதங்களில் அப்படி (நையாண்டி செய்து) அழைத்ததற்கு என் அன்பே, என் மீது நீ கோபித்துக் கொள்ளாதே. உன்னிடம் நான் கொண்டுள்ள உணர்ச்சிக்கு அந்தச் சொல். நல்ல முறையில் பொருத்தமாக இருக்கிறது. உண்மையாகவே நீ காதலிக்கப்படுகிறவள் தான். உன்னோடு பேசிக் கொண்டிருந்தபொழுதெல்லாம் எத்தனையோ தடவைகள் உன்னை அப்படி அழைக்கப் பெரிதும் விரும்பினேன். வேறெந்தப் பெயர் கொண்டுமல்ல, ஆனல்-அந்தச் சொல்லைக் கொண்டு, என்னையறியாமலேயே நான் எழுதிக் கொண்டு செல்லாமலிருந்திருந்தால் என்னுடைய இக்கடிதம் சுருக்கமுள்ளதாகவே இருந்திருக்கும். அச்சு சம்பந்தமான வேலைகள் அதிகமிருப்பதால் அந்தத் தொந்தரவான வேலைச் சுமையால் என்னல் பல இரவுகள் தூங்கக் கூட முடியவில்லை. 1857 ஆம் ஆண்டிலிருந்துதான் என்னுடைய எழுத்தோவியங்களை வெளியிடுவதற்கு 'சோவ்ரிமென்னிக்' குடன் ஒரு ஒப்பந்தம் செய்து கொண்டிருக்கிறேன் என்பதை நீ அறிவாய். ஆனல் 'டருஸினிக்'கும் 'ஒட்டெக்ஸ்டென்னிய சப்பிஸ்கியின் கெரிவ்ஸ்' கைக்கும் உறுதியளித்துள்ளேன். டிசம்பர் முதல் தேதிக்கு முன்பே அதை நான் எழுதியாக வேண்டும் 'குருஸினு' க்கு ஒரு சிறு கதை எழுதுவதற்கு

எப்படியோ ஏற்பாடு செய்துவிட்டேன். ஆனால் கரவஸ்கிக்கு எழுதித் தரத்தான் சிந்தனையிலிருந்து ஒன்றும் வெளிக்கிளம்ப வில்லை. அதற்கும் ஒருவாறு எழுதினேன். ஆனால் எனக்குத் திருப்தியளிக்கவில்லை. திருத்தி எழுதவேண்டுமென்று உணரு கிறேன். ஆனால் எனக்கு நேரமில்லை. என் மனமும் பக்குவ நிலையிலில்லை. என்றாலும் நான் வேலை செய்கின்றேன். ஒரு வகையில் நான், எனது வார்த்தையைக் காப்பாற்றவேண்டும். மற்றொரு வழியில்லை. என்னுடைய இலக்கியச் சிந்தனைக்கு எங்கு குந்தகம் நேர்ந்துவிடுகின்றதோ என்று பயப்படுகிறேன். உனக்குத் தெரிந்த ஒரு சீமாட்டியை நீ எவ்வளவு அதிகமாக மதிக்கின்றாயோ அவ்வளவு மேன்மையாக அதை நான் மதிக்கி றேன். நான் துன்பப்பட்ட ஒரு நிலையிலிருக்கிறேன். என்மீதே நான் வெறுப்புக் கொண்டுள்ளேன். ஆகையினால்தான் உலகத் திலுள்ள ஒவ்வொன்றின் மீதும் எனக்கு வயிற்றெரிச்சலாக இருக்கிறது. நான் ஒப்பந்தம் செய்தேன். பழையவைகளையே செய்தாக வேண்டியிருக்கிறது. அதனால் தான் வெறுப்புக் கொள் கிறேன். காரியத்தின் மீது தான் என்றாலும் புது வேலைத் திட் டங்கள் என் மூளையில் தெளிவாக உருவாகின்றன. அது எனக்கு மகிழ்ச்சியாக இருக்கின்றது. உன்னுடைய கடைசிக்கடிதம், என் மூளை இந்த நிலையிலிருக்கும்போது வந்து கிடைத்தது. அது என்னுடைய எல்லாத்துன்பங்களையும் துடைத்துவிட்டது. நீ என்னைக் காதலிக்கலாம் என்பதும் நீ எப்படி இருக்க வேண்டுமென்று நான் விரும்பினேனோ அப்படி நீ இருப்பாய் என்பதைத்தவிர வேறு இல்லை. நீ என்னைக் காதலிக் கிறாய் என்பதனையும் வாழ்க்கையைப் பற்றித் தீவிரமாக சிந்திக்க தொடங்கியிருக்கிறாய் என்பதனையும் உன்னுடைய கடிதம் காட்டுகிறது. அது மிகவும் நல்லது. நல்லது விரும்பவும் இன்பத்தைக்காத்திருந்து காணவும் தெளிவு என்ற பாதையிலே முன்னேறவும் ஆரம்பித்திருக்கிறாய். வாழ்க்கையிலே நமக்கு இன்பத்தைத்தருகின்ற அந்தப்பாதையானது முடிவடையாது செல்லும்; தொடர்ந்து சென்று மற்றொரு வாழ்க்கையிலும் அதே மகிழ்ச்சியைக் கவர்ந்து கொடுக்கும். அன்பே! முன்னேறு மேலும் முன்னேறு. காதல் செய். உனது காதலனான என்னை

மாத்திரமன்று. ஆனால் உலகம் மக்கள் இயற்கை இசை கவிதை உலகத்திலுள்ள அழகு பொருந்தியவை அனைத்தையும் காதலித்து உனது அறிவை விரிவடையச் செய். அதன் மூலம் உலகத்தில் காதலிக்கத் தகுதி வாய்ந்தது எது என்பதனை நீயே புரிந்து கொள்வாய். உலகிலேயே காதல் தான் முதன்மையான இன்பமும்குறிக்கோளுமாகும். நான் கூறுவதெல்லாம் உனக்கு ஒத்துவராது போனாலும் ஒரு பெண் தன் அறிவை அவசியம் வளர்த்துக் கொள்ள வேண்டுமென்பதற்கு வேறொரு பெரிய காரணமும் உண்டு. இவ்வுலகில் ஒரு பெண் ஒருவனுக்கு மனைவியாக வாழ்ந்தாக வேண்டியதிருக்கிறது. அது அவள் தலைவிதி. இந்த உண்மையைத்தவிர குழந்தைக்கு அன்னையாக இருக்க வேண்டுமென்பதும் அவளுடைய முக்கிய தலைவிதியாக இருக்கிறது. ஒருத்தி அன்னையாக விளங்கப் பெண்மை (இந்த வேற்றுமையை நீ புரிந்து கொண்டிருக்கின்றாயா?) வளர்ச்சி ஓரளவு தான்.

என்அன்பே. (இப்படி உன்னை அழைப்பது மிகவும் இன்பமாக இருக்கிறது) நான் சொல்லப்போகின்ற கருத்தை எண்ணி நீ துன்பமடையாதே(1) நீ உன்னுடைய காதலைப் பற்றிச்சொல்லும்போது தூய்மையானது உயர்தரமானது என்றெல்லாம் எப்பொழுதும் பேசுகின்றாய். உன்காதல் உயர்தரமானது என்று நீ பேசுவது எப்படி இருக்கிறது என்றால் என்னுடைய மூக்கும் கண்களும் மிகவும் நன்றாக இருக்கின்றன என்று சொல்வதைப் போன்றிருக்கிறது. நீ கூறுவதை மற்றவர்களின் தீர்மானத்திற்கு விட்டுப் பார்க்க வேண்டும். நம்மிடமேயன்று (2) கராபோவிட்ஸ்கியின் வாழ்க்கைத் திட்டத்திற்கு உன்னுடைய மிகச் சிறந்த திருத்தம் டுலாவுக்குப் போவதும் சிற்றூரில் சென்று வாழ்வதும்என்கிறாய். அதுமுறையல்ல கடவுள் அனுமதிக்கமாட்டார். சென்றதற்கு முந்தின கடிதத்தில் நான் உனக்கு எழுதியது போல் வேலை செய்வதற்கும் ஓய்வு பெறுவதற்கும்தான் அது ஏற்ற இடமாக இருக்கும். வேறெதற்குமில்லை. ஆனால் நீ சிற்றூர் வாழ்க்கையில் நிலைத்து நிற்க மாட்டாய். டுலாவிலுள்ள உன்னுடைய சகாக்களின் தொடர்பு உன்னை அந்த மாகாணத்திற்கே நடத்திச்செல்லும். அது மிகவும் ஆபத்தானது. கராபோ

விட்ஸ்கிகள் இருவரும் அந்த மாகாணத்தவராவார்கள். அதனுல் அவர்கள் ஒருவரை யொருவர் மறைமுகமாகவே வெறுத்துக் கொள்கிருர்கள். நான் அந்த மாதிரி யெல்லாம் பார்த்திருக் கிறேன். என்னுடைய அத்தை இந்த மாகாணத்தவளாக இருக் கின்ற முக்கிய காரணத்திற்காகவே நான் கூட அவளே மறை முகமாக வெறுக்கின்றேன். இல்லே. என்னுடைய நல்ல நண் பன் கராபோவிட்ஸ்கியைப்போல் ரஷ்யா முழுவதிலும் ஒன்று மிக உயர்ந்த தோழர்களேத்தான் பார்க்க முடியும் அல்லது யாரை யுமே பார்க்க முடியாது. உதாரணமாக மிக உயர்ந்தவர்கள் என் பதற்கு ஜாரின் செல்வாக்கையும் ஆதரவையும் பெற்றவர்கள் என்பதன்று பொருள். முதிர்ந்த சிந்தனு சக்தியும் கல்வியறிவும் பெற்றவர்கள் என்ற பொருளில்தான் சொல்கிறேன். அவர்கள் ஐந்தாவது மாடியில் தங்கள் அறையை வைத்துக்கொள்வார்கள். ஆனுல் ரஷ்யாவிலேயே மிகவும் குறிப்பிடத்தக்க மனிதர்கள் எல் லாம் அங்கே வருகிருர்கள். இந்தக் கணக்கில் அவ்வூரிலுள்ள நமது உறவினர்களிடத்திலும் மற்ற தொடர்புடையவர்களிடத் திலும் நாம் முரட்டுத்தனமாக நடந்துகொள்ளலாம் என்பதைக் கடவுள் அனுமதிக்க மாட்டார். ஆனுல் அவர்களிடம்ருந்து நாம் தூரத்திலேயே இருக்க வேண்டும். அவர்கள் நமக்கு வேண்டிய தில்லே. நான் ஏற்கனவே கூறியிருப்பது போல் பயனமற்ற மக்களோடு உறவு கொண்டாடுவது எப்பொழுதும் தவருகும். (3) ஹா...! உனக்கு விருப்பம் உண்டு என்று நினைத்துத் தவறு செய்து விட்டாய். அதாவது ஒருவேளே உனக்கு விருப்பமிருக் கலாம். ஆனுல் உன்னிடத்தில் தந்திரமில்லே. உதாரணமாக நவ நாகரிகமான ஒருவித உடை, நீலவான நிறமுள்ள ஒருவிதத் தொப்பி வெள்ளேப் பூக்களுடன் நன்ருகத்தானிருக்கிறது. ஆனுல் இது ஆங்கிலேயர்களின் வண்டியில் பூட்டப்பட்ட நல்ல குதிரை களுக்குப்பின்னேயிருந்து ஓட்டிச்சென்று கண்ணுடிகள் நிறைந் துள்ள ஒரு மண்டபத்தில் நுழைகின்ற ஒரு பெண்ணுக்குத் தான் பொருத்தமானதாக இருக்கும். ஆனுல் சாதாரணமாக இருக்கின்ற நான்காவது மாடி அறைக்கும் நல்ல தோற்ற முள்ள கோச்சு வண்டிக்கும் அப்படிப்பட்ட தொப்பி ஆபாசமா னது-சிற்றூரிலுள்ள் கோச்சு வண்டிக்கோ அதைவிட மோசம்

சில பெண்கள் 'மேடம். சச்சர் பசாவ்' போன்றிருக்கிருர்கள், அவளைவிட மோசமாகவுமிருக்கிருர்கள். இப்படிப்பட்ட அழகிலும், ஒளிமிக்க நிறங்களிலும், மிகவும் கஷ்டப்பட்டுக் கூந்தலைச் சுருட்டி விடுவதிலும், வழக்கமில்லாத நாகரிகத்திலும், 'ஏர் மைன்' என்ற விலங்கின் தோலினுல் செய்த மேல் கோட்டிலும் கருஞ்சிவப்பான மேல் ஆடைகளிலும் இன்னும் மற்றவைகளிலும் எப்பொழுதும் உன்னை அவர்கள் வைத்துக் காண வருவார்கள். அவர்கள் உன்னை அடிக்கடி சுற்றிவருவார்கள். முடிவில் நீயும் அவர்களைப் போலவே ஆகிவிடுவாய். பெரிய நகரங்களில் கொஞ்ச நாட்கள் தங்கும் இளம் அழகிகளும், நடுத்தர வயது அழகிகளும் எப்பொழுதும் இதே தவற்றைத்தான் செய்கின்றனர். வேறுவிதமான அழகும் பாதுகாப்பும் உண்டு. வழக்கத்திலில்லாத அணிகலன்களைப் பூட்டிக்கொள்வது பற்றித்தான் பயப்படுகிறேன். ஆனுல், பூட்ஸ், காலர், கையுறைகள், நகங்களைச் சுத்தமாக வைத்திருப்பது, கூந்தலை முடிவது ஆகிய இப்படிப்பட்ட செயல்களில் அவர்கள் மிகவும் கவனமாக இருப்பார்கள். அதைப் பொறுத்தவரையில் எனக்கு நம்பிக்கை உண்டு நல்ல பொருள்களை விரும்பும் ஒவ்வொரு மனிதரின் முக்கிய வேலைகளினின்றும் மிகவும் அதிகமான காலத்தை எடுத்துக் கொள்ளாமலிருந்தால் மட்டும் அது காதலுக்கு உதவியாகும் என்று நினைக்க வேண்டாம். இளம் அழகியிடத்தில் முட்டாள் தனமிருந்தாலும் கவர்ச்சி பொருந்திய தோற்றத்திற்காகத் துடிக்கும்துடிப்பு இருக்கிறதே அதனைஒருவாறு மன்னிக்கலாம். ஆனுல் உன்னுடைய அழகிய இளம் முகத்திற்கு மேலும் கவர்ச்சி செய்ய வேண்டுமா? அந்தவிதமான தவற்றைச் செய்வது மன்னிக்க முடியாதுதான். உடையணிந்து கொள்ளும் விதத்தைப் பற்றி இன்னின்னவாறு நடந்து கொள்ள வேண்டும் என்று நான் உனக்கு எழுதவேண்டுமா?

இது நாகரிக வியாபாரம்!!! கடவுளே!......ஆனுல், நீ டுலாவிலுள்ள இசைக் கல்லூரிக்குச் சென்று இசை பயிலவேண்டுமென்று கனவு காண்டாய். அது காரியமில்லை. உனது கடிதங்களில் கூறிய காதலோடும், வியக்கத்தக்க உண்மைகளோடும்

குறைந்த அளவுள்ள ஒப்பனைகளோடும் பார்த்தால் இது நல்லதுதான். கடவுளுடைய அன்புக்காக, உன்னுடைய சிறந்த உண்மை என்னுடைய விமர்சனங்களைக் கெடுத்துவிடாமலிருக்கட்டும்.

வந்தனம், அன்பே! அன்பே! என் அன்பே! ஆயிரம் அன்பே! உனக்குக் கோபமோ என்னவோ எனக்குத் தெரியாது ஏதோ எழுதிவிட்டேன்.

உன்னுடைய,
கவுண்ட் லியோ டால்ஸ்டாய்.

கடிதம் 9

28—11—1886'
பீட்டர்ஸ்பர்க்.

உறுதியளிப்பிற்குப் பிறகு எழுதிய உன்னுடைய கடிதம் நேற்று கிடைக்கப் பெற்றேன். இன்று மற்றொரு கடிதமும் வந்து சேர்ந்தது. கடிதங்கள் நன்றாக இல்லாததாலா? எனக்குத் தெரியவில்லை. ஏனென்றால் கடிதம் எழுதும் முறையை நான் மாற்றத் தொடங்கியிருக்கிறேன். முந்திய கடிதத்தில் உன் இசை ஆசிரியன் மார்டையரைப் பற்றிக் குறிப்பிட்டிருந்தாய்—முன்னைய கடிதங்களைப் போல் இக் கடிதம் மகிழ்ச்சியான கருத்தை உண்டாக்கவில்லை.

இதை நீ அவ்வளவு முக்கியமாகக் கவனித்தது பற்றி நான் மிகவும் மகிழ்ச்சியடைகிறேன். அதற்காக என் நன்றியை உனக்குத் தெரிவித்துக் கொள்கிறேன். ஒன்று மட்டும் தவறு. அதிகமாக உணர்ந்து கொள்வதற்காக ஒருத்தி குறைவாகப் பேச வேண்டும். அந்த நம்பிக்கையில் நீ அதிகத்தூரம் இழுத்துச் செல்லப்பட மாட்டாய். ஆனால் ஒவ்வொன்றும் அடியோடு மாறி விடும். இது உறுதியடைவதால் உன்னுடைய பழைய உறுதிகளை யெல்லாம் கூட நீ உடைத்து விடுவாய். வாழ்க்கையிலும் ஆத்ம சுத்தியிலும் இது பெரிய உதவியாக இருக்கும். ஆனால் நீ நினைக்கின்ற வழியிலன்று. உதாரணமாக, உறுதியளிப்பிற்குப் பிறகு 'உத்யோகத்தையும், உழைப்பையும் (உன்னுடைய கடிதத்திலிருந்து நான் குறிப்பிடுகிறேன்)நானே

கவனிப்பேன்' என்று கூறிய சொல் இருக்கின்றதே அது மிக மிக நன்று, ஆனால் மார்டையரின் சங்கதி மார்டையரின் சங்கதியாகவே இருக்கின்றது. நான் காண்பது போல், முதல் தவறு, காலத்தைச் சோம்பேறித்தனமாகக் கழித்ததுதான். நேற்று நான் தோழி துர்கானிவ் வீட்டுக்குச் சென்றிருந்தேன். அங்கு நான் கேட்ட பித்தோவனின் இசை இன்னும் என் காதுகளில் ஒலித்துக் கொண்டிருக்கின்றது—அது இன்பமாக இருக்கின்றது! உன்னோடு ஒத்திட்டுப் பாராமல் ஒரு பெண்ணைக்கூட நான் பார்க்க முடிவதில்லை. இந்தப்பெண் ஒவ்வொரு வழியிலும் சிறந்தவளாகவே இருக்கின்றாள். ஆனால் அவளை நான் சாதாரணமாக விரும்பவில்லை; என்றாலும் அவள் நேர்மையாக இருக்க வேண்டும். பீட்டர்ஸ்பர்க்கில், அவள் ஏழு மணிக்குத் தூங்கி எழுந்திருக்கின்றாள் என்றும் இரண்டு மணி வரையிலும் விளையாடுகின்றாள் என்றும், மாலை நேரங்களில் படிக்கின்றாள் என்றும் அவனுடைய அத்தையிடமிருந்து அறிந்தேன் என்பதை நீ அறிவாய். உன்னைவிடத் திறமையில் குறைந்தவள் தான் அவள் என்றாலும், உண்மையில் இசையில் மாபெரும் முன்னேற்றமடைந்திருக்கின்றாள். மற்றொரு தவறு, மிகப் பெரிய தவறு என்னவென்றால் டூலாவுக்கும் சுடாகோவோவுக்கும் வரும்படி மார்டையரை நீ அழைத்தது தான்! உனக்கும் சனிசக்காவுக்கும் நான் சொல்லியது என்னவென்றால், அவனைப் பார்த்து, அவனோடு உனக்குள்ள உறவை முறித்துக் கொள்ள வேண்டுமென்பதுதான்! ஆனால் என் மீது நீ நம்பிக்கை கொள்ள மாட்டாய். நான் பொறுமைப் படுகின்றேன் என்று நினைக்காதே. ஆனால், சமாதானமாகவே உன்னை என்னுடைய இடத்தில் வைத்து என்னுடைய கண்களைக் கொண்டு பார். திருமதி டெம்பிட்ஸ்கி 'பாசி-பாசி' மீது காதல் கொண்டிருந்தாள். சனிசக்காவிடம் அவளே இதைக் கூறினாள். வியப்படையாதே. அதில் ஒன்றும் தவறு கிடையாது. அது சிறந்தாகவும் கூட இருக்கிறது. திருமதி டெம்பிட்ஸ்கி திருப்தியடைந்ததைப் போல் 'பாசி—பாசி' உணர்ச்சிக்கு அடிமைப்பட்டே அவளோடு காதல் கொண்டான். அவர்களுடைய உறவினர்கள் பிரிந்து சென்றனர். ஆனாலும் காதல் மட்டும் நின்று

விடவில்லே. வலீரியா! என்னைப் புரிந்து கொள். 'பாசி-பாசி' யிடத்தில் இப்பொழுது நீ எந்தவிதமான உணர்ச்சியும் கொள்ள வில்லே என்பதையறிய நான் முழுத்திருப்தி கொண்டிருக்கி றேன். ஆனுல் நீ இதை அவனுக்குத் தெளிவு படுத்தவில்லே. அவனிடத்தில் நல்லெண்ணம் கொண்டிருக்கின்ருய் என்ற நிலேயில் தான் அவன் உன்னை விட்டுச் சென்றிருக்கிருன். அந் தப்பகுதியை நினைத்துப் பார்த்தாயா? இந்தத் தொழிலின் கஷ்ட மான அப்பகுதியை ஏற்கனவே அவன் முடித்து விட்டான். வேருெருவனிடத்தில் நீ காதல் கொண்டால் என்ன ஆகும் என்பதைப்பற்றி 'பியானே' வருகில் நாம் என்ன பேசினேம் என்பதை நினைவு படுத்திப்பார். இது இயாலாதது என்று நீ சொன்னுய். ஏனென்ருல் காதல் ஆபத்தானதாக மாறுவதற்கு முன் இதைச் செய்வது அவசியமாக இருப்பதால் நெருங்கித் தொடர்பு கொள்ளவோ உணர்ச்சியைத் திருப்பிக்கொள்ளவோ உன்னையே நீ அனுமதிக்க வில்லே. இதுதான் உண்மை. ஆனுல், நீ இன்னும் புரிந்து கொள்ள வில்லேயா? பல மனிதர் களைக் காதலிக்கும் துணிவு பெற்ற பெண்ணுக நீ இருக்கிருய் என்ற உண்மையையோ அல்லது அவனே நீ காதலித்தாய் என்று அவன் நினைக்கும் படியான நிலேயையோ நீயும் மார்டை யரும் அடைந்தீர்கள். ஆகையினுல் தொடர்பற்ற உன் உற வினர்களைப் பற்றிய கற்பனைகள் மிக்க உன்னுடைய பிரிவும் வறண்ட கடிதமும் கராபோவிட்ஸ்கியைத் தெளிவாக இருக்கச் செய்ய முடியாது. உண்மையில் உன்னுடைய உறவினர்கள் தான் மார்டையரோடு சேர்ந்து கொண்டு கராபோவிட்ஸ்கியைத் தொந்தரவு செய்கிறவர்கள். அருமை 'இஸ்லவினு'க்காக, உன்னுடைய காதலேப்பற்றி உன்னேடு பேசி அவள் ஏன் இன் பமும் மகிழ்ச்சியும் அடைய வேண்டும்? மறுபடியும் ஏன்? அவன், திருமதி டெம்பிட்ஸ்கியின் கணவனுக இருந்தால் (அவசியமானுல்) திருமதி கராபோவிட்ஸ்கியை இஸ்லவினேடு இரண்டாண்டுகளுக்கு அமைதியான சுற்றுப்பயணம் செய்ய வெளி நாட்டுக்கனுப்புவானு? இப்படிச் செய்வானு? ஆனுல் மார்டையர் சங்கதி வேருனது. தன்னை அவள் காதலிப்பதாக திருமதி. டெம்பிட்ஸ்கி திருப்தியடைந்திருந்தாள். ஆனுல்

அவன்! அவளைவிட அதிக நாட்கள் உலகத்தில் வாழ்ந்த கரா போவிட்ஸ்கி அறிவான்—உயர்ந்த காதல் என்ன என்பதை— இது அழகிய இளம் பெண்ணின் கைகளை முத்தமிட விரும்பு வதைப் போன்றதா? நீ புரிந்து கொள்ள முடிகிறதா? வெர்தர் மூலமும், திருமதி. டெம்பிட்ஸ்கிக்கு உதவி செய்ய நினைக்காத தன் மூலமும் இந்த உண்மை வெளியாகிறது. இசையிலும் உபயோக முள்ளவனுகவே அவன் இருந்திருப்பான். அவன் தன்னுடைய முட்டாள் தனமான தற்பெருமைகளின் மூலம் அவளது மனத்தைக் குழப்பி விட்டான். அவளுக்குத் துன்ப மொன்றும் செய்யவில்லை. தானே இயங்கக் கூடியதிலிருந்து வேகமான முறையில் பிடிவாதத்திற்கு மாறக்கூடிய ஒரு வகைக் காதலாக இது இருக்கிறது. நானும் ஒரு மனிதன் தான். நவம்பர் 28-ந் தேதி முழுவதையும் நான் அறிவேன்! என் மனைவியிடத்தில் அப்படிப்பட்ட காதல் நடை பெறுவதை என்னுல் தடுக்க முடியாது. ஆனுல் அவளுக்கும் அவனுக்கும் இடையே பொதுவானது ஒன்று மில்லாத போது அதில் எந்த வித ஆபத்தும் கிடையாது. ஆனுல் அவர்கள் காதல் பாதை யில் ஒருவரை நோக்கி ஒருவர் அரைவழித் தூரமாவது சென்ற பொழுதுதான் அது ஆபத்தானதாகும். (இந்த முறையில் தான் அது ஆபத்தானது) மார்டையர் என்னுடைய மனை விக்குக் காதல் கடிதம் எழுதியிருந்தாலோ அல்லது அவன் அவளுடைய கைகளை முத்தமிட்டிருந்தாலோ அதை என்னிட மிருந்து மறைத்தால்தான் (இப்பொழுது யார் அதைத் தடுக் கிருர்?) அது ஆபத்தானதாகும் — இந்த வெட்கக் கேட் டிலும் நான், என் மனைவியைக் காதலிப்பதாக இருக்க முடியுமா? நான் என்னையே சுட்டுத் தற்கொலை செய்து கொள்ள வேண்டியதுதான். இல்லை என்ருல் உடனே நான் திருமண ரத்து செய்துவிட்டு, அவளுக்காக என்னுடைய மரி யாதையைக் காப்பாற்றிக் கொள்ளவும் என்னுடைய பெயரைக் காப்பாற்றிக்கொள்ளவும், எதிர்காலத்தைப் பற்றி என்னுடைய கனவுகளிலும் ஏமாற்றமடைந்து உலகத்தை விட்டே பறந்து ஓடிவிட வேண்டியதுதான். இவை வெறும் சொற்ருெடரல்ல. ஆண்டவன் மீது உறுதியளித்துச் சொல்கிறேன்—நான் அதை

அறிவேன். அதனுல் தான் திருமணத்தைப் பற்றி நான் அப்படிப் பயப்படுகின்றேன். ஏனென்ருல் அதை நான் மிகவும் முக்கியமாகவும் கண்டிப்பாகவும் கருதுகிறேன். அவர்கள் எப்பொழுது திருமணம் செய்து கொள்வார்கள் என்று நினைக்கின்ற மக்களிருக்கிருர்கள். "நல்லது, நான் இன்பம் காணத் தவறிவிட்டேன். என் முன் என்னுடைய வாழ்க்கையிருக்கிறது..........." இந்த எண்ணம் எனக்குத் தோன்ற வில்லை. ஒரே அடியில் ஒவ்வொன்றையும் நான் அடைய முடியும். பூரண இன்பம் நான் காண வில்லையானுல் என்னுடைய இதயம், திறமை ஆகிய அனைத்தையும் நான் சிதைத்து விடுவேன். நான் குடிகாரனுவேன், சூதாட்டக்காரனுவேன், என்னுடைய தொண்டையை அறுத்துக் கொள்ள எனக்குத் தைரியமில்லையானுல் நான் திருடனுவேன். நான் கூறுவது வேடிக்கையாக இருக்கிறதா? உனக்கு இதெல்லாம் சிறு நகைச்சுவை, இன்ப உணர்ச்சி, உயர்ந்தது, மேன்மையானது இன்னும் பலபல. உயர்ந்ததென்றும் அழகான தென்றெல்லாம் சொல்லுகிற பொருள்களை நான் காதலிக்க மாட்டேன். நல்ல பொருளையும் உண்மையையுமே காதலிக்கிறேன். அமைதியான ஒரு இடத்திலிருந்து இதைப் பற்றிச் சிந்தனை செய்து பார்த்து நீயும் மார்டையரும், ஆசிரியரும்—மாணவியுமாக உறவு கொள்வதை நான் விரும்பினேனு, இல்லையா என்பதை (சனிசக்காவிடம்) அறிவுறுத்தும்படி கேட்டுப்பார். ஒருவேளை. இது கஷ்டமானதாக இருக்கலாம். ஆனுல், இது உதவியாகாது. மறுபடியும் சொல்கிறேன்—கடிதங்களில், அவனுக்குப்பயந்து கொண்டு (உறுதியளிக்கத் தயாராகிக் கொண்டிருந்த போது இதை நீ உணர வில்லையா?) அவனிடம் பொய் கூறுவது உன்னுடைய மதிப்பிற்கே குறைவானதாகும். அவனுடைய மனைவி அவனுடைய உணர்ச்சிக் கூற்ருல் திடீரென்று மனங்குழம்பிப்போய் மார்டையரிடமிருந்து பறந்தோடி விடுவது கராபோவிட்ஸ்கிக்கு மிகவும் நன்மையாக இருக்கும். கராபோவிட்ஸ்கி கொள்கையுள்ளவன்—அதன்படியே நடப்பவன்—பகைவர்கள் இல்லை. அவனைச் சந்திப்பதால் துன்ப மடையக்கூடிய மனிதன் உலக முழுவதிலும் ஒருவன் கூட இருக்க முடியாது. அவனைக் காதலிக்

கின்ற நீ மான பங்கத்திலும், அருவருப்பிலும் அவனை நிறுத்தப் பார்க்கின்றாய். என் மன நிலையில் நீ இருக்க முயல்வாய். உனக்கு நல்ல உள்ளம் உண்டு. இன்னும் என்னைக் காதலிக்கிறாய். பிறகு எப்படி இதைப் புரிந்து கொள்ள முடியாமலிருக்கிறாய்? பொறுமை கொள்வது மார்டையரின் மதிப்பைக் குறைப்பதா? எல்லா போதனைகளும் முடிவடைந்து விட்டன என்று நினைக்கிறாய். இல்லை, எல்லாவற்றையும் கடைசி வரையில் சொல்லிவிடு. இது எவ்வளவு அதிகமான ஆசையைக் கொடுத்தது என்று நீ அறிந்திருந்தாலும் உண்மையை என்னிடம்கூற மூன்று நாளைக்குள் தீர்மானிக்க மாட்டாய். அப்படிச் செய்வதற்கு நீயே ஆசை கொண்டது போல் கடைசியில் நீ அதைக் கூறத்தான் வேண்டும். ஆனால், நிச்சயமாக, இது சிறிது தோழமையுள்ள நிலை ஆகும். ஆனால் மேன்மைமிக்க காதலன். நான் அதைச் சொல்வது நகைச் சுவைக்காக வன்று. எனக்கு ஆச்சரியத்தைத் தருகின்ற தலையணை தைக்கின்ற தொழிலை என் மனைவி செய்கின்றவளாக இருந்தாலும் இதைப் போன்ற சிறு விஷயத்தையும் எனக்குத் தெரியாமல் செய்கிறவளாக இருந்தால், அடுத்த நாளே அவளை விட்டு உலகத்திலிருந்தே ஓடிவிட வேண்டியதுதான். நாங்களிருவரும் ஒருவருக்கொருவர் புதியவர்களாகிவிட வேண்டும். நான் அதற்கு வழிகோல முடியாது. நான் அவ்விதமிருக்கிறேன். அதை நான் மறைக்கவும் மாட்டேன். அதிகப் படுத்தவும் மாட்டேன். நன்றாகச் சிந்தித்துப் பார். உள்ளத்தைத் திறந்து நல்லதோ கெட்டதோ சொல்லாத மனிதனை நீ காதலிக்க முடியுமா? என்னுடைய உள்ளத்திற்கும் உன்னுடைய உள்ளத்திற்கும் இது அவ்வளவு அருகிலுள்ளமையால் நீ தயங்குகின்றாய். என்னை நம்பு. உன்னிடம் நான் போலியாக நடிக்க மாட்டேன். உன்னை விட்டுப் பிரிந்த நாளிலிருந்து உனக்கு நான் சொல்ல வேண்டியது ஒன்றுமில்லை. உனக்கு எது நல்லதோ அதைத்தான் நான் சொல்லுவேன், சொல்லவும் கூடும். உன்னோடு எனக்குள்ள உறவு முறையை நான் முதன்மையாகக் காதலிக்கிறேன். ஏனென்றால் நன்மையை நோக்கிச் செல்வதுதான் எனக்கு மிகவும் உதவியளிக்கிறது. பாதிரிகளைப் பற்றி என்னிடம் கேட்

டாய். நெடு நாட்களுக்கு முன்பே உனக்கு நான் சொல்ல வேண்டுமென்றிருந்ததை நினைவுபடுத்துகிறது. நம்முடைய எதிர்கால உறவினர்கள் எப்படியிருந்தாலும் மதத்தைப்பற்றியும் அது சம்பந்தமான மற்ற விஷயங்களைப் பற்றியும் நாம் பேசாம லிருப்பது நல்லது. நான் கடவுள் நம்பிக்கையுள்ளவன் என் பதை அறிவாய். ஆனல், உன்னுடைய நம்பிக்கை என்னு டைய நம்பிக்கையினின்றும் வேறுபட்டிருப்பது நன்ருகத் தெரிகிறது. ஒருவரையொருவர் காதலிக்கும் இருவர், குறிப் பாக-இந்தக் கேள்வியைத் தொட்டுப் பார்ப்பதே கிடையாது. உன்னைப் பார்க்க மிகவும் ஆசையாக இருக்கிறேன். குறிப்பாக பெண்களுக்கு மதம் ஒரு சிறந்த பொருள். உனக்கும் அப்ப டித்தான். உன்னிடமே அதை வைத்துக் கொள். அதைப்பற்றி வெளியில் பேசாதே. தீவிரமாக அதில் மூழ்கிவிடாமல் அதனு டைய அறிவுரைகளை மட்டும் அறிந்துகொள். மேலும் மேலும் உழைப்பாயாக. உழைப்பதற்கே உன்னைப் பழக்கிக் கொள், வாழ்க்கை இன்பத்தின் முதல் நிலையே இதுதான். வந்தனம், என் அருமைப் பெண்ணே! என்னுடைய ஆற்றல் முழுவதும் கொண்டு உனது கையை அழுத்துகிறேன். உன்னுடைய கடைசிக் கடிதங்களை நான் பெறுவதற்கு முன் நம்முடைய முந் திய கடிதங்கள் நம்மைப் பரிசோதிப்பதற்குப் பதிலாக, பாடுவ தில் நம்மை இருத்திவைத்துப் பணி புரிந்திருக்கின்றன என்று நினைத்தேன். நல்லது, இந்தக் கடிதம் அப்படியன்று என்று தோன்றுகிறது. இந்த நாட்களில், ஒரே நாளில் இருக்கின்ற ஒரு வேலையை முடித்துக் கொண்டு சங்கத்தில் சேரப் போகின் றேன். வந்தனம், எனது காதல் கனியே!

உன்னுடைய,

கவுண்ட். லியோ டால்ஸ்டாய்.

டிசம்பர் மாதத்தின் தொடக்கத்தில் டால்ஸ்டாய் மாஸ்கோ வுக்குத் திரும்பி விட்டார். புத்தாண்டுப் பிறப்பு வரையிலும் அவர் அங்கேயே தங்கியிருந்தார். குளிர் காலத்துக்காக அவள் பீட்டர்ஸ்பர்க்கிலிருந்தபோது டால்ஸ்டாய் அவளுக்கு எழுதிய கடிதம் இது. கீழே தொடருகின்ற கடிதங்களில் இது

மிகவும் குறிப்பிடத்தக்கதாகும். வழக்கமான நையாண்டியோடு டால்ஸ்டாய் இதையும் எழுதியிருக்கிருர். இக்கடிதத்தைக் கண்டு டால்ஸ்டாய் மீது வலீரியா கோபமும் ஆத்திரமும் கொண்டாள்.

கடிதம் 10

மாஸ்கோ,
6—12—1856.

அருமை வலீரியா வலாடி மிரோனு, உன் நினைவிற்கு நான் மிகவும் நன்றியுள்ளவனுக இருக்கிறேன். அதைக் கொஞ்சங்கூட நான் எதிர்பார்க்காமலிருந்தாலும் உன்னுடைய கடிதம் எனக்குப் பெரிய இன்பத்தைக் கொடுத்தது. நீ விரும்பியது போல் வாழ்க்கையை அனுபவிக்கவில்லை என்பதும் மகிழ்ச்சியாக இல்லை என்பதும் உண்மையாக எனக்குத் தோன்றவில்லை. உனக்கு இன்னும் என்ன வேண்டும்? பீட்டர்ஸ்பர்க்கில் சுதந்திர வாழ்க்கையை நீ கனவு கண்டாய். இளமை, அழகு, சுதந்திர நிலை, உன்னுடைய சகா வர்கானிசெக்கா மற்றும் படாடோபம் ஆகியவைகளைப் பற்றிக் கனவு காண்பதற்கு மனிதன் பெற்றுள்ள உரிமையெல்லாம் உனக்குண்டு. தாழ்ந்த உணர்ச்சியோடு காதலிக்கும்படி 'டி' ஒன்றே ஒன்று உன்னைக் கேட்கிருன். உனது அடிமையாக இருக்க அவனை நீ அனுமதிக்கலாம். உனது தீர்மானம் மட்டுந்தான் தேவை. இந்த விதமான வசதிகளெல்லாமிருந்தும் நீ இருக்கின்ற இடத்தில் இன்பமாக இருக்க முடியவில்லை என்ருல், உன்னுடைய வாழ்க்கையை நல்ல முறையில் அமைத்துக் கொள்ள முயற்சி செய்ய வேண்டும். தூரமான இடத்திற்குச் சென்று திருமணம் செய்து கொள், மடம் ஒன்று பார்த்து நுழைந்து கொள். அல்லது சிற்றூரில் தலைமறைவாக இருந்து கொள். ஆனுல் இதைச் செய்ய ஒரு நிமிஷங் கூடத் தயங்காதே. இது மிகவும் வருத்தப்படக் கூடியதும், புண்படக் கூடியதுமாகும். உனக்குப் புத்திமதி கூறும் எனது பழைய வழக்கத்திற்கு அறியாமலேயே நான் சென்றுவிட்டேன். மன்னிக்கவேண்டும்.

இசை வெள்ளத்தில் மிகவும் மூழ்கிப் போயிருக்கின்ருய் என்பதைக் கேட்க நான் மிகவும் மகிழ்ச்சியடைகின்றேன். கலை யானது எப்பொழுதும் எந்த இடத்திலும் மிகவும் தூய்மை யான இன்பமாக இருக்கிறது. இசை—உன்னுடைய கலை ஆகியவற்றில் நீ வெற்றியடைய வேண்டும். நான் இந்தநேர மெல்லாம் மாஸ்கோவிலிருந்தேன். நான், என்னுடைய இலக் கியப் பணியில் ஈடுபட்டிருந்தேன். என் குடும்ப விவகாரத்தை யும் கொஞ்சம் கவனித்தேன். வெளி நண்பர்களோடு சிறிது கலந்து கொள்கிறேன். அறிஞர்களோடு சிறிது தொடர்பு கொண்டுள்ளேன். வாழ்க்கை அப்படித்தானிருக்கிறது. மிகமிக நன்ருகவுமில்லை. மிகமிகத் துன்பமாகவுமில்லை, என்ருலும் நன் ருக இருக்கிறது. எனக்குத் தெரிந்த வரையில் அது சூன்யம் என்று நான் சொல்ல முடியாது. மாருக, இன்பதுன்பம் இரண் டும் வாழ்க்கையில் தொடர்ந்து தோன்றுகின்றன.

என்னுடைய சகோதரர்கள் நேற்றுக்கு முந்தின நாள் வந்தார்கள். நாங்கள் சேர்ந்தே வாழ்கிறோம். மஸன்காவுக்குப் பல்வலி பிடித்துக் கொண்டது. பீட்ஸ்பர்க் வர நான் விரும்ப வில்லை. ஆனுல் புது ஆண்டின்போது அங்கிருப்பேன். அப் பொழுது, உனக்கு நான் இப்பொழுது எழுதவேண்டுமென்று விரும்பியதைப் பற்றியெல்லாம் நேரில் விவாதிப்போம். நமது அடுத்த சந்திப்பு வரையில் உனக்கு என் வந்தனம். உன்னு டைய சகாவான வர்சனி செக்காவின் மென்மையான கையை எனது இதயத்திலிருந்து பிசைகின்றேன்.

உன்னுடைய,
லியோ. என். டால்ஸ்டாய்.

டால்ஸ்டாய் இக் கடிதத்தில் வலீரியாவைக் கேலி செய்திருப் பது பற்றி அவள் கோபம் கொண்டாள். இதற்குப்பதிலாக வசைச் சொற்களைக் கொண்டு டால்ஸ்டாயைத் தாக்கி ஒரு கடிதம் வரைந்தாள். வலீரியாவின் அந்தக் கடிதத்துக்கு டால்ஸ்டாய் அளித்த பதில்தான் வரும் கடிதம். இதில் அவர் தேதிகூடப் போடவில்லை.

கடிதம் 11

அருமை வலீரியா,

முந்திய அஞ்சலில் உனக்கு ஒரு புத்தகமனுப்பினேன். அந்த அழகிய எழுத்தோவியத்தைப்படி. எப்படி வாழவேண்டு மென்பதை அது உபதேசிக்கிறது. காதலின் மீதும் வாழ்க்கை யின் மீதும் கொண்டுள்ள பல்வேறுபட்ட கருத்துக்களை நீ காண்பாய். அவைகளில் ஒன்றைக் கூட நீ ஏற்றுக்கொள்ள மாட்டாய். ஆனால் எல்லாவற்றிற்கும் மேலாக ஒருவனுடைய அபிப்பிராயமே அறிவுடமையாகவும், தெளிவாகவும் கருதப்படு கிறது. நான் மறுபடியும் கூறுகிறேன். ஆனால், என்ன செய் தாக வேண்டும்? அதனுடன் யாரோ ஒருத்தியைக் காதலிக்கும் நான் அவளோடுள்ள எனது உறவுகளைப் புரிந்து கொள்ள முடியவில்லை. அப்பொழுதும் உபதேசித்தாய். இப்பொழுதும் நீ உபதேசிக்கிறாய். நீ தெளிவாகக் காணப் படும்போது நான் மகிழ்ச்சியடைகிறேன். கோளின் நுனிபோன்ற கையை முத்த மிடுவதில் இன்பம் அடைபட்டுக் கிடக்கவில்லை. (அதை உச்ச ரிப்பதே கூட அருவருப்பாக இருக்கிறது.) ஆனால், ஒரு ஆத் மாவுக்காகமற்றொருஆத்மாவிரிவடைந்துகதவுதிறக்கவேண்டும். —இன்பம் அதில்தானிருக்கிறது, இன்பம் ஒருவருடைய சிந் தனைகளை மற்றொருவருடைய சிந்தனைகள் பரிசோதிப்பதிலி ருக்கிறது. அது இருவருடைய ஆத்மாவும் ஒன்று சேர்ந்து ஒன்றையே நினைப்பதில் தோன்றுகிறது. ஒன்று சேர்ந்து உணருவதில் இன்பம் மிதப் பொலிவு பெறுகிறது.

உன்னுடைய,
கவுண்ட் லியோ டால்ஸ்டாய்.

கடிதம் 12

12-12-1856,
மாஸ்கோ.

அருமைப் பெண்ணே!

உனது கடைசிக் கடிதம் கிடைக்கப் பெற்று இன்றோடு இரண்டு நாட்கள் கடந்து விட்டன. அதற்குப் பதிலளிப்பதா,

வேண்டாமா? அதற்கு எப்படிப் பதிலளிப்பது என்று இது நேரவரையிலும் தயங்கிக் கொண்டிருந்தேன். நோய் அடைவது குணமடைவதைப் போலவும்; நான் முன் இருந்தது போலவே மறுபடியும் உண்மையாக இருக்க முடியும். யோசித்துப் பார்த்ததில், உண்மையில் என்னுடைய கடிதம் கரடு முரடாகவும் மோசமாகவும் இருந்தது என்பதை ஒப்புக் கொள்கிறேன். அதை நீ பெற்றபோது துன்பப் பட்டிருப்பாய், வருந்தியிருப்பாய், என்றாலும் அதை நான் இல்லை என்று மறுக்கவில்லை. அது பொறாமைத் துடிப்பால் அன்று. ஆனால் சிற்சில சமயங்களில் ஒரு சிலரிடம் காணப்படும் உணர்ச்சி வேகத்தால் விளையும் கோபமான தீர்ப்பாகும்.

உன் கடிதத்தைப் பற்றி இப்படியாக நான் எண்ணங் கொண்டேன். இருவருக்கும் இன்பம் பயக்கும் காதலை நீ செய்யவேயில்லை. ஏனென்றால் நாம் இருவரும் ஒருவரிடமி ருந்து ஒருவர் மிகவும் தொலைவிலிருக்கின்றோம். அல்லது என்னைக் காதலிப்பதாக நீ பாசாங்கு செய்திருக்கின்றாய். உன் னுடைய நையாண்டித் தனத்தால் எனக்கு உணர்ச்சியளிக்கும் படி, சனிசக்கா தன்னுடைய செல்வாக்கைப் பயன் படுத்தி உனக்குச் சொல்லியிருக்க வேண்டும். இங்கு எனக்கு இப்படித் தான் தோன்றுகிறது....................இந்தச் சிறு தந்திரங் கள் என்னிடமிருந்து மறைந்து போய் விடவில்லை. ஆனால் எதிர்ப்புகள் தான் ....

என்னை நீ காதலித்திராவிட்டால் மிகவும் நன்றாக இருந் திருக்கும் என்று முன்பு உனக்கு எழுதினதிலெல்லாங் கூட, உண்மையையே நான் சொல்லியிருக்கிறேன் என்று இப் பொழுது எனக்குத் தோன்றுகிறது. மறுபடியும், முன்னமே நான் அதை உணர்ந்திருந்தாலும் குறிப்பாக உன்னுடைய கடைசிக் கடிதம் உண்மையை வெளியாக்கியது. நீ என்மீது கோபம் கொண்டாய், ஏனென்றால் நான், வெறும் சொற்பொ ழிவுகள் தான் ஆற்றக் கூடியவனாக இருக்கின்றேன். நல்லது, இங்கு கவனி. என்னுடைய எதிர்காலத் திட்டங்களைப் பற்றி எழுதுகிறேன். நன்மை செய்வதன் மூலம் புரிந்து கொண்ட

உண்மைகளால், ஒருவன் எப்படி வாழமுடியும் என்ற என்னுடைய கருத்துக்களை எழுதுகின்றேன். இவைகள் தான் எனக்கு மிகவும் அருமையாக இருக்கின்ற சிந்தனைகளும் உணர்ச்சிகளுமாகும். என்னுடைய கண்களில் நிறைந்த கண்ணீருடன் அவைகளை நான் எழுதுகிறேன். [என்னை நம்பு] உனக்கு இது சொற்பொழிவாகவும் துன்பமாகவுமிருக்கிறது. அப்பொழுது, பொதுவாக நம்மிடையே என்னதானிருக்கிறது? மனிதன் தன்னுடைய காதலை, அவனுடைய அறிவு விருத்திக் கோணத்திலிருந்து உணர்த்துகின்ருன். ஒலென்காவுக்குக்கணவனுக வரப்போகின்றவன், ஒருவரையொருவர் எப்படிக் காதலிப்பார்கள் என்பதைக் கூறியே தன்னுடைய காதலை அவளுக்கு உணர்த்துகிருன், உயர்ந்த காதல் என்று பேசுவதன் மூலம் நீ உன்னுடைய காதலை உணர்த்துகின்ருய். என்னைப் பொறுத்த வரையில் என்னை நீ கொல்வதாக இருந்தாலும் இப்படி அருத்தமில்லாமல் என்னுல் பேச முடியாது. ஒன்றை மட்டும் நீ நம்பு. என்னுடைய எல்லா உறவினர்களைக் காட்டிலும் நான் உண்மையானவன். என்னுல் எவ்வளவு கூடுமோ அவ்வளவு தோழமை உன்னேடு கொண்டுள்ளேன். நான் சந்தித்த எல்லாப் பெண்களிலும் நீதான் சிறந்தவள் என்று உண்மையாகவே நான் நினைத்தேன். அவள் விரும்பியிருந்தால் அவளோடு நான் இன்பமாக இருந்திருக்க முடியும். நான் அறிந்து கொண்ட அளவு அவளை இன்பமடையச் செய்திருப்பேன். நான் குறை கூறப் பட்டேன். அதற்கு ஒரு காரணமுண்டு. அதற்காக உன்னுடைய மன்னிப்பை வேண்டுகிறேன். அதாவது, நீ என்னைப் புரிந்து கொள்ள விருப்பம் கொண்டிருக்கின்ருயா என்பதை முடிவு காண்பதற்கு முன்பே, எப்படியோ சுதந்திரமில்லாமல் உன்னேடு விபரங்கள் பேசுவதற்கு இறங்கிவிட்டேன். அவையெல்லாம் அவசியமில்லை. ஒரு வேளை. அடிக்கடி உனக்கு நான் துன்பமிழைத்திருக்கலாம். இது குறித்து மிகமிக அதிகமாக நான் குறை கூறப்படலாம். ஆனுல் என்னை மன்னிக்க முயற்சி செய். நாம் நல்ல நண்பர்களாகவே இருப்போம். காதலும் கல்யாணமும் நமக்குத் துன்பத்தைத்தான் கொண்டுவரும். ஆனுல் நட்பு

நம்மிருவருக்கும் பயனுள்ளது என்று உணருகிறேன். இதனை நீ எப்படி உணருகிருய்என்று எனக்குத் தெரியவில்லை. ஆனுல், அதனுடைய வரம்புகளுக்குள்ளேயே வைத்துக் கொள்ளும்சக்தி என்னிடம் இருப்பதாகவே உணருகிறேன், அதனுடன் எல்லா வற்றிற்கும் மேலாக நான் அதைக் காதலித்தாலும், குடும்ப வாழ்க்கைக்காக நான் பிறக்கவில்லை என்று தோன்றுகிறது. மாறக்கூடிய தன்மையுள்ள என் சந்தேக புத்தியை நீ அறிவாய். அதில் திருத்திக் கொள்ளக் கூடியது ஏதாவது இருக்குமாஞல் அதைக் கடவுள் அறிவார். ஒருவேளை, சக்தி வாய்ந்த காதலை நான் உணரவில்லையா? அதில் எனக்கு நம்பிக்கை கிடையாது. நான் அறிந்திருக்கும் எத்தனையோ பெண்களில் உன்னைத்தான் காதலித்தேன்—உன்னைத்தான் எல்லாவற்றிற்கும் மேலாகக் காதலித்தேன். ஆனுல் எல்லாம் இப்படி ஆய் விட்டனவே! வந்தனம். அருமை வலீரியா, ஜனவரி மாதத்தில்தான் உன்னைப் பார்க்க (முடிவாக) நான் வரக்கூடும்.

உன்னுடைய,
கவுண்ட். லியோ டால்ஸ்டாய்.

இதற்குப் பிறகு மூன்று வாரங்களுக்கு வேறுகடிதப்போக்குவரத்து இருந்து வந்தது. டால்ஸ்டாய் இப்பொழுது பீட்டர்ஸ் பர்க்கில் வாழ்க்கையை அமைத்துக் கொண்டார். அங்கு தங்கியிருந்தபோது நீண்ட கடிதமொன்று வலீரியாவிடமிருந்து அவருக்குக் கிடைத்தது. அதற்கு அவர் பின்வருமறு பதிலளித்தார்.

கடிதம் 13

1—1—1857
பீட்டர்ஸ் பர்க்.

அருமை வலீரியா,

கடைசியாக எழுதிய உனது நீண்ட கடிதத்திற்கு நான் மிகவும் நன்றியுடையவனுக இருக்கிறேன். சினந்து உனக்கு எழுதிய என் கடிதங்களுக்கு, நானே என் மீது கூறிக்கொண்ட வசைமாரிகள் நல்ல பாடத்தையும் அமைதியையும் எனக்கு

அளித்தன. நான் அதிகத் துன்பமும் அருவருப்புமடைந்தேன். எல்லாவற்றையும் விட உன்னைப் பற்றித்தான் அதிகமான வெறுப்பு. நான் என்னுடைய எண்ணத்திற்கு மாறாக அப்படிப் புரட்சிகரமாக ஏன் இருந்தேன் என்பதை நேரில் உன்னைப் பார்க்கும் போது முற்றும் விளக்கமாகச் சொல்லுவேன்.

இன்றைக்குப் புத்தாண்டு பிறந்திருக்கிறது. உனக்கு எழுதும் இக்கடிதத்தோடு அந்தப் புத்தாண்டைத் தொடங்கு கிறேன் என்பதை நினைக்க நான் மிகவும் மகிழ்ச்சியடைகிறேன். கடந்தவைகளைவிட மிகுதியான இன்பத்தை இந்தப் புத்தாண்டு கொண்டு வரும். பொதுவாகச் சொல்லப் போனால், உன்னு டைய இன்பத்திற்குத் தேவையான அவ்வளவு இன்பத்தையும் நீ அடைவாய். வெளிநாட்டுக்கான அனுமதிச் சீட்டைப்பற்றிய கவலையாலும், பரிசோதனையினால் ஏற்பட்ட திடீர்த் தொல்லை களாலும் 'சேவ்ரி மின்னிக்'கை விட்டு வெளிவந்து விடுமுறைக் காக இங்கு விடப்பட் டிருக்கிறேன். என்றாலும் இன்னும் இரண்டு வாரத்தில் உன்னைப் பார்க்க நம்பிக்கை கொண்டுள் ளேன். ஆனால் உன்னைப் பார்க்க இயலாமலும் போய்விட லாம். நான் மௌனமாக இருந்த காலத்தை எப்படிக் கழித் தேன் என்பதைச் சொல்லட்டுமா? சலிப்பாகவும், வருத்தமாக வும் பெரும்பகுதியைக் கழித்தேன். ஏன் என்று எனக்கே தெரியவில்லை. தனிமை எனக்குத் துன்பம் தருவதாக இருக் கிறது. வேறு மனிதர்களிடம் செல்வதும் முடியாதது. கெட்ட வனாக இருப்பவன் நான்தான். மற்றவர்களைப் போலிருக்கப் பழக்கப்பட்டேன். மறுபடியும் இந்தக் காலம் முழுவதும் நான் ஒன்றும் செய்யவில்லை. அது என்னை வருத்துகின்றது. இசை யின் பெரிய கலையறிவைக் கண்டேன்—புத்தாண்டுப் பிறப்பின் போதுதான். அது, உலகத்திலேயே மிகச் சிறந்த அழகிய பீத் தோவனின் இசையைப் போன்றிருந்தது. அப்போது உன்னைப் பற்றி நான் நினைத்தேன். இதைக் கேட்க உனக்கு எப்படி யிருக்கிறது. கடைகளெல்லாம் திறந்தவுடன் நல்ல பொருள் களின் பட்டியலை நாளைக்கு உனக்கு அனுப்பி வைக்கிறேன்.

உன்னுடைய,
லியோ டால்ஸ்டாய்.

இதற்குப் பதிலளித்த வலீரியா, இனித் தனக்குக் கடிதமே எழுத வேண்டாமென்று எழுதிவிட்டாள். ஆனால், டால்ஸ்டாய் அதற்குக் கீழ்க் கண்ட கடிதம் எழுதினார்.

கடிதம் 14

14—1—1857,
பீட்டஸ்பர்க்.

அருமை வலீரியா வலாடிமிரோனா,

எனக்கும் உனக்குமே நான் குற்றவாளியாக இருக்கிறேன். முற்றிலும் குற்றவாளிதான். அதில் சந்தேகமே கிடையாது. ஆனால், நான் என்ன செய்ய முடியும்? உனது சிறிய கடிதத்துக்கு நான் என்ன பதில் எழுதினேன்? அதற்குக் கடிதமே எழுத வேண்டாமென்று பதிலளித்து விட்டாய். நான் அதில் எழுதியிருந்தது முற்றிலும் சரி. அதைவிட அதிகமாக நான் சொல்ல முடியாது. உன்னிடம் நான் கொண்டுள்ள மதிப்பு மாறிவிட வில்லை. உன்னிடம் தோழமை கொண்டுள்ள வழியில் உன்னோடு நான் கொண்டுள்ள காதலைத் துறந்து விட வில்லை என்று உணருகிறேன். உலகத்தில் எல்லாவற்றையும் விட மேன்மையாக இருக்கும் உன்னுடைய தோழமையின் மதிப்பை நான் இழக்கவே மாட்டேன். உன்னைவிட வேறு எந்தப் பெண்ணாலும் என் உள்ளத்தை எப்பொழுதும் தொட்டுப் பார்க்கவே முடிந்ததில்லை. இப்பொழுதும் தொட முடியாது. ஆனால், உன்னுடைய இரக்கமுள்ள இருதயம் எனக்குக் கொடுக்கத் தயாராக இருக்கும் உணர்ச்சியைத் திருப்பித் தர என்னால் இயலவில்லை என்றால் நான் என்ன செய்யட்டும்? என் மனமும் குணமும் என்னவோ ஒரு நிலையில் இல்லை என்பது உண்மைதான். நாம் பிரிந்து இரண்டு மாதங்கள் ஆகின்றன. புதிய ஆசைகளோடு கூடிய ஒரு வாழ்க்கையும், அதற்கான நடவடிக்கைகளும், குடும்ப வாழ்க்கைக்கு ஏற்றுக் கொள்ள முடியாத கடமைகளும் அதை அடியோடு ருசுப்படுத்தி விட்டன. நான் தவறாக உன்னிடம் நடித்தேன். நீ என்னை முட்டாளாக்கிவிட்டாய். ஆனால், இப்பொழுது உன்னை நான் பார்ப்பேனானால் மறுபடியும் உன் மீது காதல் கொள்வேன்

என்னுடைய போக்கு இன்னும் மோசமடைந்து விடும். ஒரு வார்த்தைகூட அவநம்பிக்கை யில்லாது இப்பொழுது நான் எழுதிக் கொண்டிருக்கின்ற ஒவ்வொரு கடிதத்திலும் நல்ல நம்பிக்கை கொள்கின்ற அளவு என்னிடம் மதிப்புக் கொண்டுள்ளாய் என்று நினைக்கிறேன். அதன்படி பார்க்கின்றபோது, என் காதலைச் சிறிதும் புறக்கணிக்க மாட்டாய் என நினைக்கிறேன். அண்மையில் நான் பாரிஸுக்குச் செல்லலாம் என்றிருக்கிறேன். மீண்டும் ரஷ்யாவுக்குத் திரும்புவேன் — எப்பொழுது? அது எனக்குத் தெரியாது. அதைக் கூறுவதும் அவசியமற்றது. எனக்குச் சில வரிகளாவது நீ எழுதினால்தான் நான் இன்பமாகவும் அமைதியாகவும் இருப்பேன். என்னுடைய முகவரி, 'ரு டி' ரிவோலி, 206, பாரிஸ்.........எழுதமாட்டாயா?

வந்தனம், வலீரியா — உன்னுடைய நட்புக்கு ஓராயிரம் நன்றி செலுத்துகிறேன். அந்த நட்பானது உனக்குக் கொடுத்திருக்கும் துன்பத்துக்காக மன்னிப்புக் கேட்டுக் கொள்கிறேன். கடவுளிடம் கொண்டுள்ள அன்புக்காகவாவது மேடம். வர்கானியை எனக்குச் சில வரிகள் எழுதச் சொல்லிக் கேட்கவும். அவள் என்னைத் திட்டினாலும் பரவாயில்லை. ஒரு வேளை, உனக்கு இது வெறும் வார்த்தையாகத் தோன்றலாம். ஆண்டவன் மீது ஆணையிட்டுச் சொல்கிறேன். இனிமையை எனக்கு ஊட்ட முடியுமென்று உறுதியாக நம்புகிறேன். என்னுடைய உள்ளம் போகின்றபடி பார்த்தால் நான் நல்ல மனிதனே. ஆனால், உன்னுடைய விரல் நகத்தின் மதிப்புக்கூடப் பொருதவன். உனக்குத் துன்பந்தான் நான் செய்ய முடியும்! என்னால் உனக்கு மேலும் மேலும் தொல்லைதான்.

வந்தனம், எனதருமை வலீரியா என் முன்னிருப்பது போலவே உன் முன்னும் பெரியதும் மிகச் சிறந்ததுமான பாதை யொன்றிருக்கிறது. அப்பாதையில் இன்பத்தை நோக்கி நீ நடத்திச் செல்லப்படுவாய். அதற்கு நீ ஆயிர மடங்கு தகுதியுடையவள்.

அன்புள்ள,
கவுண்ட். லியோ டால்ஸ்டாய்.

இதற்குப் பிறகு டால்ஸ்டாய் தூரதேசம் சென்றுவிட்டார். கீழே தரப்படுகின்ற கடிதந்தான் வலீரியாவுக்கு அவர் கடைசியாக எழுதியது.

கடிதம் 15

பிப்ரவரி 20, மார்ச்சு 4, 1857,
பாரிஸ்.

அருமை வலீரியா,

இன்று உன்னிடமிருந்து கிடைத்த கடிதம் என்னை மிகவும் இன்பத்தில் ஆழ்த்தியது. என்னை ஒரு வகையான அயோக்கியன் என்ருே, போக்கிரி என்ருே நீ நினைக்கவில்லை என்பதை அது உண்மையாக்கிவிட்டது. ஆனல் மிகவும் நெருங்கிய உறவுகளோடு தீவிரமாக இறங்கிய ஒரு மனிதன் என்றே கருதினுய். இன்னமும் அவனேடு நட்பும் மதிப்பும் கொண்டுள்ளாய். நீ என்னிடத்தில் போட்ட கேள்விக்கு நான் என்ன பதிலளிக்கப் போகிறேன்! ஏனென்ருல் என்னிடம் நீ காணும் மாறுதலுக்குக் காரணமே கிடையாது. என்ன விதமான உணர்ச்சி உன்னிடம் கொண்டிருந்தேன் என்பது எனக்குத் தெரியாது என்று அடிக்கடி உன்னிடம் கூறி வந்திருக்கிறேன். அங்கு ஏதோ தவறு இருக்கிறது என்று எனக்கு எப்பொழுதும் தோன்றிக் கொண்டிருந்தது. ஒரு சமயம் நான் சிற்றூரை விட்டுச் சென்றபோது, என்னுடைய தனிமை, உன்னேடு நான் தொடர்ந்து நடத்திய சந்திப்புகள், குறிப்பாக உன் அழகிய பொன்னுன தோற்றம், குணம் ஆகியவைகள் என்னைத் தாக்கி வருத்தின. அந்தத் தாக்குதல்களின் காரணமாகவே உன் மீது எனக்குக் காதல் உண்டு என்பதை நம்புவதற்குத் துணிந்தேன். எனினும் அது சரியான பொருளாக இல்லை. என எனது இதயத்தினுள்ளே ஏதோ ஒன்று கூறுகிறது. உன்னிடமிருந்து அதை நான் மறைக்கவில்லை. நான் பீட்டர்ஸ்பர்க்குச் சென்றதற்குக் கூட இதுதான் காரணமாக இருந்தது, பீட்டர்ஸ்பர்க்கில் நான் தனித்தே வாழ்க்கை நடத்தினேன். ஆனுலும், உன் மீதுள்ள காதலை மிக வலிமையாகவே உணர்ந்தேன். இதில் நான் தவறு செய்தவனுக இருப்பது நம்மிருவருக்குமே துன்பமாக இருக்கும். அதுதான்முழுக்

கதையாக இருக்கிறது, வெளிப்படையாக இருப்பதும் பொருத்தமில்லை உன்னைக் கவர்ச்சி பண்ணுமல் என்னையே நான் பரிசோதனை செய்து பார்த்திருக்க வேண்டும். ஆனால் இதில்நான் அனுபவமற்ற விலை கொடுத்துவிட்டேன். அதற்கு நான் வருந்துகிறேன், உன்னுடைய மன்னிப்பை வேண்டுகிறேன்.

இது உதவியளிக்காது. நாம் பிரமித்துப்போனோம். ஆனால் நாம் நண்பர்களாகவே இருப்போம். என் பாகத்தைப்பொறுத்தவரையில் நல்லெண்ணத்தோடு அதை வரவேற்கிறேன். உன் சம்பந்தப்பட்ட எல்லாச் சங்கதிகளுமே எனக்கு இன்பமாக இருக்கின்றன. வர்கனி செக்கா, தன்னுடைய கடிதத்தில் மிகவும் நல்ல பெண்ணைப்போல் நடந்து கொண்டாள், அவள், என்னிடம் அந்தத் தொடர்பை அறுத்துக் கொள்ளமாட்டாள் ஆனால் அவள் நடிக்க விரும்புவதைப் போல் என்னிடம் தர்க்கமாக நடிக்கவில்லை. ஆனால், உணர்ச்சியோடு நடித்தாள்.

நான் பாரிஸில் இரண்டு வாரங்கள் தங்கியிருந்தேன். மகிழ்ச்சியாக இருந்தேன் என்று சொல்ல முடியாது. ஆனால் பாரிஸ் வாழ்க்கை அளவுக்குமேல் ருசிகரமாக இருந்தது,

கூடிய விரைவில் இத்தாலிக்குப் போகநினைக்கிறேன்.

உன்னுடைய அருமை சுடாகோவ் ஜமீனில் நீ எப்படியிருக்கின்றாய்? இசையிலும், படிப்பிலும் மூழ்கியிருக்கின்றாயா? அல்லது சுவையற்ற வாழ்க்கையைக் காணுகிறாயா? இந்த விதமான தளர்ச்சி நீ கொள்ளவே கூடாது.

பீத்தோவன் என்ற பிரெஞ்சுக் கலைஞன் கடவுளைப் போன்றிருந்தான் என்பது எனக்குப் பெரிய வியப்பாக இருந்தது. உலகிலேயே மிகச் சிறந்த கலைஞனால் இயக்கப்பட்ட இந்த இசையை அனுபவிப்பதில் நான் எவ்வளவு மகிழ்ச்சியடைந்தேன் தெரியுமா? நீ கற்பனை செய்து பார்.

என் அண்டை வீட்டுக்காரியே, உனக்கு வந்தனம் என் இதயத்திலிருந்து உன்னுடைய மென்மையான அழகியகையைத் தடவிப் பார்க்கின்றேன்.

உண்மையை வழிபட்டு நிற்கும் உன்னுடைய,
கவுண்ட். லியோ டால்ஸ்டாய்.